janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2021 டிசம்பர் 12 - 18 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 36




பாசிச சர்வாதிகாரம் நோக்கி!

மாண்பார்ந்த மக்களாட்சி முறைமையை போர்ப்படைத் தளபதிகள் பலியிடுவது இல்லை. ஆனால், அந்த முறைமை >>>

ப 16



தமிழ் இந்து எங்கே போகிறது?

தமிழ் தேசிய பேரியக்கத் தலைவர் திரு.பெ.மணியரசன் அவர்கள் தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி இருக்கிறார்.>>>


ப 08



கிரிப்டோ கரன்சி?

நம் கையில் இருக்கும் ரொக்கப் பணத்தைப் போன்றது அல்ல கிரிப்டோ கரன்சி. இது டிஜிட்டல் வடிவத்தைக் கொண்டது. விருச்சுவல் >>>

ப 03



## விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் - முதலமைச்சர் சந்திப்பு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நா.பெரியசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, திருத்துறைப்பூண்டி ஒன்றியக் குழுத் தலைவர் அ.பாஸ்கர் மற்றும் சி.ஹெச்.வெங்கடாசலம் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தொடர்பான கோரிக்கைகளை நேரில் கொடுத்து வலியுறுத்தினர்.**



கோரிக்கைகளை கவனமுடன் கேட்டறிந்த முதலமைச்சர் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு, நிறைவேற்றுவதாக உறுதியளித்தார்.

**விவசாயிகள் சம்மந்தமான கோரிக்கைகள்:**

காப்பீட்டுத் தொகை விடுபட்ட விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.

சென்ற ஆண்டு இயற்கை பேரிடர் காரணமாக கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. அப்போதைய அஇஅதிமுக அரசு நெல்பயிர் பாதிப்புக்கு மிகக் குறைவான நிவாரண தொகை வழங்கி விட்டு, காப்பீட்டுத் திட்டத்தில் கூடுதலான நிதி கிடைக்கும் என கைவிரித்து விட்டது. ஆனால் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீடு பெறும் விவசாயிகள் பெயர் வெளியான போது பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான கிராமங்களும், ஆயிரக்கணக்கான விவசாயிகளும் விடுபட்டுப் போயுள்ளனர். மேலும் விவசாயிகளுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் அனுமதித்துள்ள இழப்பீட்டுத் தொகையும் மிக, மிகக் குறைவானதாகும்.

பாதிப்புகளை முறையாக கணக்கீடு செய்யாமலும், ஆவணப்படுத்தாமலும் முந்தைய அரசும், காப்பீட்டு நிறுவனங்களும் சேர்ந்து விவசாயிகளை வஞ்சித்து விட்டனர். இது தொடர்பாக தாங்கள் தலையிட்டு காப்பீட்டுத் திட்டத்தில் விடுபட்டுப் போன ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் தொகை கிடைக்கச் செய்ய வேண்டும்.

**பயிர் நிவாரணத் தொகைகளை உயர்த்தி வழங்க வேண்டும்**

இந்த இயற்கை பேரிடர் காலத்தின் ஆரம்ப நிலையில் இருந்தே தாங்களும் அமைச்சர்களும், துறை அலுவலர்களும் முனைப்பாக களப்பணியில் ஈடுபட்டது விவசாயிகளுக்கு பெரும் ஆதரவாக அமைந்தது. பாதிப்புகளை மதிப்பீடு செய்து நெல் பயிர் பாதிப்புகளுக்கு ஏக்கருக்கு ரூ.8000/வீதம் ரொக்கப்பண உதவியும், தாளடி சம்பா பயிர் சாகுபடி பாதிப்புக்கு ஹெக்டருக்கு ரூ.6038/வீதம் இடுபொருள் மானியமும் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் என்றாலும் இழப்பீட்டை ஈடுசெய்ய இயலாது.

குறிப்பாக தாளடி பயிர் நடவுமுடிந்த ஒரு வார காலத்தில் மழை பெய்ததால் பயிர் வேர்கள் அழுகி விட்டன. இனி மறுசாகுபடி செய்வது என்பது இயலாது. ஆனால் மதிப்பீடு செய்த வர்கள் தேங்கிய தண்ணீரை வடித்து, உரங்கள் தருவதன் மூலம் மீண்டும் பயிர் முளைத்து வரும் எனக் கணக்கிட்டுள்ளனர். இது முற்றிலும் தவறான கணக்கு என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

ஆய்வுக்குப் பின்னும் மழை தீவிரமாக பொழிந்து பாதிப்பின் தன்மையை அளவை அதிகமாக்கியுள்ளது. இதனை தாங்கள் பரிசீலித்து கீழ்கண்ட முறையில் நிவாரணம் வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. நெற்பயிர் விளைந்து, கதிர்கள் முற்றி அறுவடை நடந்து கொண்டிருந்த நேரத்தில் தொடர் மழை பெய்ய தொடங்கியது. இதனால் விளைந்த நெல்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியதால் அழுகிப்போனவைகள் இதுபோன்ற பாதிப்புகளுக்கு ஏக்கருக்கு ரூ.30,000/ம் இழப்பீடு வழங்க வேண்டும்.

2. தாளடி சம்பா பயிர் நடவு பெய்த நிலையில் பெய்த மழையால் வேர்கள் அழுகி சேதம் அடைந்த விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.30,000/ இழப்பீடு வழங்க வேண்டும்.

3. மானாவாரி மேட்டு நிலச் சாகுபடியில், பூக்கள் உள்ளிட்ட தோட்டக் கலைப் பயிர் களும், வேர்க்கடலை உள்ளிட்ட பருப்பு வகை களும், வெங்காயம், தக்காளி, உளுந்து, மரவள்ளிக் கிழங்கு, பருத்தி, நெற்பயிர்களும் பாதிக்கப் பட்டுள்ளன.

4. ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளும் உயிர்பலியாகியுள்ளன. கோமாரி நோய் பாதிப்பால் தொடர் மரணங்களும் ஏற்பட்டு வருகின்றன. இது தொடர்பாக பரிசீலித்து உயிரிழந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்கி உதவ வேண்டும்.

**உரங்கள் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க செய்ய வேண்டும்**

கனமழை குறைந்து வருவதால் எஞ்சிய பயிர்களை காப்பாற்றவும், புதிய பயிர் சாகுபடிகளுக்கும் உரங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் கூட்டுறவு சங்கங்களில் உரங்கள் இருப்பு இல்லை என தெரிவிக்கிறார்கள். தனியார் உர வியாபார முகவர்கள் விவசாயிகளுக்கு தேவையான உரங்களை தர மறுத்து, அவர்களது கையிருப்பில் உள்ள, விவசாயிகளுக்கு அவசியமல்லாத உரங்களையும் சேர்த்து வாங்க வேண்டும் என நிபந்தனை விதித்து, நிர்பந்திக்கிறார்கள். இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பாக தங்கள் தலையிட்டு கூட்டுறவு நிறுவனங்களில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் அனைத்தும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டும்.

**விவசாயத் தொழிலாளர்கள் சம்மந்தமான கோரிக்கைகள்**

உயர்மட்ட ஆய்வுக்குழு அமைக்க வேண்டும்

தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோடிக்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர் வாழ்க்கை நிலை

தொடர்ச்சி 15ம் பக்கம் >>

## தமிழ்நாடு கட்டட கட்டுமானத் தொழிலாளர்களின் மாநில கோரிக்கை மாநாடு

# கோரிக்கைகளை நிறைவேற்ற அமைச்சர் சி.வி.கணேசன் உறுதி






விரிவான செய்தி அடுத்த இதழில் >>




# பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும்! – 12

## பேரன்புமிக்க தோழர்களே!

**கடந்த 11 கடிதங்களிலும் பல்வேறு அரசியல் மற்றும் அமைப்பு நிலை பணிகள் குறித்து விவாதித்தோம்.**

மேலும் நாம் விவாதிக்கப்பட வேண்டியவை நிறைய உள்ளன.

அனைத்தையும் ஒன்று விடாமல் நாம் விவாதித்துக் கொண்டிருப்பது மட்டுமே நம்முடைய வேலைகள் அல்ல.

விவாதிக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவது நமது முழு முதற் கடமையாகும்.

நாம் பத்து கிலோமீட்டர் தூரம் நடந்தால் தான் நாம் அடையவேண்டிய இடத்தை நாம் அடைந்திட முடியும்.

ஓர் அடி எடுத்து வைத்து அடுத்தடுத்த அடிகளை நகர்த்துவதன் மூலம் பத்து கிலோமீட்டரில் ஒன்று குறைந்து ஒன்பது, பின் எட்டு, ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்று இறுதியாக அடைய வேண்டிய இலக்கை நாம் எட்ட முடியும்.

ஓர் அடி கூட எடுத்து வைக்காமல், இடது காலும், வலது காலும் மாறிமாறி முன் நோக்கி செல்லாமல் அடேயப்பா பத்து கிலோ மீட்டர் தூரம் என்று பயந்து, அஞ்சி, மலைத்து நின்றால், இருந்த இடத்திலேயே நாம் இருக்க வேண்டியதுதான்.

அதனைப்போன்றே நமது அமைப்பில் உள்ள பலவீனங்களை உணர்ந்து ஒவ்வொன்றாக தீர்ப்பதன் மூலம் முழுமையான தீர்வு காண இயலும்.

நம் தோழர்கள் அமைப்பு நிலை அறிக்கைகளில் சொல்லப்பட்ட பலவீனங்கள் திரும்ப, திரும்ப ஒவ்வொரு மாநாட்டு அறிக்கையிலும் இடம் பெறுகின்றது என்று கூறுகின்றார்கள்.

ஆம் தோழர்களே உண்மைதான். பலவீனங்களை மாநாட்டு அறிக்கையில் ஒளிவு மறைவின்றி பகிரங்கமாக தெரிவித்து, இவை போக்கப்பட வேண்டும் என்று அறிக்கை தெளிவாகக் கூறுகின்றது. அவ்வாறு கூறுவதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் அவை களையப்பட உரிய முயற்சிகளை நாம் மேற்கொள்ளாத காரணத்தால் அடுத்தடுத்த மாநாட்டிலும் சென்ற மாநாட்டில் கூறப்பட்ட பலவீனங்களை திரும்பத் திரும்ப கூறிட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

படிக்கும் மாணவன் முழு ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் அடுத்த வகுப்பிற்கு செல்கிறார்; புதிய பாடத்தைப் படிக்கின்றார்; புதிய ஆசிரியரை பார்க்கின்றார்; புதிய வகுப்பறைக்கும் செல்கின்றார்.

கவனக்குறைவால், அலட்சியத்தால், சோம்பேறித்தனத்தால் அவர் தேர்வாகவில்லை எனில் சென்ற ஆண்டு படித்திட்ட பாடத்தை திரும்பப் படிக்கின்றார். சென்ற ஆண்டு பாடம் நடத்திட்ட ஆசிரியரைத்தான் இப்போதும் காண்கின்றார். சென்ற ஆண்டில் உள்ள வகுப்பறையில் மீண்டும் அமர்ந்திட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றார்.

அதுபோன்றே நமது அமைப்பில் இத்தகைய தொடர் பலவீனங்களைப் போக்க நமக்கு கிடைத்த அரியதொரு வாய்ப்பு தான் பாசறை (மாநாடு).

பலவீனங்களை போக்கி பலமுள்ள அமைப்பை உருவாக்க, பலப்படுத்திட மக்கள் கட்சியாக மாற்றி அமைக்க திட்டமிடக் கிடைத்துள்ள வாய்ப்பாக நாம் மாநாடுகளை பயன்படுத்திட வேண்டும்.

தோழர்களே நமது அமைப்பை பலப்படுத்திட, நமது கட்சியைப் பலப்படுத்திட வேண்டுமெனில் நமது வர்க்க, வெகுஜன அமைப்புகளைப் பலப்படுத்துவதன் மூலமே சாத்தியம் என்ற பேருண்மையை நாம் உணர்ந்து உணர்வுபூர்வமாக நிறைவேற்றிடல் வேண்டும். அதற்குரிய வாய்ப்பாக நாம் மாநாட்டை பயன்படுத்தி கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பொறுப்புக்கள் அளித்திடல் வேண்டும்.

வர்க்க, வெகுஜன அமைப்புகளுக்கு மட்டுமின்றி நமது இயக்கத்தின் போர்வாளாய் திகழும் ஜனசக்தி வார இதழை கிளைகள் தோறும் கொண்டு செல்லவேண்டும்.

தோழர்களே, நம்மை அறிந்தோர் சிலர்; அறியாதோர் பலர் – நாம் யார்? யாருக்காக நாம் இயக்கம் நடத்தி வருகின்றோம் – நமது நண்பன் யார்? எதிரி யார்? என்று நம்மை குறித்து அறியாமலேயே நம்மை எதிர்ப்போர் உண்டு. நம்மை முழுமையாக தெரிந்தவர்களும் நம்மை எதிர்ப்பது உண்டு!

வர்க்க ரீதியாக நம்மை எதிர்ப்பவர்களைக் கண்டு அஞ்சிடத் தேவையில்லை– அவர்கள் நம்மை ஆதரித்தால்தான் ஆச்சரியம்!




**நாள்தோறும் விநாயகர் கோவில் அருகில் ரயில்வே தொழிலாளர்கள் கூடுவார்கள். அங்கே ஒரு தோழர் நின்றபடி ஜனசக்தி ஏட்டை குரல் உயர்த்தி படிப்பார். தொழிலாளர்கள் கேட்டு தங்களின் அரசியல் ஞானத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். இவ்வாறாக நாள் தவறாமல் நடத்திட்ட காரணத்தால் அக்கோவில் ஸ்ரீ ஜனசக்தி வலம்புரி விநாயகர் ஆலயம் என்று அழைக்கப்பட்டது - இன்றும் அப்பெயர் நிலைத்து நிற்கின்றது.**

நம்மை ஆதரிக்க வேண்டியவர்கள்; நேசிக்க வேண்டியவர்கள், நம்முடன் சேர்ந்து இணைந்து கரம் கோர்க்க வேண்டியவர்கள், இணைந்து இரண்டறக் கலந்து உறவாடி, உரையாடி களத்தில் ஒன்றாக நிற்க வேண்டியவர்கள் விலகி நிற்கின்றார்களே ஏன்? அவர்கள் நம்மை உணர்ந்திருந்தால், அறிந்திருந்தால் அவ்வாறு செய்திட மாட்டார்கள்–இணைந்தே நிற்பார்கள்–

அவர்களை நம்முடன் இணைத்திட நமக்கு பெரும் பேருதவியாக விளங்கி வருவது ஜனசக்தி.

முதலில் நாம் ஜனசக்தி படிக்க வேண்டும். தினசரி ஏடுகள் பல வண்ணங்களில், அதிக பக்கங்களுடன் பற்பல வருகின்றன. அவைகளை நாம் படிக்கின்றோம்; படிக்கவேண்டும்.

நாம் தினசரி ஏடுகளை படிப்பதற்கும், நமது பேராயுதமான ஜனசக்தியை படிப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு.

அவை என்ன வேறுபாடு என்பதனை நாம் நன்கு உணர வேண்டும்.

நாம் படிக்கும் தினசரி ஏடுகளுக்கு கொள்கைகள் உண்டு என்பதனை நாம் மறந்திடலாகாது.

நாளேடுகளை நடத்துகின்றவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல – அவர்களும் முதலாளிகள்தான்.

காலங் காலத்திற்கும் முதலாளித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் மிக உறுதியான கொள்கை உடையவர்கள். எக்காரணத்தைக் கொண்டும் கம்யூனிஸ்ட்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து விடக்கூடாது என்பதில் உறுதி காட்டி வருபவர்கள்.

நமது நாடு விடுதலை பெற்ற பின்னர் 1952ல் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்படாமல் இருந்த சென்னை மாகாணத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டது. நமது அணியை ஆதரித்து தந்தை பெரியார் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். ஐக்கிய முன்னணி மகத்தான வெற்றி பெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி வாகை சூடியது. ஆட்சி அமையப் போகின்றது என்று வாக்களித்த மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு வெற்றியைக் கொண்டாட ஆயத்தமாகினர்.

தினமணி நாளேட்டின் முதலாளி கோயங்காவும், ஆசிரியர் சிவராமனும் ராஜாஜி இல்லம் நோக்கி சென்றனர், சென்றது மட்டுமல்ல இருவரும் சாஷ்டாங்கமாக ராஜாஜி காலில் விழுந்து வணங்கி நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்திலிருந்து காக்க நீங்கள்தான் துணைபுரிய வேண்டும்,

முதலமைச்சராக பொறுப்பேற்க நீங்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்று கூறி, அவரின் சம்மதத்தைப் பெற்று, ஐக்கிய முன்னணியை உடைத்து, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியமைக்காமல் தடுத்து, ராஜாஜி தலைமையில் ஆட்சி அமைத்தனர் என்பது வரலாறு.

பத்திரிகை முதலாளியின், ஆசிரியரின் எண்ணம் எவ்வாறு இருந்தது என்பதனை நாம் அறியமுடிகின்றது.

இவை மட்டுமல்ல தோழர்களே, நாளேடுகள் செய்திகளை வெளியிடுகின்றன. செய்திகளுக்குப் பின்னால் ஒளிந்துள்ள அரசியல் என்ன என்பதனை அது வெளியிடுவது இல்லை; அதன் வேலையும் அதுவல்ல–

முதலாளித்துவக் கட்சிகளின் தலைவர்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகளை அல்லது அவர்கள் வெளியிடும் அறிக்கைகளை முழுப்பக்க செய்தியாக படத்துடன் வெளியிடுவதை நாள் தோறும் பார்ப்பீர்கள்; படிப்பீர்கள்.

நமது கட்சியின் தேசியக்குழு சார்பில், மாநிலக் குழு சார்பில் அன்றாடம் வெளியிடும் அறிக்கைகளை வெளியிட மாட்டார்கள். அப்படி வெளியிட நேரிட்டால் நாளேட்டின் எங்கோ ஒரு மூலையில் வேண்டா வெறுப்பாக வெளியிடுவார்கள்– ஏன் இவ்வாறு செய்கின்றார்கள்? அறியாமலா இல்லை– அறிந்தேதான் செய்கின்றார்கள். நமது கட்சியின் கருத்து மக்களிடத்தில் சென்று விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார்கள்.

மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து தேசம் தழுவிய, மாநிலம் தழுவிய போராட்டங்கள், நடத்துவோம். மறுநாள் நாளேட்டைப் புரட்டினால் அங்கொன்றும் – இங்கொன்றுமாக செய்திகள் வெளியிடுவதை நம்மால் பார்க்க முடியும்.

ஆனால் முதலாளித்துவக் கட்சிகள் எங்கோ ஒரு இடத்தில் எப்போதாவது ஒரு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அத்தகைய போராட்டத்தை முதல் பக்கச் செய்தியாக படத்துடன்

>> தொடர்ச்சி 03ம் பக்கம்

# நிழல் உலக நிதிப் பரிமாற்றமா கிரிப்டோ கரன்சி?




த.லெனின்

**நம் கையில் இருக்கும் ரொக்கப் பணத்தைப் போன்றது அல்ல கிரிப்டோ கரன்சி. இது டிஜிட்டல் வடிவத்தைக் கொண்டது. விருச்சுவல் கரன்சி(மெய் நிகர்) என்றும் அழைக்கிறார்கள்.**

இது டிஜிட்டல் முறையில் கிடைக்கும் பணமாக செயல்படுகிறது என்பதுடன் என்கிரிப்டட் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்படுகிறது. அமெரிக்காவின் டாலர் மற்றும் இந்தியாவின் ரூபாய் போல இதற்கும் மதிப்பு உள்ளது.

ஒவ்வொரு நாட்டின் பொதுச் செலவாணியான நாணயம் அந்தந்த நாட்டிலேயே செல்லுபடியாகும். ஆனால், இந்த கிரிப்டோ கரன்சி இணையதள இணைப்பு இருந்துவிட்டால் போதும். பரிவர்த்தனையை தொடங்கி விடலாம்.

இந்தியாவில் 15 இடங்களில் பரிவர்த்தனை நிலையங்கள் செயல்படுகின்றன. ரூ.6 லட்சம் கோடி கிரிப்டோ பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன. பத்து கோடி முதலீடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் 50 ஆயிரம் பேர் பணியாளர்களாகவும் பணியாற்றுகிறார்களாம்.

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற உலக நிதி நெருக்கடிக்குப் பிறகு உருவான ஒரு நெருக்கடியான காலத்தில் பிட்காயின் என்பது 2009ஆம் ஆண்டு “சடோஷி நகமோடோ” என்ற போலியான பெயரில் ஒருவர் உருவாக்கி இருந்தார். அரசின் எந்தத் தலையீடும் இன்றி கிரிப்டோ கரன்சி மூலம் பரிவர்த்தனையை பிளாக் செயின் சிஸ்டம் என்ற தொழில் நுட்பத்தின் உதவியோடு இதனை பயன்படுத்துகின்றனர்.

இது வங்கி மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு அப்பாற்பட்டது. இதில் மதிப்பின் அடிப்படையில் பல வகைகள் உள்ளன. பிட்காயின், எத்திரியம், டிரான், டோஜ், ஷிபா என 2000க்கும் மேற்பட்ட கிரிப்டோ கரன்சிகள் புழங்குகின்றன.

ஒரு பிட்காயினின் இந்திய மதிப்பு 38,00,627 ரூபாய்க்கு சமமாகும். இது பரிவர்த்தனையின் போது ஏறவோ, இறங்கவோ செய்யும். தங்கத்தை எப்படி வெட்டி எடுக்கிறார்களோ அதுபோல ஒவ் வொரு கரன்சிக்கும் ஓபன் சோர்ஸ் கோடிங் மூலம் கிரிப்டோ கரன்சி மைனிங் (உருவாக்கம்) செய்யப்படுகிறது.

தனிநபர்கள் தன்னிச்சையாக கிரிப்டோ கரன்சியை வாங்கவும், விற்கவும் செய்யலாம். இந்த பரிவர்த்தனையின் போது அதன் மதிப்பு ஏறலாம்; இறங்கலாம். இது யூக பேரத்தை அடிப்படையாகக் கொண்டதால் இதில் முதலீடு செய்வது சூதாட்டம் போன்றது ஆகும்.

இந்த பிட்காயினை எந்த அரசும் நிர்வாகம் செய்யவில்லை. ஆனால் 21 மில்லியன் பிட்காயின் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். வங்கிகளில் நடைபெறும் பரிவர்த்தனை என்றால் கே.ஒய்.சி. முறையில் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் முறைமை உள்ளது. இதன் திடீர் புகழை கண்ட இந்திய அரசு இதனை முறைப்படுத்த மெய்நிகர் சொத்து சேவை மற்றும் வழங்குபவர்களை ஒழுங்குபடுத்துவதற்கு கே.ஒய்.சி. அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

ஆனால், இந்த கிரிப்டோ கரன்சி முறையில் வாடிக்கையாளர்களை யாரும் அறிந்து கொள்ள முடியாது.

இப்படி இவை அனுமதிக்கப்பட்டால் ஹர்சத் மேத்தாக்கள், கேட்டன் பரேக்குகள் போன்று பல பங்குச் சந்தை ஊழலை ஏற்படுத்தும்.

கடந்த 2018 ஏப்ரல் 6ஆம் தேதி ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கைகளை வெளியிட்டபோது, பிட்காயின் உள்ளிட்ட கிரிப்டோ கரன்சிகளுக்கு தடைவிதித்தது.

பிட் காயின் உள்ளிட்ட கிரிப்டோ கரன்சி வணிகத்தில் ஈடுபடும் அமைப்புகளோடு வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்கள் எந்த உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது எனவும், ரிசர்வ் வங்கியின் கீழ் இயங்கும் வங்கிகள் ஆன்லைன் பணப் பரிமாற்ற நிறுவங்கள் பிட்காயினை வாங்கவோ விற்கவோ அனுமதிக்கக் கூடாது என்றும் உத்தரவிட்டது.

ஆனால், அதற்கு பின்பு அதன் முதலீட்டாளர்கள் உச்சநீதிமன்றத்தை அணுகியபோது, உச்சநீதிமன்றம் கிரிப்டோ கரன்சியின் மீது ரிசர்வ் வங்கி விதிக்கும் தடை ஏற்றுக் கொள்ளும் வகையில் அதில் எவ்வித காரணமும் இல்லை எனவும், இதனை தடை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றதுடன், 2018 ரிசர்வ் வங்கியின் தடை உத்தரவானது அரசியல் அமைப்புக்கு விரோதமானது என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.

எனவே, மீண்டும் இந்தியாவில் இது புழக்கத்தில் வர ஆரம்பித்தது. இந்திய அரசு இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு இவற்றை வரைமுறை செய்யவும், ஒழுங்குபடுத்தவும் இந்த குளிர்காலக் கூட்டத் தொடரில் இதற்கான ஒரு சட்ட முன்வடிவையும் கொண்டுவந்துள்ளது.

**ஒழுங்குபடுத்தப்படாத கிரிப்டோ கரன்சிகள் புழக்கத்தில் இருந்தால் நிச்சயமாக அது உலக பொருளாதாரத்தை பாதிக் கவே செய்யும். அத்துடன் சமூகத்திற்கான ஒரு அபாயமாகவும் அது மாறிவிடும். இந்தப் பரிவர்த்தனை எந்த கட்டுப்பாடுகளும் இன்றி செயல் பட்டால் குற்றவாளிகள், வரிஏய்ப்பவர்கள் மற்றும் ஏமாற்றுப் பேர்வழிகளினுடைய உள்ளாச புரியாக மாறி கருப்பு பணத்தை உருவாக்கும் புதிய நடைமுறைகளை உண்டாக்கி விடும்.**

ஏற்கனவே செயல்பட்டு வரும் வங்கி முறைகளிலேயே அதுவும் ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கான பணப் பரிவர்த்தனை வாடிக்கையாளரின் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் நுட்பமான முறையில் பல பண மோசடிகள் நடைபெற்றே வருகின்றன. இதனை கண்டு பிடிக் கவும், இக்குற்றங்களை களைவதற்கும் இன்னும் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலையில் கிரிப்டோ கரன்சி அனுமதிக்கப் பட்டால் பண மோசடிகளின் சொர்க்கம் போல இது மாறிவிடும். கருப்பு பணத்தை ஆன்லைனிலேயே பதுக்கல் செய்வதற்கான அறிவியல் வடிவமாகவும் இது மாறிவிடும்.

கடந்த 2020ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் இந்த கிரிப்டோ கரன்சியை பயன்படுத்தக் கூடியவர்கள் பல லட்சம் மில்லியன் டாலர்களை கடந்த 2011 முதல் 2019 வரை இழந்துள்ளனர். ஆண்டுக்கு நான்கு முதல் பனிரெண்டு வரை பல புறம்பான பரிவர்த்தனைகள் நடைபெற்றதை கண்டறிந்ததும் 2019ல் ஒரு பில்லியன் டாலர் மதிப்பிற்கு திருட்டு நடந்ததையும் அவைகள் சட்ட விரோத சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு குற்றச் செயலுக்கு பயன்படுத்தப்பட்டதையும் அது சுட்டிக் காட்டியது.

கிரிப்டோ கரன்சி கள்ளச் சந்தைகளுக்கு ஊக்கமளிப்பதுடன் உலகளாவிய பல்வேறு முதலீடுகள் தங்கச் சாலை திட்டம், நிரந்தரமற்ற வீட்டுவசதி சந்தைகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன.

அல்ஜீரியா, பொலிவியா, எகிப்து, ஈராக், மொராக்கோ, நேபாள், பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இந்த கிரிப்டோ கரன்சியை தடை செய்துள்ளன.

பகரைன், பங்களாதேஷ், சீனா, கொலம்பியா, இந்தோனேஷியா, ஈரான், குவைத், லெசோத்தோ, வித்வேனியா, மக்காவ், ஓமன், கத்தார், சவுத் அரேபியா மற்றும் தைவான் உள்ளிட்ட 15 நாடுகள் மறைமுகமாக இதனை தடை செய்துள்ளன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கனடாவும் அந்தந்த நாடுகளில் குற்றச்சாட்டுக்கு உள்ளான நாற்பதுக்கும் மேற்பட்ட பிட்காயின் ஊழல்களை விசாரித்து வருகின்றன.

ரஷ்யாவில் இது சட்டபூர்வமானது என்றாலும், ரஷ்ய நாட்டவர் பொருட்களை வாங்குவதற்கு ரூபிளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் பிற நாட்டவர்கள் அந்நிய நாட்டு கரன்சிகளை பயன்படுத்தலாம் என்றும் அறுதியிட்டுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார தடையால் அவதிப்படும் கியூபா, எல்சால்வடார் ஆகிய நாடுகள் கிரிப்டோ கரன்சியை ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

பல வங்கிகள் இந்த கிரிப்டோ கரன்சி சேவையை ஏற்றுக் கொள்ளவில்லை. பொருளாதார மந்தம் அதிகம் உள்ள நாடுகள் இதனை ஏற்றுக் கொண்டு செயல்பட்டால் பெரும் சிக்கல்களை அனுபவிக்க வேண்டிவரும். சிந்தாந்த பூர்வமாகவும், சட்டபூர்வமாகவும், கிரிப்டோ கரன் சிகள் பலர் நினைப்பது போல பணம் அல்ல. அதுபோலவே பல பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை கிரிப்டோ கரன்சியில் சொல்லப்படவில்லை. எந்த கிரிப்டோ கரன்சியும் உலக அளவில் பரிவர்த்தனைக்கான பணமாக அங்கீகரிக்கவில்லை. ஆனால், கிரிப்டோ கரன்சி ஆப்கள் பல உருவாக்கப்பட்டு அவற்றை பயன்படுத்த வேண்டும் என்ற விளம்பரங்கள் நமது இந்திய காட்சி ஊடகங்களில் காணக் கிடக்கின்றன.

எது எப்படியாக இருந்தபோதிலும், உழைப்புக்கும் உண்மைக்கும் எதிராக இருக்கும் இந்த கிரிப்டோ கரன்சி உலக அளவில் எந்த முக்கிய பரிவர்த்தனைக்கும் கொடுக்கல் வாங்கலுக்கும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், நிழல் உலக சட்டவிரோத பரிவர்த்தனைகளுக்கு இவை மிகப் பெரிய சேவை செய்யலாம். நாடுகளின் நிதி இறையாண்மையும் இதனால் மிகப் பெரிய சேதத்தை எதிர்கொள்ளும் என்பது மட்டும் நிச்சயம்!

தொடர்புக்கு: **94444 81703**

**02ம் பக்கத் தொடர்ச்சி >>** வெளியிட்டு மகிழ்வார்கள்.

இதன் நோக்கம் என்ன? யார் வேண்டுமானாலும், எத்தகைய கட்சிகள் வேண்டுமானாலும் வளரலாம். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்து விடக்கூடாது என்ற அற்ப புத்தியைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

நமது முன்னோர்கள் பெரும்பாலோர் கல்வி வாய்ப்பு இல்லாதவர்களாக இருந்தனர். ஆனால் அரசியலை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டினார்.

படிக்கத் தெரிந்த ஒருவரைக் கொண்டு, உரக்கப் படிக்கச் செய்து, அதனைக் கேட்டு தங்களை அரசியல் ரீதியாக வளர்த்துக் கொண்டார்கள். கட்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டது மட்டுமல்ல, மாற்றாரும் வியக்கும் வண்ணம் களம் கண்டார்கள்.

இவைகளுக்கு ஏராளமான முன்மாதிரிகள் உண்டு. குறிப்பாக ஒன்றை குறிப்பிட விரும்புகின்றோம்.

சென்னை மத்திய ரயில் நிலையத்திற்கு அடுத்ததாக பேசின்பிரிட்ஜ் ரயில் நிலையம் உள்ளது.

அங்குள்ள நடைமேடையில் ஒரு அழகான விநாயகர் கோவில் உள்ளது. அவ்விநாயகர் கோவிலுக்கு என்ன பெயர் தெரியுமா? சொன்னால் வியப்படைவீர்கள்! ஸ்ரீ ஜனசக்தி வலம்புரி விநாயகர் ஆலயம்!

ஜனசக்திக்கும் விநாயகருக்கும் என்ன சம்பந்தம்? எப்படி ஜனசக்தி பெயரை இக்கோயில் பெற்றது? என ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் உள்ளதா?

நாள்தோறும் விநாயகர் கோவில் அருகில் ரயில்வே தொழிலாளர்கள் கூடுவார்கள்.

அங்கே ஒரு தோழர் நின்றபடி ஜனசக்தி ஏட்டை குரல் உயர்த்தி படிப்பார். தொழிலாளர்கள் கேட்டு தங்களின் அரசியல் ஞானத்தைப் பெருக்கிக் கொண்டார்கள்.

இவ்வாறாக நாள் தவறாமல் நடத்திட்ட காரணத்தால் அக்கோவில் ஸ்ரீ ஜனசக்தி வலம்புரி விநாயகர் ஆலயம் என்று அழைக்கப்பட்டது – இன்றும் அப்பெயர் நிலைத்து நிற்கின்றது.

தோழர்களே இன்று நம் கட்சியில் உறுப்பினராக உள்ளவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர் என்று எவரும் இருக்க வாய்ப்பில்லை– எல்லோரும் படிக்கத் தெரிந்தவர்கள்– படிக்கத் தெரிந்த தோழர்கள் எல்லோரும் ஒரு ஜனசக்தி ஆண்டு சந்தா செலுத்தினால், ஜனசக்தி விற்பனை எண்ணிக்கை எவ்வளவு அதிகரிக்கும் என்று நினைத்துப் பாருங்கள்!

நமது கட்சியில் உள்ள ஒரு லட்சத்து பதினான்கு ஆயிரம் பேரும் தங்களின் ஆண்டு சந்தாவாக ரூபாய் ஐநூறு செலுத்தினால், ஜனசக்தி வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்!

ஜனசக்தி வரா ஏடுதான். நாளொன்றுக்கு ஒரு பக்கம் படித்தால் போதுமே!

உலக அரசியலை, நாட்டு நடப்பை, மாநில அரசியலை, மாவட்ட அரசியலை அறிந்து கொள்ளலாமே!

நம்மில் ஆண்டுக்கு ரூ.500 செலவழிக்க முடியாதவர்களா உள்ளோம்? முடியும். நாம் நம்மை அரசியல் ரீதியாக வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியோடு நம்மிடம் இருக்குமேயானால் ரூ. 500 என்ன எத்தனை ஆயிரங்களை வேண்டுமானாலும் செலவு செய்திட இயலும்.

நமது கட்சியின் வளர்ச்சியில் ஜனசக்தி மகத்தான பங்களிப்பை செய்து வருகின்றது என்று தொடர்ந்து படிப்போர் அனைவரும் நன்கறிவர்.

பிற இயக்கங்களை சேர்ந்த நண்பர்கள் ஜனசக்தி வாங்கிப் படித்து பயன்பெற்று வருகின்றார்கள்.

நமது மாநாடுகளில் ஜனசக்தி நமது மத்தியத் தலைமையால் வெளியிடப்பெற்று வரும் ஆங்கில ஏடான நியூஏஜ், நமது இலக்கிய ஏடான தாமரை ஆகியவற்றிற்கு சந்தா சேர்த்து அனுப்பிடவும், நமது பிரசுரங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கவும் – தோழர்களுக்கு தனித்தனியாக பொறுப்பளிக்க வேண்டும் – அவர்கள் தங்களது கடமையை நிறைவேற்றிட முனைப்பாக செயல்பட வேண்டும்!

அடுத்த வாரம் சந்திப்போம் – வணக்கம்.

தோழமைமிக்க

**இரா.முத்தரசன்**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 84 இதழ் 36

## பொதுமக்களின் பத்து லட்சம் கோடி ரூபாய் வைப்புத்தொகைக்கு ஆபத்து!

பொதுத்துறை வங்கிகளை தனியாருக்கு தருவதற்காக, வங்கிகள் சட்ட (திருத்த) மசோதாவை, நடப்பு குளிர்கால கூட்டத் தொடரிலேயே நாடாளுமன்றத்தில் மோடி அரசு வைக்கப்போகிறது.

ஏற்கனவே சென்ற நிதி நிலை அறிக்கையில் இரண்டு பொதுத் துறை வங்கிகளை தனியாருக்கு தருவோம் என்று அறிவித்தார்கள்.

பெரிய நிறுவனங்கள் வங்கியில் வாங்கிய கடனை திரும்பச் செலுத்தாத நிலை முன்பே இருந்தாலும் கூட, பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு திருப்பித் தராத கடன் தொகையும், வங்கி மோசடிகளும் பல மடங்குகள் அதிகரித்துள்ளன.

பதிமூன்று நிறுவனங்கள் 4 லட்சத்து 46 ஆயிரத்து 800 கோடி ரூபாயை கடன் வாங்கி திரும்பச் செலுத்தாமல் இருந்தன. இந்தக் கடனை வாங்கிக் கொள்ள இந்தியாவின் மிகப் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களான மிட்டல், ரிலையன்ஸ், டாட்டா, வேதாந்தா உள்ளிட்ட 9 நிறுவனங்கள் முன்வந்தன. கடன் தொகையை வங்கிகளிடம் பேரம் பேசிக் குறைத்து, வெறும் 1,61,720 கோடி ரூபாய்க்கு அந்த 13 நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்களையும் வாங்கிக் கொண்டன. இதனால் 2 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் அம்பானி, டாடா கோஷ்டிகளுக்கு லாபம்; பொதுத்துறை வங்கிகளுக்கு நஷ்டம்.

மோடி அரசாங்கம் கார்ப்பரேட் பணக்காரர்களிடம் இருந்து வங்கிகளின் பொதுச்சொத்தை வசூலிக்கும் இலட்சணம் இதுதான்.

இதுவரை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கடன் கொடுக்கச் செய்து, பிறகு கடனைத் தள்ளுபடி செய்த மோடி அரசு, இப்போது அந்த வங்கிகளையே கார்ப்பரேட்டுகளிடம் கொடுத்துவிட முடிவு செய்துள்ளது.

இதுதான் 'வங்கித் துறை சீர்திருத்தம்'' என்கிறார்கள்.

விவசாயிகளுக்கு எதிரான 3 வேளாண் சட்டங்களையும் ''வேளாண்துறை சீர்திருத்தம்'' என்று சொல்லித்தான் கொண்டு வந்தார்கள். தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் சட்டத் தொகுப்புகளும் ''தொழிலாளர் சீர்திருத்தம்' என்ற பெயரில் தான் வந்துள்ளன. ஓராண்டு காலமானாலும் சளைக்காமல் விவசாயிகள் போராடி அந்தச் 'சீர்திருத்தங்களை' திரும்பப் பெற வைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கூட கொடுக்காமல், சகலவிதமான மானியங்களையும் ரத்துசெய்து, கார்ப்பரேட்டுகளை கொழுக்கச் செய்யப்போட்ட திட்டம் தவிடு பொடியாகி விட்டது. மோடி அரசைப் பணிய வைத்த விவசாயிகள், தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் துணிவை மக்கள் சமூகத்தின் மற்ற பிரிவுகளுக்கும் தந்திருக்கிறார்கள்.

வங்கிகளைத் தனியாருக்கு தருவதற்கு எதிராக வங்கி ஊழியர்கள், தங்களுடைய சங்க எல்லைகளைக் கடந்து ஒன்றுபட்டு உறுதியாக போராடுகிறார்கள்.


பல நிதித்துறை வல்லுநர்களும், வங்கிகளை தனியார் மயமாக்கும் மோடி அரசின்கொள்கை தேசிய நலன்களுக்கு விரோதமானது என்று கூறுகிறார்கள். முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன், ''பொதுத்துறை வங்கிகளை விற்பது மகத்தான தவறு'' என்று சுட்டிக்காட்டி இருக்கிறார். வழக்கமாக மோடி அரசு செய்யும் அநியாயங்களை எல்லாம் நியாயப்படுத்தும் தினமணி கூட வங்கிகள் தனியார் மயத்தில் 'எந்த அறிவுபூர்வமான நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை' என்று கூறுகிறது.

பத்து லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான தொகையை பொதுத் துறை வங்கிகளில் நம்பிக்கையோடு மக்கள் போட்டு வைத்துள்ளனர். இவ்வளவு பெரிய தொகையை அப்படியே தூக்கி, வாங்கிய கடனைக் கூட கட்டாத அயோக்கியர்களிடம் அரசு ஒப்படைப்பது பொது மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களை அகில இந்திய வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலாளர் சி.எச். வெங்கடாசலம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா முத்தரசன் ஆகியோர் சந்தித்து முறையிட்டபோது, தனியார் மயத்துக்கு எதிராக திமுக நிற்கும் என உறுதியளித்திருக்கிறார். இதேபோல காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பாஜகவின் தொழிற்சங்கமே கூட எதிர்க்கிறது.

வரும் டிசம்பர் 16, 17 தேதிகளில் அனைத்து வங்கிகளின் ஊழியர்களும், அதிகாரிகளும் தனியார்மயத்தை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்குகிறார்கள்.

தேச நலன், பொதுமக்கள் சொத்து ஆகியவற்றை பாதுகாக்கும் இப்போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு பெருகட்டும்!




## நாங்கள் ஏன் மன்னிப்பு கேட்க மாட்டோம்?

**பினாய் விஸ்வம்** இந்திய கம்யூ. எம்.பி.

இந்தியக் குடிமக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து விவாதங்களில் ஈடுபடுவதன் மூலம், அரசாங்கம் பாராளுமன்றத்தையும் அதன் நெறிமுறைகளையும் மதிக்கும் என்ற நம்பிக் கையுடன்தான், எதிர்க்கட்சிகள், குளிர்காலக் கூட்டத் தொடருக்கு வந்தன.

அரசு நடத்தும் வழக்கமான அனைத்துக் கட்சிக் கூட்டமும், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆற்றிய குறுகிய உரையும் அந்த நம்பிக்கையை வலுப்படுத்தின.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த அனைத்துகட்சி கூட் டத்தை, பிரதமர் தவிர்க்கும் அளவுக்க சொற்ப மரியாதை அளிக்கப்படுகிறதே என்று நம்மில் பலர் வியப்படைந்தோம் ஆனால், எங்களது அந்த ஆச்சரியம் குறுகிய காலமே நீடித்தது. ஏனெனில், 2014ல் ஆண்டிலிருந்து, மோடிஜியின் கீழ், நாடாளுமன்றம் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கு அதிக கவனம் தேவைப் படுவதில்லை – செலுத்தப்படுவதில்லை என்பதை எங்களின் கூட்டு. அனுபவத்திலிருந்து, இப்போது நாங்கள் கற்றுக்கொண்டுள்ளோம்..

பிரதமர் மோடி, நாடாளுமன்ற அவையில் இருப்பது மிகவும் அரிதானது. நாடாளுமன்றத்தை பிரதமார் மோடி ''பார்வையிட'' தேர்ந்தெடுக்கும் மிக அரிய சந்தர்ப்பங்களில் அவரை ஆரவாரத்துடன் உற்சாகப்படுத்தவும், பாராட்டவும் செய்வதைத்தான் ஒரு வேலையாக வழக்கமாகக் கொண்டுள்ளனர் ஆளும்கட்சி எம்பிக்கள்.

அமர்வின் முதல் நாள் காலையில், எதிர்க்கட்சிகள் எழுப்பும் அனைத்து கேள்விகள் மற்றும் பிரச்சினைகளுக்கு தானும் தனது அரசாங்கமும் பதிலளிப்போம் என்று பிரதமர் பெருமிதத்துடன் பொது உரையில் கூறினார்.

ஆனால் அவரது வாக்குறுதி பொய்யானதைத்தான் நாம் கண்டோம்.

வேளாண் சட்டங்களை ரத்து செய்யும் மசோதாக்களை இரு அவைகளிலும் ஒரே நாளில் எந்த விவாதமும் இல்லாமல் அரசாங்கம் நிறைவேற்றியது. நீண்ட காலமாக எதிர்கட்சியினர் வேளாண் சட்டங்களை ரத்து செய்யக் கோரி வருவதால் விவாதம் தேவையில்லை என்று கூறி இந்த நடவடிக்கையை அரசு நியாயப்படுத்தியது.

ஆனால் நாடாளுமன்ற நடைமுறையில், ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தப்பட்டவுடன், அது சபையின் சொத்தாக மாறும். அந்தக் கோட்பாட்டைப் பின்பற்றித்தான், எதிர்க்கட்சிகள் வாதம் மற்றும் விவாதத்தை கடுமையாகக் கோரின.

விவாதம் அல்லது ஆய்வு இல்லாமல் மசோதாக்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்று இந்த அரசாங்கம் நம்புவதாகத் தெரிகிறது – மேலும் அரசு தரப்பால் அதே முறையில் அதாவது விவாதம் இன்றி ரத்து செய்யப்படலாம்.

விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்பட்ட பிறகு, அரசு சாதுர்யமாக திசை திருப்பும் தந்திரத்தை திட்டமிட்டது. நான் உட்பட 12 எம்.பி.க்களை அவையில் இருந்து சஸ்பெண்ட் செய்யும் பிரேரணை கொண்டு வரப்பட்டது. முந்தைய அமர்வின் நிகழ்வுகளின் பெயரில், தற்போதைய அமர்வில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவது மிகவும் அசாதாரணமானது.

ஆகஸ்ட் 11 நிகழ்வுகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ''குழு''வின் அறிக்கையின் அடிப்படையில் என்று கூறி எதிர்க்கட்சி 12 எம்பி க்களின் இடைநிறுத்தத்தை அரசு தரப்பு நியாயப்படுத்த முயலுகின்றன. இருப்பினும், வேடிக்கை என்னவெனில் அந்தக் குழுவின் செயல்பாடு பற்றி யாருக்கும் தெரியாது, அதுமட்டுமல்லாமல் இடைநீக்க தீர்மானத்தில், குழுவின் அறிக்கை குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை.

ஒரு வேளை ஆகஸ்ட் 11 குழு ஒன்று இருப்பதாகக் கருதினாலும், சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஒரு எம்.பி.க்குக் கூட தனது நிலையை சொல்ல வாய்ப்பு ஏதும் வழங்கப் படவில்லை. இதன்மூலம் இயற்கை நீதியின் அனைத்துக் கோட்பாடுகளையும் மீறப்பட்டுள்ளன. இதுபோன்ற நாடாளுமன்ற நடைமுறைகளை துஷ்பிரயோகம் செய்யப்படுவது பாஜக ஆட்சியில் பிரதானமாகவே நடக்கிறது.

பாராளுமன்றம் ஒரு சட்டத்தை உருவாக்கும் தொழிற்சாலையாக மாற்றப்பட்டுள்ளது, அங்கு ஆளும்கட்சி, தனது பெரும்பான்மை என்பதை மிருகத்தனமான சக்தியாகக் கையாண்டு, நாடாளுமன்ற அனைத்து விதிமுறைகளையும் நடைமுறைகளையும் மீறுகிறது.

வேளாண் சட்டங்கள், விலைவாசி உயர்வு போன்ற பிரச்சனைகள் குறித்து விவாதங்கள் நடத்தப்பட வேண்டும்

மழைக்கால கூட்டத் தொடர் முழுதும் வேளாண் சட்டங்கள் விலைவாசி உயர்வு, கோவிட்டை எதிர்கொள்வதில் நடைபெற்ற தவறான நிர்வாகம், பெகாசஸ் உளவு ஆகிய முக்கிய பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் விவாதித்து செயல்படுவதை தடுக்கும் வண்ணம் வியூகம் வகுக்கப்பட்டு, தற்போதைய மழைக்காலக் கூட்டத் தொடர் ஆளும் தரப்பால் சீர்குலைக்கப்படுகிறது... ,

ஆகஸ்ட் 11 அன்று, பொது காப்பீட்டு வணிக (தேசியமயமாக்கல்) திருத்த மசோதா, 2021 அவைக்கு வந்தது. மூல சட்டத்தின் பெயர், தேசியமயமாக்கலைப் பற்றி பேசினாலும், 2021 திருத்த மசோதா பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களை நிர்மூலமாக்க முயன்றது.

இந்த மசோதாவைத் தேர்வுக் குழுவுக்கு அனுப்ப எதிர்க் கட்சிகள் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும், அரசாங்கம் 30 நிமிடங்களுக்குள் மசோதாவை நிறைவேற்றியது. இந்த கொடூரமான மசோதாவும், சூது நோக்கத்துடன்தான் கடந்த கூட்டத்தொடரின் கடைசி நாளில் நாடாளுமன்ற நடைமுறைக்கு முரணனாக நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கம் தனது சர்வாதிகார அணுகுமுறையால்தான், ''குறுக்கீடுகள்'' நிகழ்ந்தன என்ற உண்மையை வசதியாக மறந்துவிடுகிறது.

எம்.பி.க்களின் இடைநீக்கம் தொடர்ந்து நீடிப்பதால், பலரும் மன்னிப்புக் கேட்டு பிரச்னையை தீர்த்துக் கொள்ளலாம் என பேசுகின்றனர். ''ஆத்மநிர்பர் பாரத்'' என்ற உண்மையான உணர்விற்காக, விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுடன் ஒற்றுமையாகவும், ஜனநாயகத்தின் மகத்தான விழுமியங்களைப் பாதுகாப்பதற்காகவும் நமது குரலை உயர்த்தப் பாடுபடும்போது, அத்தகைய நடவடிக்கையை அதாவது மன்னிப்பு கோருதல் என்பதை கருத்தில் கொள்ள முடியாது என்று எதிர்க்கட்சிகள் கூட்டாக ஒருமித்து கருதுகின்றன.

அத்தகைய சூழ்நிலையில், சுயமரியாதையுள்ள எந்த அரசியல் கட்சியும் அல்லது அதன் தொண்டனும் மன்னிப்பு கேட்க மாட்டார்கள்.

ஏனென்றால் நாங்கள் கற்றுக்கொண்ட அரசியல் பள்ளி என்பது சாவர்க்கர் கற்ற பள்ளியிலிருந்து வேறுபட்டது.

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ் (டெல்லி பதிப்பு) 3.2.21.

– தமிழில்: **ந.சேகரன்**

## பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளில் திருப்பூரில் ஆர்ப்பாட்டம்

டிசம்பர் 6 பாபர் மஸ்ஜித் இடிக்கப்பட்ட கருப்பு நாளில் தமுமுக சார்பாக விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தமுமுக மாவட்டத் தலைவர் ஏ.நசீர்தீன் தலைமை தாங்கினார். தமுமுக மாவட்ட செயலாளர் செரங்காடு அப்பாஸ் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கண்டன கோசத்தை மாவட்ட பொருளாளர் ஏ.காஜாமைதீன் எழுப்பினார்.

மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் எம்.ஜெய்னுலாப்தீன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ரவி, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கொபசெ திருப்பூர் சுடலை மமக மாவட்ட செயலாளர் அபுசாலி ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தத்துவார்த்தம் 8



எஸ். தோதாத்ரி




# பண்பா? அளவா?

**விதி என்பது பல உண்மைகளை ஒழுங்கு செய்து பொதுமைப்படுத்தி கூறுவது ஆகும். விஞ்ஞான விதிகள் சில அடிப்படை உண்மைகளைப் பற்றி பேசுகின்றன. இதே போன்றவைதான் தத்துவ விதிகள் ஆகும். அதுவும் இயங்கியல் பொருள்முதல்வாத விதிகள் மிகவும் முக்கியமானவை.**

இவை பொருள்களில் ஏற்படும் மாறுதல்களை குறித்துப் பேசுபவை. இந்த விதிகள் பற்றிய அறிவு சமுதாயத்தையும், மனிதர்களையும் புரிந்து கொள்ள அவசியமானவையாகும்.

இவை தொடர்பாக மூன்று விதிகள் உள்ளன.

1) பண்பு அளவாக மாறுதல், அளவு பண்பாக மாறுதல்.

2) எதிரிடைகளின் போராட்டமும் இணைப்பும்.

3) நிலை மறுப்பின் நிலை மறுப்பு

ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் அளவு மாறுதல் பண்பு மாறுதலாகிறது என்று மார்க்ஸ் தனது ''மூலதனத்தில்'' கூறுகிறார். இதில் அளவு என்பது என்ன? ஒரு லிட்டர் பால் என்பதும் அளவுதான். நீளம், அகலம், உயரம் என்பனவும் அளவுதான். ஒரு மீட்டர் என்பதும் அளவுதான்.

ஆனால் இவை மாறுதலை ஏற்படுத்தாது. இவை புறநிலை அளவுகள். ஒரு பொருளின் பண்புகளின் அளவு கூடுவது அல்லது குறைவது தான் மாறுதலை ஏற்படுத்தும். இது பற்றித் தான் இந்த விதி பேசுகிறது.

பண்பு என்பது பொருள்களின் உள்ளார்ந்த ஒன்றாகும். இந்தப் பண்புகள் மாறிக்கொண்டே இருக்கும். இவை கூடும் அல்லது குறையும். கூடும்போது பொருள் ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த உயர் கட்டத்திற்கு செல்லும். மாறுதல் மெதுவாக நடைபெறும் பொழுது பொருள் மாறாமல் இருப்பது போல் தோன்றும். விரைவாகும்போது புரட்சிகரமாக இருக்கும்.

இதற்குச் சில உதாரணங்கள் தரலாம். விஞ்ஞானத்தில் இதற்கு நிறைய உதாரணங்கள் உள்ளன. ஒரு எளிமையான உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஹீலியம் என்ற அணு உள்ளது. அணுவில் அமைப்பில் உள்ளே இருப்பது உட் கரு. இதில் இருப்பது புரோட்டான். இது நேர் மின் சக்தி உள்ளது. இதனைச் சுற்றி வருவது எலக்ட்ரான். இது எதிர் மின் சக்தி உள்ளது. இவை முரண்படுபவை. ஒரு புரோட்டானும், ஒரு எலக்ட்ரானும் உள்ளது ஹீலியம். இப்போது இந்த எலக்ட்ரானின் அளவு கூடுகிறது. இதில் மற்றொரு எலக்ட்ரான் இணைகிறது. இதன் விளைவு அந்தப் பொருள் மாறுகிறது. இது ஹைட்ரஜனாக மாறிவிடுகிறது. இங்கு அளவு மாறுதல் பண்பு மாறுதலுக்கு இட்டுச்செல்கிறது.

லெனின் இதற்கு ஒரு உதாரணம் தருகிறார். ஒரு கூட்டம் நடைபெறுகிறது. ஐந்து பேர்கள் இருக்கிறார்கள், கூட்டத்தில் அதிக மாறுதல் இல்லை. பத்து பேர்கள் வருகிறார்கள், கூட்டத் தின் தன்மை சற்றே மாறுகிறது. நூறு பேர்கள் வருகிறார்கள், கூட்டத்தின் தன்மை முற்றிலுமாக மாறி விடுகிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இருந்து ஒரு உதாரணம் தரலாம். ஆரம்பகாலத்தில் விடுதலை வேண்டும் என்ற எண்ணம் ஒரு சிலரிடம் இருந்தது. அவர்கள் அறிவாளிகளாக இருந்தனர். வெள்ளையர்கள் அவர்களது பெருமையைப் பேசி அவர்கள் உயர்ந்தவர்கள் என்று கூறி வந்த பொழுது இவர்கள் இந்தியாவின் பழம்பெருமையை மாற்றாக முன்வைத்தனர்.

விவேகானந்தர் கூட, இந்து மதத்தின் பெருமையை விளக்குவதன் மூலம் காலனிவாதிகளுக்கு எதிரான ஒரு நிலையையே எடுத்தார். இதில் உள்ளவர்கள் எண்ணிக்கை பெருகியது. காங்கிரஸ் மகாசபை உருவாகியது. ஆரம்பகாலத்தில் வெள்ளையர்களோடு நட்புறவு கொண்டாடி விடுதலை பெற முடியும் என்று நம்பினார்.

ஆனால், மகாசபை பெரிதாகும்பொழுது அதன் தன்மை மாறியது. பலதரப்பட்டவர்கள் மகாசபையில் இணைந்த பொழுது தீவிரவாதம் தோன்றியது. தீவிரமான அரசியல் போராட்டம், ஆயுதம் தாங்கிய போராட்டம் என்று அதன் தன்மை மாறியது.

காந்தி யுகம் வரும்பொழுது பெருவாரியான மக்கள் இதில் இணைந்தனர். காந்தி ஒரு நடுப் பாதையை தெரிவு செய்தார். தீவிரமான போராட்டமும் வேண்டும், ஆயுதம் தாங்கவும் கூடாது. இந்த நிலை பெருவாரியான மக்கள் இணைந்ததால் ஏற்பட்ட ஒன்று. இதனை கூர்ந்து கவனித்தால் எண்ணிக்கை கூடும்போது பண்பு மாறுதல் ஏற்படுவதைக் காண முடியும்.

இந்த அளவு மாறுதல் பண்பு மாறுதலாக இடம் பெறுவது போலவே அளவு குறையும் பொழுது பண்பு உள்ளடங்கி விடுவதும் உண்டு. புதியதாக தோன்றிய பண்பு அதன் அளவு ஒரு எல்லைக்குச் செல்லும் பொழுது வேறு பண்பாக மாறுவது உண்டு.

இந்த விதி மாறுதல் நிகழும் போக்கினைக் காட்டுகிறது. எனவே ஒரு மாறுதலை கவனிக்கும் பொழுது, எந்த பண்பு கூடுகிறது? எது குறைகிறது? என்பதைக் காண்பதன் மூலம் மாறுதலின் தன்மையை நாம் அறிந்துகொள்ள முடியும்.

தொடர்புக்கு: 98947 83657

# ஓமைக்ரான் வந்ததற்கான காரணம் என்ன?

## தடுப்பூசி சமத்துவமின்மையா? TRIPS காரணமாகவா? முதலாளித்துவ சமூக அமைப்பினாலா?



**தென்னாப்பிரிக்க நாட்டில் இருந்து 'ஓமைக்ரான்' என்னும் பெயருடைய புதிய வகை கொரனோ வைரஸ், மரபணு மாற்றத்தின் மூலமாக உருவாகியுள்ளது.**

இது டெல்டா வகையை விட அதிகமாக பரவும் தன்மை உள்ளதாக அறியப்படுகிறது.இது இரு முறை தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களையும் பாதிக்கக்கூடிய தன்மை உடையதாக இருக்கிறது.

இதற்கு என்ன காரணம்?

தென்னாப்பிரிக்க அதிபர் தடுப்பூசி சமத்துவமின்மையால் இது ஏற்பட்டதாக வெளிப்படையாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் 'கோவாக்ஸ்' என்னும் அமைப்பை ஏற்படுத்தி உலகில் தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனங்கள் அனைத்தும் தாங்கள் தயாரித்த தடுப்பூசிகளை இந்த அமைப்பிற்கு வழங்க வேண்டும் என ஏற்பாடு செய்திருந்தது.

இதன்மூலம் உலக நாடுகளுக்கெல்லாம் ஏழை, வளரும், வளர்ந்த நாடுகளுக்கு, தேவைப்படுவோருக்கு சரிசமமாக தடுப்பூசிகளை பிரித்துக் கொடுக்க ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நடைமுறையை உலகில் ரஷ்யா, சீனா நிறுவனங்கள் தவிர வேறு எந்த நிறுவனமும் பின்பற்றவில்லை.

இதன் காரணமாக இன்றும் ஏழை நாடுகளில், கடைசி 30 நாடுகளில் 2% மக்களுக்கு கூட தடுப்பூசி கிடைக்கவில்லை. அந்த நாடுகளில் கொரனோ நோய் தொற்றுக்கு எதிராக செயல்பட்டு கொண்டிருக்கும் முன்கள சுகாதாரப் பணியாளர்களுக்கு கூட தடுப்பூசி வழங்கப்படவில்லை. இன்றளவும் கிட்டத்தட்ட 45 சதவீத உலக மக்களுக்கு தடுப்பூசி கிடைக்கவில்லை.

இதே நேரத்தில் பணக்கார நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு அனைவருக்கும் இருமுறை தடுப்பூசி போடப்பட்டு, மூன்றாவது முறையாக 'பூஸ்டர் டோஸ்' போட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வளர்ந்த நாடுகள் தங்களுடைய எதிர்காலத் தேவைக்காக கோடிக்கணக்கான தடுப்பூசிகளை பாதுகாப்பாக சேமித்து வைத்துள்ளனர்.

ஜி7 நாடுகள் 100 கோடி தடுப்பூசிகளை ஏழை நாடுகளுக்கு வழங்குவதாக தாங்கள் கொடுத்த வாக்குறுதியை 15 சதவீதம்தான் நிறைவேற்றியுள்ளனர்.

வளரும் மற்றும் ஏழை நாடுகள் காப்பீட்டு உரிமையான **'TRIPS' (TRADE RELATED INTELLECTUAL PROPERTY RIGHTS)** இருப்பதனால் தாங்களாகவே இந்த தடுப்பூசிகளை, தங்கள் நாட்டு மக்களுக்கு தயாரிக்க முடியாத நிலையில் உள்ளன.

இந்த காப்பீட்டு உரிமை 'ஜிஸிமிறிஷி' என்பதே, இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு அறிவியலை வியாபாரமாக்கி, லாபகரமானதாக்கி, அறிவியல் வியாபாரத்திற்காகவும், லாபத்திற்காகவும் என்ற நோக்குடன் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) மூலமாக ஏற்படுத்தப்பட்டதுதான்.

இதனால் ஏழை மற்றும் வளரும் நாடுகள் தடுப்பூசி கண்டுபிடித்த நிறுவனங்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டி இருப்பதால் தங்கள் நாடுகளில் தடுப்பூசி தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவ முடியவில்லை, தடுப்பூசிகள் தயாரிக்க முடியவில்லை. உலகில் கிட்டத்தட்ட பாதி மக்கள் தடுப்பூசி போடாமல் இருக்கும்போது இந்த கொடிய கொரனோ வைரஸ் பல மரபணு மாற்றங்களை உண்டாக்கி புதிய புதிய வகையாக மாறும், புதிது, புதிதாக தாக்கும்.

உலகில் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி கிடைத்து, அனைவரும் பாதுகாப்பாக இருக்கும் போதுதான் கொரோனோ கட்டுப்படுத்தப்படும், பணக்கார நாடுகளில் வாழும் மக்களும் பாதுகாப்பாக இருப்பர். உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர்.டெட்ராஸ் 'இப்போது உள்ள ஒப்பந்தங்கள் உலக மக்களை பெருந்தொற்றில் இருந்து பாதுகாக்கவில்லை, ஏழை மற்றும் வளரும் நாடுகளில் வசிக்கும் மக்களையும் உள்ளடக்கிய, அனைவருக்கும் பாதுகாப்பான மருத்துவ வசதி கிடைக்குமாறு இனி ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்பட வேண்டும்' என வேண்டுகோள் விடுத்துள்ளார்.


தடுப்பூசி சமத்துவமின்மை ஒழிக்கப்படவேண்டும், அனைத்து மக்களுக்கும் இலவசமாக தடுப்பூசி கிடைக்க வேண்டும். காப்பீட்டு உரிமையான 'ஜிஸிமிறிஷி' ஒழிக்கப்பட வேண்டும். அறிவியல் சமூகத்திற்கானது, மக்களுக்கானது. லாபவெறி மிக்க இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு மாற்றப்பட வேண்டும். அப்போதுதான் உலகில் வாழும் அனைத்து மக்களும் நல வாழ்வு பெறுவர்.

– அறம் தனுஷ்கோடி



# முன்னேறிய வகுப்பினருக்கான 10% இட ஒதுக்கீட்டை இறுதி தீர்ப்பு வரும் வரை நிறுத்திடுக

டாக்டர்.
ஜி.ஆர்.இரவீந்திரநாத்




**இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நாடு முழுவதும் கொரோனாத் தொற்று குறைந்திருந்தது. இருந்த போதிலும், ஜனவரி மாதம் 10 ஆம் தேதி நடக்கவிருந்த, முதுநிலை மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கைக்கான நீட் (NEET PG) நுழைவுத் தேர்வை தேதி குறிப்படாமல் மத்திய அரசு தள்ளி வைத்தது.அதற்கு எந்த காரணத்தையும் கூறவில்லை.**

ஜனவரி 10 ஆம் தேதியே தேர்வு நடத்தியிருந்தால் 40,000 முதுநிலை மருத்துவ மாணவர்கள் இரண்டாவது அலையின் போதே கொரானா பணியாற்ற நாடெங்கிலும் கிடைத்திருந்திருப்பார்கள். மத்திய அரசு செய்த மாபெரும் தவறின் விளைவால் மாணவர்களும், மருத்துவத்துறை யினரும், நோயாளிகளும் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

அதன்பிறகு, அத்தேர்வு ஏப்ரல் 18 ஆம் தேதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. மீண்டும் தள்ளி வைக்கப்பட்டு, செப்டம்பர் 11 ஆம் தேதி நடத்தப்பட்டது. இத்தேர்வின் முடிவுகளும் வெளி வந்துவிட்டன. ஆயினும், இதுவரை மாணவர் சேர்க்கை நடைபெறவில்லை. மாணவர் சேர்க்கைக்காக 1.75 லட்சம் பேர் கடந்த ஒன்றரை வருடங்களாக காத்திருக்கின்றனர்.

முன்னேறிய வகுப்பிலுள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கி யவர்களுக்கு பத்து விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வருகி றது. இவ்வழக்கின் தீர்ப்பு காலதாமதமாவதால் மாணவர் சேர்க்கையும் காலதாமதமாகிறது.இதற்கு மத்திய அரசும், உச்ச நீதிமன்றமுமே காரணம்.

முதலாம் ஆண்டு மாணவர்கள் சேர்க்கை நடை பெறாததால், ஏற்கனவே, முதுநிலை மருத்துவம் பயிலும் இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மாணவர்கள் கடும் பணிச் சுமையால் உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர். முது நிலை மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையை உடனடியாக நடத்திடக் கோரி, அகில இந்திய அளவில், முது நிலை மருத்துவ மாணவர்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

சர்ச்சைக்குரிய, சமூக நீதிக்கு எதிரான, முன்னேறிய வகுப்பில் உள்ள ஏழைகளுக்கான 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவதை, இறுதித் தீர்ப்பு வரும் வரை நிறுத்தி வைத்துவிட்டு இம்மாணவர் சேர்க்கையை நடத்தி இருந்தால் இந்த நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்காது.இத்தகையப் போராட்டமும் வெடித்திருக்காது.

### மத்திய அரசுக்கான வேண்டுகோள்கள்

இப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் இ.வி.எஸ். (EWS) இட ஒதுக்கீடு, இந்திய அளவில் அனைத்துத் துறைகளிலும் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் சமூக நீதிக்கு எதிராக மிகப்பெரிய தாக்கத்தை ஏற்கடுத்தக்கூடிய ஒன்று.

முன்னேறிய வகுப்பினரின் மக்கள் தொகை எவ்வளவு? அவர்களில் உள்ள ஏழைகள் எவ்வளவு பேர் என்ற புள்ளி விவரங்கள் அரசிடம் இல்லை. இது பிரச்சனைகளை உருவாக் கியுள்ளது.

இப்பொழுது உள்ள **EWS** இட ஒதுக்கீடு படி 'ஏழைகள்' என்பதற்கான வரையறை மிகவும் தவறாகவும், பாரபட்சமாகவும், நியாயமற்றதாகவும் உள்ளது. ஆண்டு வருமானம் ரூ.8 லட்சம் வரை உள்ளவர்களுக்கு பொருளாதார ரீதிய பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீடு வழங்கப்படுவது சரியல்ல, அவர்கள் எவ்வாறு ஏழைகளாகமுடியும் என்ற கருத்து உள்ளது.

இந்நிலையில் ஒட்டு மொத்த இடங்களில் உயர் சாதியைச் சார்ந்த பொருளாதார ரீதியில் பின்தங்கிய வர்களுக்கு மட்டுமே 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவது என்பதும், அதற்கான பொருளாதார வரையறையும், ஏற்கனவே இட ஒதுக்கீடு பெற்றுவரும் ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இது சமூக நீதிக்கு எதிராக உள்ளது.

**EWS** பொருளாதார வரையறை அதிலும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர் என்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ள வரையறை பாரபட்சமாக உள்ளதால், அது ஏற்புடையது அல்ல. வறுமைக் கோடு பற்றிய வரையறையில் மத்திய அரசு இரட்டை நிலையை கடைபிடிக்கிறது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம் ``பிரதமர் மருத்துவக் காப்பீடு'' திட்டத்தில், பயன் பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு வரம்பு வெறும் ரூபாய் 72 ஆயிரம் தான்.

ஒரு வீட்டில் ஒரு தொலைபேசி இணைப்பு இருந்தால் கூட, அல்லது ஒரு ஆட்டோ ஓட்டுநர் சொந்தமாக ஒரு ஆட்டோ வைத்திருந்தால் கூட அவர்களுக்கு பிரதமர் காப்பீடு திட்டம் கிடைக்காது. அவர்கள் ஏழைகள் அல்ல. பணக்காரர்கள் ஆகிவிடுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடியின வகுப்பினர் கல்வி உதவித்தொகை பெறுவதற்குக்கூட ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ரூ.8 லட்சம் வரை குடும்ப ஆண்டு வருமானம் உடையோர் கூட இ.வி.எஸ். இட ஒதுக்கீடு பெறலாம் என்பது என்ன நியாயம்?

5 ஏக்கர் விவசாய நிலம் வைத்திருப்பவரும், 1000 சதுர அடி வீடு வைத்திருப்பவரும், 900 சதுர அடி வீட்டுமனையை நகராட்சி பகுதியில் வைத்திருப்பவரும், 1800 சதுர அடி வீட்டுமனையை நகராட்சி அல்லாத பகுதியிலும் வைத்திருப்பவர்கள் ஏழையா என்ற கேள்வியும் எழுகிறது.

பொருளாதார ரீதியில் பின்தங்கியோருக்கு இட ஒதுக்கீடு என்றால் அதை எஸ்.சி./எஸ்.டி./ஒ.பி.சி. போன்ற எல்லா வகுப்பிலும் உள்ள ஏழைகளுக்கும் வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல், எஸ்.சி./எஸ்.டி./ஒ.பி.சி. இட இதுக்கீட்டில் வராத பிரிவினரில் உள்ள ஏழைகளுக்கு என்ற பெயரில், முன்னேறிய வகுப்பில் உள்ள ஏழைகளுக்கு மட்டுமே இந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பதும் நியாயம் அல்ல. எனவே, இவை குறித்த பல்வேறு வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கு வேலைவாய்ப்பில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிட முன்னாள் பிரதமர் வி.பி.சிங் உத்தரவு போட்டதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்த வுடன், அந்த இட ஒக்கீட்டிற்கு உச்ச நீதிமன்றம் உடனடியாக தடைபோட்டது. இறுதித் தீர்ப்புக்குப் பிறகே 2008ல் அது நடைமுறைக்கு வந்தது.

இவ்வாறு இதர பிற்படுத்தப்பட்டோருக்கு, இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட சட்டங்கள் வந்த பொழுதெல்லாம் , அது தொடர்பான வழக்குகளில் உச்சநீதி மன்றம், இறுதித் தீர்ப்பு வரும் வரை அந்த இட ஒதுக்கீட்டிற்கு தடைவிதித்தது. ஆனால்,

**முன்னேறிய வகுப்பில் உள்ள ஏழைகளுக்கான இட ஒதுக்கீடு பிரச்சனையில் அவ்வாறு தடை எதையும் விதிக்கவில்லை. அதற்காக மாணவர் சேர்க்கையையே நாடு முழுவதும் காலதாதம் செய்கிறது. ஒரு கல்வி ஆண்டே இல்லாத நிலை ஏற்பட உள்ளது.**

**இது உச்சநீதிமன்றத்தின் செயல்பாட்டில் சமூக நீதி மீது அக்கறை உள்ளோருக்கு ஐயத்தை உருவாக்கியுள்ளது. மத்திய அரசும் அவரச கதியில் தான் இ.வி.எஸ். இட ஒதுக்கீட்டை அமல் செய்தது.இதுவும் இந்தப் பிரச்சனைகளுக்குக் காரணம்.**

முதுநிலை மருத்துவ மாணவர்களின் போராட்டங்களைக் காரணம் காட்டி, சமூக நீதிக்கு எதிரான இ.வி.எஸ். இட ஒதுக்கீடு பிரச்சனையில் அவசர முடிவுகளை உச்ச நீதிமன்றம் எடுத்துவிடக்கூடாது. இது இதர பிற்படுத்தப்பட்டோரையும், சமூக நீதியையும் நிரந்தரமாக பாதித்துவிடும்.

அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் மூலம் 27 % இட ஒதுக்கீடு இதர பிற்படுத்தப்பட்டோருக்கு அகில இந்திய தொகுப்பில் 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கியிருக்க வேண்டும். அதை மத்திய அரசு வழங்காதது சட்டத்திற்கு புறம்பானது. ஆனால் இது குறித்து உச்ச நீதிமன்றம் கவலைப்படவில்லை.

இதனால், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களை இதர பிற்படுத்தப்பட்ட சமூக மாணவர்கள் இழந்துள்ளனர். இந்திய மக்கள் தொகையில் 52 விழுக்காடாக இருக்கக்கூடிய இதர பிற்படுத்தப்படோருக்கு, கடந்த ஆண்டு வெறும் 3.5 விழுக்காடு அளவிலேயை மருத்துவப் படிப்பு இடங்கள் , அகில இந்தியத் தொகுப்பில் கிடைத்தன.

இது சமூக நீதிக்கு எதிரானது. இந்நிலையில் மருத்துவப் படிப்புகளில், அகில இந்திய தொகுப்பில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கிட மோடி அரசு உத்தரவிட்டுள்ளது. இது பல கட்டப் போராட்டங்களுக்கு கிடைத்த பதிமூன்று ஆண்டுகளுக்குப்பின் கிடைத்த வெற்றியாகும்.

எனவே,

- ஒபிசி இட ஒதுக்கீட்டை இந்த ஆண்டே உடனடியாக அகில இந்தியத் தொகுப்பு இடங்களில் வழங்கிட வேண்டும்.
- சர்ச்சைக்குரிய, எந்தவித புள்ளிவிவர ஆதாரமும் அற்ற சமூக நீதிக்கு எதிரான **EWS** இட ஒதுக்கீடு வழங்குவதை, இறுதித் தீர்ப்பு வரும் வரை நிறுத்தி வைக்கவேண்டும்.
- மாணவர் சேர்க்கைகளை உடனடியாகத் தொடங் கிட வேண்டும். சமூக நீதியை உச்ச நீதிமன்றம் காத்திட வேண்டும். இதன் மூலம் முதுநிலை மருத்துவ மாணவர்களின் பணிச் சுமையும் குறையும், சமூக நீதியும் காக்கப்படும்.

### தமிழக அரசுக்கான வேண்டுகோள்

பணிச்சுமையைக் குறைக்கக் கோரி மருத்துவ மாணவர்கள் நடத்தும் போராட்டத்தால்,அரசு மருத்துவ மனைக்கு வரும் ஏழை நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் பணிச்சுமையை நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

எனவே, 2021 ஜூலை மாதத்தில் விஞ்,விஷி படிப்பை முடித்து தேர்ச்சி பெற்ற முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு, அவர்கள் படித்த துறைகளுக்கு சம்பந்தமே இல்லாத இடங்களில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அதனால் முதுநிலை மருத்துவம் முடித்த மருத்துவர்களின் சேவைகளை சரியாக பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. எனவே அவர்களை உடனடியாக மருத்துவக் கல்லூரிகளில் அவரவர் துறைகளில் பணி நியமனம் செய்ய வேண்டும். இது உடனடியாக, இரண்டாம் ஆம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு முதுநிலை மருத்துவ மாணவர்களின் பணிச்சுமையை குறைக்க உதவும். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ,மருத்துவர்களை கூடுதலாக பணிநியமனம் செய்திட வேண்டும்.

கொரானாவுக்காக நியமிக்கப்பட்ட மருத்துவர்களையும் பணி நீக்கம் செய்ததை ரத்து செய்ய வேண்டும். அவர்களை மீண்டும் பணியில் அமர்த்தி, மினி கிளினிக் மருத்துவர்களையும் இணைத்துக் கொண்டு கொரானா தடுப்பூசி வழங்கல் மற்றும் வெள்ள நிவாரண மருத்துவப் பணிகளுக்கு மருத்துவக் கல்லூரிகளிலும் பயன்படுத்த வேண்டும்.

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள முதுநிலை மருத்துவ இடங்களுக்கான முதல் கட்ட மாணவர் சேர்க்கையை , உரிய அனுமதியை பெற்று தமிழக அரசு, உடனடியாக நடத்திட வேண்டும்.

அகில இந்தியத் தொகுப்பு இடங்களுக்கான கலந்தாய்வு நடத்தப்படும் பொழுது , முதல் கட்ட கலந்தாய்வு மூலம் சேர்ந்த மாணவர்களும், கலந்து கொள்ள மத்திய மாநில அரசுகள் அனுமதிக்க வேண்டும்.

அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கான சேர்க்கை முடிந்த பின் இரண்டாம் கட்ட தமிழக கலந்தாய்வை நடத்த வேண்டும்.

தொடர்புக்கு: **99406 64343**



## சங்கே முழங்கு!

### அம்மாப்பேட்டை ஒன்றியச் செயலாளர்

## ஆர்.செந்தில்குமார் உயிருக்கு அச்சுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, தஞ்சை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றிய செயலாளராக ஆர்.செந்தில்குமார் பொறுப்பில் உள்ளார். மாநிலக்குழு, மாவட்ட குழு மற்றும் ஒன்றிய குழுவின் முடிவுகள் அடிப்படையில் மக்கள் நல பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை முன்வைத்து சட்டத்திற்குட்பட்டு இயக்க பணிகள் செய்து வருகிறார். கடந்த காலங்களில் சமூக விரோதிகள் மற்றும் மணல் கொள்ளையர்களை எதிர்த்து கட்சி முடிவுக்கு ஏற்ப அம்மாபேட்டை ஒன்றியத்தில் எங்கள் கட்சியின் சார்பில் போராட்டங்கள் நடைபெற்றன. இதனால் ஆர்.செந்தில்குமார் வீட்டுக்கு ரவுடிகள் சிலர் நள்ளிரவில் வந்து கொலை மிரட்டல் விடுத்து சென்றனர். இது தொடர்பான புகாரில் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேல் நடவடிக்கை இல்லை.

இந்நிலையில் கடந்த 22.08.2021 அன்று அம்மாபேட்டை ஒன்றியத்தில் உள்ள முக்கிய பகுதிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் ஆர்.செந்தில்குமார் அவர்களை இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கில், சமூக பதற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் சமூக விரோதிகளால் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. மேற்கண்ட போஸ்டரில் அச்சகத்தின் பெயர் இல்லை. 9003388138 என்ற செல் நம்பர் மட்டும் அச்சிடப்பட்டிருந்தது. மேற்கண்ட போஸ்டர் அச்சிட்ட அச்சகம் மற்றும் அச்சிட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், தனது உயிருக்கு பாதுகாப்பு கோரியும் ஆர்.செந்தில்குமார் ஆன்லைன் மூலம் கடந்த 22.08.2021புகார் அளித்துள்ளார். அதன் ஸிமீயீ. ழிஷீ பிஹிஷி 21118911 ஆகும். காவல் நிலையத்தில் புகார் அளித்து மனு ரசீது பெற்றுள்ளார். பலமுறை நேரில் வலியுறுத்தியும் எதிரிகள் மீது இதுவரை நடவடிக்கை இல்லை.

ஆர்.செந்தில்குமார் பெயரை தவறாக பயன்படுத்தி காவல்துறை மற்றும் அரசு உயர் அதிகாரிகளுக்கு போலியாக புகார் மனுக்கள் அனுப்புகின்றனர். சமூக விரோதிகளின் தொடர்ச்சியான சட்டவிரோத நடவடிக்கைகளால் ஆர். செந்தில்குமார் அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அம்மாபேட்டை காவல் நிலையத்தில் ஆர்.செந்தில்குமார் அளித்துள்ள புகார் மனுக்கள் மீது காலம் கடத்தாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆர்.செந்தில்குமார் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு சார்பில் கேட்டுக் கொள்கிறோம். கடந்த 07.10.2021அன்று இதே கோரிக்கைகளை வலியுறுத்தி கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் காவல்துறை தலைவர் அவர்களுக்கு மனு அளித்துள்ளார் என்பதையும் தெரி வித்துக் கொள்கிறோம். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

## இதுவா நாடாளுமன்ற ஜனநாயகம்?

இந்திய மக்களின், இந்திய நாட்டின் வளர்ச்சிக்காக மக்கள் பிரதிநிதிகளால் மணிக் கணக்கில் விவாதிக்கப்பட்டு மசோதாக்கள் சட்டங்களாக்கப்படும் மாபெரும் ஜனநாயக பேரவை. ஆனால் பிரதமர் மோடி ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்றத்தில் மசோதக்கள் அவசர கதியில் விவாதம் இல்லாமலே நிறைவேற்றப்படும் கொடும் நிகழ்வுகள் மனதை பதபதைக்குள்ளாக்குகின்றன. குறிப்பாக மோடியார் அவர்கள் 2 ஆம் முறை ஆட்சியில் இதுவரை 6 நாடாளுமன்றத் தொடர்கள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 42 மசோதாக்கள் வெறும் சொற்ப நிமிடங்களில் அதாவது 30 நிமிடங்களிலும், மேலும் ஒரு 19 மசோதாக்கள் வெறும் பத்தே 10 நிமிடங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன.


கடந்த கூட்டத் தொடரிலும் இதே அவல நிலைதான். அதாவது அப்போது நிறைவேற்றப்பட்ட 14 மசோதாக்கள் மக்களைவையிலும், இன்னொரு மசோதா மாநிலங்களையில் வெறும் 10 நிமிடங்களிலும், 26 மசோதாக்கள் 30 நிமிடங் களிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக வங்கி மோசடி மற்றும் திவால் திருத்த மசோதா 5 நிமிடத்திற்குள் நிறைவேற்றப்பட்டுள்ளது. வரி விதிப்பு சட்டம் குறித்த மசோதா 6 நிமிடத்திலும் தீர்ப்பாய சீர்திருத்த மசோதா 9 நிமிடத்திலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. போதிய விவாதம் இல்லாமல் நாடாளுமன்றத்தில் மசோதாக்கள் சட்டமாக்கப்படுவது குறித்து உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தனது கவலை தெரி வித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் மத்தியில் ஆளும் கட்சியினர் எதையும் பொருட்படுத்துவதாக தெரியவில்லை. மாறாக விவாதம் கோரும் எதிர்க்கட்சி எம்.பிக்களை சஸ்பெண்ட் செய்கிறது.

விவாதம் இல்லாமல் நாடாளுமன்றத்தில் மசோதாக்கள் ஒருசில நிமிடங்களில் நிறைவேற்றப்படுவதுதான் நாடாளுமன்ற ஜனநாயகமா? எதை நோக்கி செல்கிறது இந்த நாடாளுமன்ற நடைமுறை?



பாமயன்



# பாதி வெற்றிதான், மீதி வெற்றி எப்போது?

**ஒருவழியாக பெரும் போராடங்களுக்குப் பின்னர் மூன்று வேளாண் சட்டங்கள் திருப்பப் பெறப்பட்டுள்ளன. இது ஒரு வகையில் வெற்றி என்றாலும், பாதி வெற்றி என்றுதான் கூறவேண்டும்.**

ஏனென்றால் ஏற்கவே கடும் பொருளாதார நெருக்கடியில் உள்ள உழவர்கள் இந்தச் சட்டங்களைப் திரும்பப் பெற்றதால் மட்டும் என்ன பெரும் பயனைப் பெறப் போகிறார்கள்? நெருக்கடியில் இருந்து கொஞ்சம் தப்பி இருக்கின்றார்கள். உண்மையில் உழவர்களின் சிக்கல்கள் என்ன?

உழவர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. முற்றிலுமாக சந்தையைக் கட்டுப்படுத்த அனுமதித்துவிட்ட பின்னர் வணிகர்களுக்குச் சாதகமான சந்தை உழவர்களுக்குச் சாதகமாக இருப்பதில்லை. சந்தையில் விலை உயரும்போது விளைச்சல் குறைவாக இருக்கும். விளைச்சல் அதிகமாக இருக்கும்போது விலை குறைவாக இருக்கும்.

அத்துடன் உழவர்களின் இடுபொருள்களின் விலை உயர்வு, தொழிலாளர்களின் சம்பள உயர்வு போன்றவற்றுக்கு இணையாக விளைபொருட்களின் விலை கிடைப்பதில்லை. இந்த இக்கட்டான சூழலைச் சரி செய்ய அரசுகள் முன்வருவதில்லை.

குறிப்பாக வெறும் 23 பொருட்களுக்கு மட்டும் குறைந்தபட்ச ஆதாரவிலை உள்ளது. அதற்குக் குறைவாக யார் வாங்கினாலும் குற்றம் என்ற சட்டம் இல்லை. அரசுக் கொள்முதல் நிலையங்கள் மட்டுமே இந்த விலைக்கு வாங்குகின்றன. சிலர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்பு உட்கார்ந்து கொண்டு குறைந்தபட்ச ஆதார விலைக்கு பொருட்களை வாங்கினால் 10 லட்சம் கோடி அரசுக்கு இழப்பு ஏற்படும் என்று உளறிக் கொட்டிக் கொண்டு இருக்கிறார்கள். (பார்க்க: தந்தி டிவி ஆயுத எழுத்து 29.11.21)

யாருமே வேளாண் விளைபொருட்கள் யாவற்றையும் அரசே வாங்க வேண்டும் என்று கூறவில்லை. அந்தப் பொருட்களின் குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேல் யார் வாங்கினாலும் குற்றம் என்ற சட்டப் பாதுகாப்பு இருந்தால் அரசு வாங்கினால் என்ன தனியார் வாங்கினால் என்ன உழவர்களுக்கு விளைபொருள் விற்றால் போதும். இது கூட தெரியாமல் உளறும் ‘அறிவாளிகளை’ என்னவென்பது?

அரசு பல்வேறு வகையில் மக்களுக்கு நியாய விலைப் பொருட்கள், மாணவர்களுக்கு உணவு, குழந்தைகளுக்கு இணை உணவு போன்றவற்றின் மூலமாக விளைபொருட்களை வாங்குகின்றது. அதற்காகத்தான் பணம் செலவிடப்படுகிறது. அதில் உள்ள முறையற்ற கொள்முதல், ஊழல் போன்றவற்றைக் களைவது அரசின் கடமை.

வெளிச் சந்தையில் விளைபொருளை அநியாய விலைக்கு வாங்குபவர்களைத் தடுப்பதற்குத்தான் நாம் அனைத்து விளைபொருள்களுக்கும் குறைந்தபட்ட ஆதார விலை கேட்கிறோம். இன்னும் சொல்லப்போனால் குறைந்தபட்ட நியாய விலை உழவர்களுக்கு வேண்டும்.

அதன் மூலம் அவர்களது வாழ்க்கைக்கு உத்தரவாதம் கிடைக்கும். ஆனால் குறைந்தபட்ச ஆதார விலையை விடக் குறைவான விலையில் சந்தையில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதிகபட்ச சில்லறை விலைக்குமேல் விற்றால் எப்படிக் குற்றமோ அப்படி குறைந்தபட்ட நியாய விலைக்குக் குறைவாகப் பொருட்களை வாங்குவோர் மீது நடவடிக்கை எடுத்தால் உழவர்களுக்கு சிக்கலே இல்லை.

அப்படி என்றால் அதிகமாக பொருட்கள் வரும்போது என்ன செய்வது? என்ற வினா வரும். அதற்கு அரசு வேளாண்மை உற்பத்திப் பரிந்துரையைச் செய்ய வேண்டும். எந்த நிலத்தில் எந்த பயிர், எந்தக் காலத்தில் எந்தப் பயிர் என்ற உறுதியான பரிந்துரையை அதற்கான கடன் போன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாக பருப்புகளையும், எண்ணெய்களையும் இறக்குமதி செய்கிறோம். அதற்கு ஏற்றவாறு இறக்குமதியைக் குறைத்து உள்ளூர் உழவர்களுக்கு பயன்தரும் வகையில் விதிகளை உருவாக்க வேண்டும். ஆகவே விளைச்சலையும் (உற்பத்தியையும்), பகிர்வையும் (விநியோகத்தையும்) கண்காணிக்கும் பணி அரசுத்துறைகளுக்கு வேண்டும். அதன்மூலம் அதிக உற்பத்தியும் ஏற்படாது, பற்றாக்குறையும் வராது.

உலகமயமாக்கம் என்பதே பலரது கைகளில் பரந்து கிடந்த செல்வங்களை சிலரது கைகளில் கொண்டு சேர்க்கும் ஏற்பாடு என்பதை நாமறிவோம். இந்த அடிப்படையில் உற்று நோக்கினால் எந்தகைய சட்டங்கள் எதற்காக வருகின்றன என்பதை புரிந்து கொள்ள முடியும்.

கடந்த ஓராண்டாக நடந்த வீரஞ்செறிந்த உழவர் போராட்டம், அசைக்க முடியாதவை என்று கருதப்பட்ட இருக்கையை ஆட்டங்காணச் செய்திருக்கிறது. அதன் விளைவாக மூன்று சட்டங்களும் பின்வாங்கப்பட்டிருக்கின்றன.

இதற்காக இந்திய மக்கள்நாயக மண்ணில் பலியான உயிர்கள் பிரிட்டானியர் முற்றாள்மைக்குக் கொடுத்ததைவிடக் கூடுதலே. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகளின் இந்த பேசாமை மக்களாட்சி மாண்புக்கு வைக்கப்படும் வேட்டு என்றே கூறவேண்டும்.


வேளாண்மை என்பது மாநிலப் பட்டியலில் உள்ளது. ஒன்றிய அரசு அதில் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டு மாநில அரசுகள் பார்த்துக்கொள்ளட்டும் என்று வெளிப்படையாக அறி வித்துவிட வேண்டும். ஏனென்றால் வேளாண்மை என்பது பகுதி சார்ந்தது. உற்பத்திச் செலவும் மாறும், விளைச்சலும் மாறும். எனவே மாநிலங்கள் தனித்த வேளாண்மை மண்டலங்காக அறிவிக்கப்பட வேண்டும்.

அதற்காக சட்ட திட்டங்களை வகுக்கும் பணி மாநில அரசுகளைச் சேர வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பானவற்றில் மட்டுமே ஒன்றிய அரசு தலையிட வேண்டும்.

**மாநிலங்கள் பல துணை மண்டலங்களை உருவாக்கி அவற்றுக்கு அதிகாரமளித்து, விளைச்சலையும், கொள்முதலையும் முறைப்படுத்த வேண்டும். ஆனால் முற்றிலும் சந்தையில் பெரும் பணத்தை வைத்துக் கொண்டு அறுவடைக் காலத்தில் வாங்கிக் குவிக்கும் வணிகர்களுக்கான சட்டங்களை ஆக்குவதும், அதற்குத் திட்டங்கள் போடுவதும் உழவர்களின் வாழ்கைக்கு உயிரூட்டும் செயலாக இருக்க முடியாது.**

சீர்திருத்தம் செய்யப்படும் சந்தை உழவர்களின் கைக்கு எட்டும் தொலைவில் இருக்க வேண்டும். அதற்கு மாற்றாக சீர்திருத்தம் என்பது தனியார் கைகளில் சந்தையை ஒப்படைப்பதல்ல, அதை மக்கள்மயப்படுத்துவது ஆகும்.

தொடர்புக்கு: **9842048317**




## விவசாயிகள் சங்க பொதுச் செயலாளராக பி.எஸ்.மாசிலாமணி தேர்வு

திருச்சியில் நடைபெற்ற விவசாயிகள் சங்க மாநிலக் குழுவில் பி.எஸ்.மாசிலாமணி தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். இதையொட்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருவாரூர் நகரக்குழுவும், ஒன்றியக்குழுவும் இணைந்து அவருக்கு பாராட்டு விழாவை நடத்தியது. விழாவிற்கு நகரச் செயலாளர் எம்.ஏ.மாரியப்பன் தலைமை வகித்தார். ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர் தியாகராஜன் முன்னிலை வகித்தார். நகர செயற்குழு உறுப்பினர் வி.தர்மதாஸ் பாராட்டிப் பேசினார்.



இளசை கணேசன்



## தமிழ் தேசிய பேரியக்கத் தலைவர் பெ.மணியரசன் அவர்கள் தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி இருக்கிறார்.

ஆழம் பார்க்கிறாரா? அரங்கேற்றப் போகிறாரா? என்பதல்ல...

'தமிழ் இந்து' என்ற புதிய கருத்தாக்கத்தை விதைக்கிறார்.

* இந்து மதத்தில் பிறப்பு அடிப்படையில் மனிதர்களைப் பிரிக்கும் வர்ணாசிரமம், மனுநீதி, ஆரிய, மொழி, இன ஆதிக்கம் இருந்து வருகிறது.

* தமிழர்களையும், தமிழையும் தீண்டத்தகாதவர்களாக ஆரிய பிராமணியம் ஆக்கி வைத்துள்ளது.

* ஆரிய பிராமணர்கள் 'இந்து' என்ற சொல்லை பொதுவான மதத்திற்குப் பயன்படுத்துகிறார்கள்.

* இதை பிராமணர் அல்லாத அனைத்து இன மக்களையும் சூழ்ச்சியாக ஆதிக்கம் செய்வதற்கு பயன்படுத்துகின்றனர்.

இவற்றை முறியடிக்கவே நாம் நம்மை 'தமிழ் இந்து' என்ற வரையறையுடன் அடையாளம் செய்து கொள்ள வேண்டும்.

இப்படிச் சொன்ன இவர் இப்போது எப்படிப் பேசுகிறார்!

வேதங்களில் நம்பிக்கை கொண்டவர்களை 'ஆரிய இந்து' என்று வகைப்படுத்தலாம்.

வேதம், மனுநீதி, பகவத்கீதை உள்ளிட்டவற்றை ஏற்றுக் கொள்ளாத தமிழ் சமயங்களான சைவம், வைணவம் மற்றும் சைவத்தின் பன்னிரு திருமுறைகள், வைணவத்தின் பாசுரங்கள் உள்ளிட்ட சைவ வைணவ இலக்கியங்களில் நம்பிக்கை கொண்டவர்களை 'தமிழ் இந்து' என்று வகைப்படுத்தலாம்.

இப்படி இன்னும் விரிவுபடுத்துகிறார்.

எதைத் தின்றால் பித்தம் தெளியும் !என்று தேடித் திரிந்து பித்தத்துக்கு மருந்து கண்டுபிடித்தவர் போல் பேசுகிறார்.

"வர்க்கப் போரின் கூர்முனை என்ற குறி இலக்கிலிருந்து சிந்தனை தடம் மாறும் போது மற்ற எல்லாவற்றிலும் தடுமாற்றம் ஏற்படவே செய்யும்"".

வருணாசிரம , மனுநீதி, பார்ப்பனிய, சமஸ்கிருத ஆதிக் கத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

எப்படி ஒழிப்பது?

'தமிழ் இந்து' என்று உருவாக்கிவிட்டால் பிராமணர்களின் ஆதிக்கம் ஒழிந்துவிடுமா?

வேதங்களில் நம்பிக்கை கொண்டவர்களை ஆரிய இந்து என்று வகைப்படுத்துகின்றீர்களே!

தமிழ்நாட்டில் வேதங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் எவ்வளவு பேர்?

பெரும்பாலும் பிராமணர்களே வேதங்களில் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பார்கள்.

ஆகச் சிறுபான்மையினர்தான் அத்தனை இன மக்களையும் ஆதிக்கம் செய்கிறார்கள்.

அப்படி இருக்கையில் தமிழ்நாட்டில் பிராமணரல்லாத பெரும்பான்மையினர் ஒன்று சேர்ந்தால் இந்து மதத்தில் இருந்து பிராமணர்களை வெளியேற்றிவிட முடியாதா?

இந்திய விடுதலைப் போரில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்றினோமே அதுபோன்று இந்து மதத்தில் இருந்து பார்ப்பனர்களையும் விரட்டி அடிக்கலாமே!

அப்படி வெளியேற்றிவிட்டால் பிராமணர்கள் ஆதிக்கம் எங்கிருந்து வரும்?

இந்து மதத்தை முழுமையாக கைப்பற்றி விட முடியுமே!

இந்து மதத்திலிருந்து ஏன் தனியாகப் பிரிந்து வர வேண்டும்?

பிறகு எதற்கு 'தமிழ் இந்து' தேவையே இல்லையே!

* சமஸ்கிருத வேதங்களிலோ, தமிழ் இலக்கியங் களிலோ,உபநிடதங்களிலோ, இதிகாசங்களிலோ, ராமாயணம் மகாபாரதம் போன்ற காப்பியங்களிலோ ஒரு இடத்தில் கூட 'இந்து' என்ற சொல் காணப்படவில்லை.

* சமஸ்கிருத இலக்கியங்கள் எதிலும் மதத்தைக் குறிக்கும் சொல் பயன்படுத்தப்படவில்லை

* இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்து பகுதிக்கு வந்தவர்களுக்கு அங்குள்ள மக்களை குறிக்க எந்த மொழி? எந்த இனம்? என்று தெரியவில்லை.

*ஓடுகின்ற 'சிந்துநதியின்' சமவெளியை அடையாளப்படுத்தி 'சிந்துக்கள்' என்று சொன்னார்கள்

* 'சிந்து' என்ற சொல்லின் உச்சரிப்பை 'ஹிந்து' என்று சொன்னார்கள். அதுவே அயல்நாட்டில் இருந்து வருபவர் வாயில் 'இந்துக்கள்' என்று புழக்கத்தில் வந்துவிட்டது.

* 'இந்து' என்ற சொல்லும் 'இந்தியா' என்ற நாடும் பீரங்கி முனையில் உருவாக்கப்பட்டது. அது இயற்கையானது அல்ல. அயல் நாட்டாரின் படையெடுப்பால் விளைந்தது.

*ஆரியத்தின் இன்றைய வடிவமே இந்தியம்

* இந்தியத்தோடு திராவிடம் உடன்கட்டை ஏற வேண்டும்.

என்று தமிழ் தேசியர் முழங்குகிறார்கள்.

ஆரியத்தின் இன்றைய வடிவம் இந்தியம் மட்டும்தானா? இந்து என்பதும் தானே?

திராவிடம் உடன்கட்டை ஏறுகிறதோ இல்லையோ தமிழ் தேசியம் உடன்கட்டை ஏறத் துடிக்கிறது.

மதச்சார்பற்ற இந்தியத்தேசியம் இருக்கிறதா ? என்றும் தமிழ் தேசியர் கேள்வி எழுப்புகிறார்கள்

மதச்சார்பற்ற தமிழ் தேசியம் இருக்குமா? என்ற கேள்வியும் எழுகிறதல்லவா?

இப்படி 'இந்து' என்ற வார்த்தையையே தீண்டத் தகாத வார்த்தை போன்று பாவித்தவர்கள் இன்று 'தமிழ் இந்து' என்று தாராளமாக பயன்படுத்துகிறார்

'இந்து ' என்ற வார்த்தை தமிழ் சொல்லா? என்றால் அதுவும் இல்லை.

1990 பிப்.25 தேதியில் பெரியார் திடலில் தமிழ் உணர் வாளர்களுடைய மாநாடு நடந்தது.

அதில் "தமிழ் தேசிய சுயநிர்ணய உரிமை மாநாடு" என்பதில் 'சுயநிர்ணயம்' தமிழ் சொல் அல்ல என்பதால் "தமிழ்தேசிய 'தன்னுரிமை' மாநாடு" என்று கறாராக மாற்றப்பட்டது.

அப்படி இருக்க தமிழ்ச்சொல் அல்லாத இந்து என்ற சொல்லை மட்டும் இப்போது ஏன் பயன்படுத்த வேண்டும்?

இதற்கும் விளக்கம் சொல்ல வருகிறார்

இந்து மதம் என்பதை நடைமுறையில் நமது மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்

'இந்து' என்ற சொல் 'கெடு சொல்' அல்ல தமிழ்நாட்டு மக்களின் உளவியலில் ஆழ வேரூன்றிவிட்டது

இந்து என்ற சொல்லை தாரளமாகப் பயன்படுத்துவதற்கு இவ்வாறெல்லாம் நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறார்.

இந்து என்ற சொல்லை விட ' திராவிடம்' என்ற சொல் தமிழ்நாட்டு மக்களின் உளவியலுடன் இணைந்தது மட்டுமல்ல..

50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டை ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறது.

'தமிழ் திராவிடர்' என்று கூறுவீர்களா?

தமிழ்நாடு உள்ளிட்டு உலகம் முழுவதும் முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்துகிறது.

'தமிழ் முதலாளித்துவம்' என்று கூறுவீர்களா?

தமிழ்நாட்டிலும் கார்ப்பரேட்டுகள் ஆதிக்கம் மற்றும் நுகர்வுக் கலாச்சாரம் கோலோச்சுகிறது.

'தமிழ் கார்ப்பரேட்டுகள்' என்று கூறுவீர்களா?

தமிழ்நாட்டில் ஆர் எஸ் எஸ் காலூன்றத் தொடங்கியுள்ளது. காலூன்றியதும்...

'தமிழ் ஆர்எஸ்எஸ்' என்று கூறுவீர்களா?

'பிராமணர் அல்லாத தமிழ் இந்து' என்று கூற உங்களுக்கு துணிச்சல் இருக்கிறதா?

கண்டிப்பாக இருக்காது! காரணம்

அது திராவிடர்களின் கோஷம்.

உங்களைப் பொறுத்த அளவில் பிராமணர்களை தமிழர் களாக ஏற்க தயாராகவே இருக்கிறீர்கள்.

1999 தமிழ்தேசிய தன்னுரிமை மாநாட்டில்

"பார்ப்பனர்கள் பார்ப்பனியத்தையும் ஆரியத்தையும் விட்டு விட்டு தமிழ் தேசியத்தை ஏற்க வேண்டும் என்று அன்றே மணியரசன் வேண்டுகோள் விடுத்தார்.

பார்ப்பனர்களை அழைப்பதும், பாசிசத்தை அழைப்பதுவும் ஒன்று என்று இவர்களுக்குத் தெரியாதா?

தங்களின் உயிர் மூச்சாகிய பார்ப்பனியத்தை ஆரியத்தை பார்ப்பனர்கள் விட்டுவிடுவார்களா?

தமிழ் தேசியத்தை பார்ப்பனர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

முரண்பட்ட எதிரிக்கு அழைப்பு விடலாமா?

அதே மேடையில் இதற்கு எதிர்ப்பும் கிளம்பியது.

"தமிழ் தேசியத்தை ஏற்றுக் கொள்பவர்கள் பார்ப்பனர்களை இயக்கத்தில் சேர்க்கக் கூடாது"

என்று அதே மாநாட்டு மேடையில் அருள்மொழி அவர்கள் மறுப்பு தெரிவித்தார்..

பார்ப்பனர்களுக்கு யார் எதிர்ப்பு? யார் ஆதரவு? என்று புரிகிறதா?

மதம் அரசியலுக்குள் புகுந்து மதவாத அரசியலை நடத்தும். ஆனால் இங்கே இவர்கள் அரசியலை மதத்திற்குள் புகுத்துகிறார்.

'தமிழ் இந்து மதத்தில்' சாதிகளுக்கு இடம் உண்டா? என்னென்ன இடம்?

**பொருளாதார அடிப்படையிலான உற்பத்தி உறவுகளின் தொடர்ச்சியான இயக்கத்தில் ஏற்படும் முன்தேவைகளை நோக்கி பயணப்படும் இயக்கப் போக்கே வரலாறாக மாறுகிறது.**
**– ஏங்கல்ஸ்**



சமூக நீதிக்கு இடம் உண்டா? எந்த வகையில்?

இந்து மதத்தில் பார்ப்பனியம் ஆதிக்கம் செலுத்துகிறது !

'தமிழ் இந்து' என்பதில் யாராவது ஆதிக்கம் செலுத்து வார்களா? பார்ப்பனரல்லாத உயர் சாதிகள் அல்லது இடை நிலைச் சாதிகள் ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு உள்ளதா?

இந்துமதம் இந்திய அளவில் பெரும் பான்மையை அடை யாளப் படுத்துகிறது!

இதேபோன்று 'தமிழ் இந்து மதம்' தமிழ்நாட்டின் பெரும் பான்மையை அடையாளப்படுத்துமா?

இந்து மதப் பெரும்பான்மை இந்திய அளவில் சிறுபான்மை முஸ்லிம்களை எதிரியாக அடையாளப்படுத்திச் சித்தரிக்கிறது

தமிழ் இந்து மதம் தமிழ்நாடு அளவில் யாரை எதிரியாக அடையாளப்படுத்தி சித்தரிக்குமா?

இதுபோன்ற கேள்விகளுக்கு எல்லாம் விடை தேட வேண்டும்

"இந்து மதம் என்ற கருத்தியல் தமிழர்களின் உளவியலோடு ஒன்றி விட்டது, எனவே இந்து என்ற சொல் 'கெடு சொல்' அல்ல" என்ற அளவுக்கு போகிறார்கள்.

மணியரசன் அவர்களின் 'கருத்தியல்' பற்றிய பார்வை அறிவியல் பூர்வமாக இல்லை.

* "கருத்துநிலை உணர்வுகளை தீர்மானிக்கிறது உணர்வுகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன."

* கருத்து நிலையே எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும்.

* கருத்தியல் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டால் அது மாறாது என்று கருத்து முதல்வாதத்தை மாறாநிலை வாதத்தை முன்னெடுக்கிறார்.

ஆனால் கருத்துநிலை எதிலிருந்து உருவாகிறது என்பதை கூறாமல் விட்டுவிடுகிறார்.

*"கருத்து நிலை அடிப்படையில் சமூக உருவாக்கம், சமூக இயக்கம் ஆகியவை தீர்மானிக்கப் படுவதில்லை ".

* மாறாக "சமூக உருவாக்கம், சமூக இயக்கம் ஆகிய வைதான் சமூக சிந்தனைகளை, சமூக கருத்தியல்களை, சமூக உணர்வுகளை உருவாக்குகின்றன".

* "உற்பத்தி, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, உற்பத்தி




உறவு ஆகியவற்றின் அடிப்படையே சமூகத்தையும், சமூக இயக்கத்தையும், அதன் போக்கையும் தீர்மானிக்கிறது''.

* ''சமூக வளர்ச்சியும் சமூக மாற்றமும் இந்த அடிப்படையிலேயே ஏற்படுகின்றது''.

இந்த அடிப்படையில்தான் ....

மதம் தோன்றுவதற்கான சூழல், தோற்றம், வளர்ச்சி, மீள்உருவாக்கம் போன்றவைகளை புரிந்து கொள்ள வேண்டும்.

கி.பி. 6–9 ம் நூற்றாண்டுகள் நில உடைமையின் காலம் ஆகும்.

* பிராமணிய தலைமையை அடிப்படையாகக் கொண்ட நிலவுடமை அரசுகளாக பல்லவ, பாண்டிய அரசுகள் உருவாகின.,

* கோவில்கள் சார்ந்த வைதீகம் பரவலாக பரப்பப்பட்டது.

* தமிழ்நாட்டில் பார்ப்பனிய ஆதிக்கம் என்ற நிகழ்வுப் போக்கு துவங்கியது.

* சமய மோதல்களில் பிராமணிய மேலாண்மை என்பதற்கு அரசுகள். ஆதரவு தெரிவித்தன.

* வேத மறுப்பு சமயங்கள் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொண்டன.

* வேளாண்மை விரிவாக்கம் கோவில் சார்ந்த நகரங்களாக மாற்றம் பெற்றன.

* இவை அரசு, நிலவுடைமையாளர்கள், பிராமணர்கள் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

பார்ப்பனிய ஆதிக்கம் என்பது தனித்த ஆதிக்கம் அல்ல! அரசர்கள் மற்றும் நிலவுடைமையோடு சேர்ந்த ஆதிக்கம் என்பதாகும்.

* சமுதாய உற்பத்தியில் உற்பத்தி சக்திகளின் உழைப்பு சுரண்டப்படுகிறது. இதன் மூலம் ஏற்றத்தாழ்வுகள் உருவாகின்றன. அதை ஒட்டி சமூக மாறுதல்கள் நிகழ்கின்றன.

இவற்றில் வளர்ச்சி அடைந்த ஆதிக்க சக்திகள் பின்தங்கிய மக்களை அரசு ஆதரவுடன் ஆதிக்கம் செய்கிறது.

இது ''ஏற்றத்தாழ்வுகளுடன் இணைந்த வளர்ச்சி விதி'' என்பதாகும்.

சமூக வாழ்நிலைதான் சமூக சிந்தனையை, சமூக கருத்தியலைத் தீர்மானிக்கிறது.

மதம், சாதி, இனம் போன்ற அடையாளங்களின் பண்பாட்டு நிகழ்வுகளே சமுதாயத்தை இயக்குகிறது.

என்பதையும் மணியரசன் நிலை நாட்ட முயல்கிறார்.

இதன் மூலம் உண்மையான சமுதாயத்தின் இயங்கு சக்தி எது என்பது மறைக்கப்படுகிறது.

''உற்பத்தி வினியோகம்' என்பதில்தான் சமுதாயம் இயங்குகிறது.

இதில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி என்பதுதான் அடிப்படையானவை. இதற்கு ஏற்ப உற்பத்தி உறவில் மாற்றம் வேண்டும்.

மாற்றம் ஏற்படவில்லை எனில் முரண்பாடு உருவாகும். இது போராட்டமாக மாறும்.

இதுதான் வாழ்வியலிலும் பிரதிபலிக்கும்.

இவைதான் சமுதாயத்தின் 'இயங்கு சக்தி'. இதுதான் சமூக மாற்றத்தின் அடிப்படை.

சமூக மாற்றத்திற்கு ஏற்ப சிந்தனையும் , கருத்து நிலைகளும், மதம் சாதி பற்றிய கருத்தியலும் மாறும் என்பது மூடி மறைக்கப் படுகிறது.

கருத்து முதல்வாதம், மாறா நிலை வாதம் போன்றவை பிற்போக்கு பழமைவாதிகள் மற்றும் ஆளும் வர்க்கத்திற்கே பயன்படும்.

* தமிழ் இந்து என்று உருவாக காரணம் என்ன ?

* இதன் பின்னணியில் இருப்பது யார்?

* இதன் நோக்கம் எத்தகையது?

* தமிழ் தேசியம் தவிர்ப்பது எது?

இவற்றை முக்கியமாக அறிந்து புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய உலகமயச் சூழலில் பொருளாதார சமூக அரசியல் மற்றும் பண்பாட்டு நெருக்கடிகள் அதிகரித்து வருகிறது

இந்திய ஒன்றியத்தில் இந்துத்துவா ஆட்சி பல்வேறு நெருக்கடிகளை

உருவாக்கியுள்ளன. இது அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளது

இந்த நெருக்கடிகளை மூடிமறைக்க, திசைதிருப்ப இந்திய அளவில் மதவாத அடையாள அரசியல் போதவில்லை.

அந்தந்தப் பிரதேசங்களுக்கு ஏற்ப இந்துத்துவ அரசியல் புதிய வடிவில் கட்டமைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில், தமிழக நிலைமையில், தமிழக தன்மைக்கு ஏற்ப தமிழ் இந்துத்துவ அரசியல் உருவாக்கப்படுகிறது.

இதில் இடைநிலை, கடைநிலை சாதிகள் ஒன்றிணைப்பது மட்டுமல்ல மத அடிப்படையில் ஒன்றுபடுத்தப்படுகிறது.

இதன் வெளிப்பாடுதான் 'தமிழ் இந்து' என்று உருவாக காரணமாக அமைகிறது.

அடுத்து இதன் பின்னணியில் இருப்பது யார்?

தமிழ் தேசிய அரசியல் இந்துத்துவ மத அரசியலிடம் சரண் அடைந்து விட்டதாகத் தெரிகிறது

தமிழர்களின் சமத்துவ, மனிதநேய, சீர்திருத்த பண்புகளை மறைக்க, திசை திருப்ப, மதவெறி சக்திகள் இந்து தமிழ் உருவாக்கத்தின் பின்னணியில் இந்துத்துவ சக்திகள் உள்ளன.

இந்துத்துவ வாதிகளின் வழிகாட்டுதலுக்கு இணங்கவே செயல்படுகிறது.

'தமிழ் இந்து' உருவாக்கதின் நோக்கம் என்ன?

பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டு நெருக்கடிகளிலிருந்து உழைக்கும் மக்களை வர்க்கமாக திரள்வதை, அரசியல் சக்தியாக வளர்வதை தடுத்தல், பிளவு படுத்தி திசை திருப்பப்படுகிறது.

மதம், சாதி, நிறம், இனம், மொழி போன்று பல்வேறு அடையாளங்களைத் தூண்டி அடையாள அரசியல் முடுக்கி விடப்படுகிறது.

நெருக்கடிக்கான காரணங்களை அடையாளம் சார்ந்து விளக்கமளித்து, அடையாள வெறிகளே தீர்வு என்று முன்னிறுத்தப்படுகிறது

இந்து மதவெறியும் இந்த அடிப்படையில்தான் தூண்டி விடப்பட்டு வகுப்பு வெறியாக கட்டமைக்கப்படுகிறது.

வறுமை, வேலையின்மை, அறியாமை, பின்தங்கிய நிலைமைகள் போன்றவற்றை மதவாதம் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது.

கொள்கை சார்ந்த அரசியல் உணர்வு மங்கிய நிலையில் இந்த திசை திருப்பல் முயற்சி நடத்தப்படுகிறது.

இதில் பழமைவாதம் பிற்போக்கு மரபுகள் புதுப்பிக்கப் படுகின்றன.

அடுத்து தமிழ் தேசியம் தவிர்ப்பது எது?

தமிழ் தேசிய உணர்வு உட்பட அனைத்து அடையாளங்களும் அதன் பெருமிதத்தின் மீதே கட்டப்படுகிறது.

பண்டைய தமிழர்களின் பெருமிதம் பற்றி பேசப்படுகிறதே தவிர, தமிழர்களின் பெருமிதத்திற்கான அடிப்படை பற்றி பேசுவது இல்லை.

பண்டைய காலம் தொட்டு இன்றுவரை தமிழர்கள் உருவாக்கி வளர்த்துள்ள மூன்று அடிப்படைகள் தமிழர்களின் பெருமிதங்களுக்கு காரணமாகும்.

1. அனுபவ அறிதல், அன்பு நிறைந்த அறவாழ்க்கை.
2. மனித நேய, சமத்துவப் பண்பு.
3. அநீதிக்கு எதிராக வீரச்சமர் புரிதல்.

இந்த மூன்றின் மீதுதான் தமிழர்களின் பெருமிதம் கட்டமைக்கப்பட்டு இருக்கிறது

தமிழ் தேசியம் இதைப் பற்றி பேசுவதில்லை.

தமிழ் தேசிய அரசியல் உணர்வில் வர்க்க உணர்வுக்கு இடம் உண்டா? வர்க்கப் போராட்டத்தில் நீங்கள் எந்தப் பக்கம்? என்பதே நமது கேள்வி!

இதற்கு பதில் சொல்வதை தவிர்ப்பார்கள்!.

தமிழ் தேசியத்தை நாம் எதிரிகளாகப் பார்க்கவில்லை.

எதிரிகளிடம் தமிழ் தேசியம் சரணடைந்து விடக் கூடாது என்பதற்காக கூறுகிறோம்.

தமிழ் தேசியம் முற்போக்குப் பாதையில் பயணிக்க விரும்புகிறோம்.

சைவ வைணவ சமயங்கள் தமிழர்களின் சமயங்கள் என்று மணியரசன் கூறுகிறார். சீமானும் இதையேதான் கூறுகின்றார்.

இதற்கு என்ன ஆதாரம்?

சிவன் திருமால் வழிபாடு எப்போது எப்படி சமயமாக உருவாகியது?

யாரால் உருவாக்கப்பட்டது?

இரண்டு சமயங்களிலும் ஆதிக்கம் செலுத்தியது யார்?

பிராமணர்கள் தானே ஆதிக்கம் செலுத்தினார்கள்!

சைவம்வைணவம் இரண்டுமே சமண – பௌத்த மதங்களை குறிவைத்து எதிர்த்துத் தாக்கி அழித்ததற்கு என்ன காரணம்?

சமணத்தை எதிர்ப்பதற்கு சைவமும், பௌத்தத்தை எதிர்ப்பதற்கு வைணவமும் உடன்பாடு கண்டு கடும் தாக்குதல் நடத்தியதற்கு என்ன காரணம்?

'அன்பே சிவம்' என்று பேசிய சைவம் 8000 சமணர்களை கழுவில் ஏற்றி கொன்றது ஏன் ?

நந்தனாரை தீயில் இறங்க வைத்து கொன்றது ஏன்?

தில்லை கோவிந்தராஜ பெருமாள் சிலையை கடலில் ஏன் தூக்கி எறியவேண்டும்?

ஆண்டாள்கள் உருவாவதை ஏன் தடுக்கவில்லை?

சமணம் பௌத்த கோயில்களை சைவ வைணவ கோயில்களாக மாற்றியது ஏன்?

இவையெல்லாம் தமிழர்கள் செய்வார்களா?

சிவன் தான் முழுமுதற் கடவுள் வேறு யாரையும் வழிபட மாட்டோம் !

திருமால்தான் முழு முதல் கடவுள் வேறு யாரையும் வணங்க மாட்டோம்!

என்று எதிரும் புதிருமாக இருந்தவர்கள் எப்படி ஒன்றுபட்டார்கள்?

''அரியும் சிவனும் ஒண்ணு இதை அறியாதவர் வாயில் மண்ணு''

என்று ஒன்று பட்டது எப்படி?ஒன்று படுத்தியது யார்?

சைவமும் வைணவம் ஒன்றுபட்டதுடன் இந்து மதத்தில் எப்படி ஒன்றிணைந்தன?

இதை ஒன்று படுத்தியவர் யார்?

தொடக்க வழிபாடாக இருந்த முருகவழிபாடு முன்னுக்கு கொண்டு வராமல் சிவன் திருமால் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட என்ன காரணம்?

முருகன் சிவனுக்கு மகனானது, விநாயகருக்கு தம்பியானது எப்படி?

சக்தி வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு ஏன் சமயங்களாக உருவாகவில்லை?

சைவத்தின் திருமுறைகள், வைணவத்தின் பாசுரங்கள் தமிழில் பரப்பப்பட்டதற்கு என்ன காரணம்?

சமண பவுத்த சமயங்களைப்பின்பற்றித்தான் தமிழில் பரப்பப்பட்டன என்பதை மறுக்க முடியுமா?

சைவமும்,வைணவமும் தமிழர்களுக்கு தாய் மதம் இல்லை. தமிழர்கள் உருவாக்கிய சமயங்களும் இல்லை !.


இதுபற்றி நவ.21–27 ஜனசக்தி கட்டுரையில் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

* தற்போது தமிழர்களின் மனித நேய, சமத்துவ அறவழிப் பண்பாட்டுக்கு எதிராக புதிய சவால்கள் எழுந்துள்ளன.

* இவைகளை தமிழர்கள் ஒன்றுபட்டு முடிவெடுக்க வேண்டும்.

* உலகமய அரசியல் சூழலில் கார்ப்பரேட் மற்றும் பார்பனீய எதிர்ப்பு என்பதை பன்முகத் தன்மைகளை உள்ளடக்கிய வர்க்கப் போராட்டத்தின் மூலமே இந்த புதிய சவால்களை எதிர்த்து நின்று முறியடிக்க முடியும்!

தொடர்புக்கு: **82204 68816**



**மதம் என்பது அடக்கப்பட்ட மக்களின் துன்பு துயரங்களின் பெருமூச்சு. இதயமற்ற உலகத்தின் இதயம். ஆத்மா இல்லாத நிலையில் உள்ள ஆத்மா. ஆயினும் மதம் மக்களை மயக்கும் அபின்.**

**- மார்க்ஸ்**

## ஆஷா பணியாளர்கள் போல் ஒன்றிய அமைச்சர்கள் அனைவரும்

# ரூ.3,500 வாங்கிக்கொண்டு குடும்பம் நடத்தி காட்டுங்கள்

### கே.சுப்பராயன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சவால்



கோவிட் – 19 பெருந்தொற்று மற்றும் அது தொடர்பான அம்சங்கள் குறித்து விதி எண் 193–ன் கீழ் மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில் தோழர் கே.சுப்பராயன் எம்.பி. பங்கேற்றுப் பேசினார். அவர் பேசியது பின்வருமாறு:

ஒரு அரசாங்கம் எவ்வாறு செயல்படக் கூடாது என்பது நோய் தொற்று காலத்தை நிர்வகித்த இந்த அரசாங்கத்தின் மூலம் தெரிய வருகிறது. ஜவஹர்லால் நேரு காலத்தில் இருந்து இன்று வரையிலும், இவ்வளவு மோசமான நிர்வாகம் செய்கிற ஒரு அரசை இது வரை இந்தியா கண்டதில்லை. இது ஏதோ எதிர்க்கட்சி என்ற முறையில் வெறுப்பால் சொல்லுவது அல்ல. நடைமுறை அனுபவங்களின் மூலம் கிடைத்த விபரங்களின் அடிப்படையிலேயே இந்த மதிப்பீட்டை வெளிப்படுத்துகிறோம். முதலில், 2020ஆம் ஆண்டு ஜனவரியிலேயே உலக சுகாதார நிறுவனம், உலகத்தின் புகழ்பெற்ற மருத்துவ விஞ்ஞானிகள் எல்லோருமே கோவிட் எவ்வளவு தீங்கு செய்ய இருக்கிறது என்பது குறத்து எச்சரித்தார்கள். ஆனால், இந்த அரசாங்கம் எச்சரிக்கையை கவனத்தில் கொண்டு முன் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டது. இதுதான் இவ்வளவு நெருக்கடிகளுக்கும் மூலகாரணம் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அதே மாதிரி அறிவித்ததற்கு பின்னர் ஒன்று தடுத்திருக்க வேண்டும்; தடுக்கவில்லை. ஆனால், இந்த அர சாங்கம் என்ன செய்தது என்றால், டிரம்பை கூட்டிக்கொண்டு இங்கே வந்து அவருக்கு நமஸ்தே விழா நடத்தினார்கள். இதன் மூலம் அமெரிக்காவில் இருந்து வந்தவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படவில்லை. எந்த விமான நிலையங்களிலும் மருத்துவ பரிசோதனை நடக்கவில்லை. இதன் மூலம் இந்த அரசாங்கம் இந்திய நாடு முழுவதையும் இந்த நோய்த்தொற்று பரவ காரணமாக இருந்தது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதே மாதிரி இதைத் தடுப்பதற்கு என்று இவர்கள் எடுத்த நடவடிக்கைகள் எதுவுமே முறையாக இல்லை. பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் லட்சக்கணக்கான டோஸ் மருந்து தயாரித்து இருக்கலாம். ஆனால் இந்த அரசு இரண்டு தனியார் கம்பெனிகளுக்கு அவற்றைக் கொடுத்து, அதன் மூலம் தனிப்பட்ட கம்பெனிகள் இலாபம் பெற அனுமதித்ததே தவிர, பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் தடுப்பூசி தயாரித்து எல்லோருக்கும் முறைப்படி இந்தத் தடுப்பூசி வினியோகிக்கப்பட்டு இருக்குமேயானால் இந்த நெருக்கடி ஏற்பட்டு இருக்காது. அதைச் செய்த குற்றச் செயல் இந்த அரசாங்கத்தினுடையது ஆகும். எனவே, இந்த அரசு மக்களுக்கு எதிராக குற்ற நடவடிக்கைகளில் இந்த நோய்த்தொற்று காலத்தில் ஈடு பட்டிருக்கிறது. அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக பார்க்க வேண்டுமானால், பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்ததற்கு எது காரணம்? திடீரென்று அறிவிப்பது–துக்ளக் தர்பார் மாதிரி திடீரென்று ஊரடங்கு அறிவிப்பது – லட்சக்கணக்கான மக்கள் பாதயாத்திரை போனார்கள்: ஏராளமான குழந்தைகள் மரணமடைந்தனர். இதற்கு யார் காரணம்? எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையில் எந்த முன்னெச்சரிக்கையும் இல்லாமல் திடீரென்று ஊரடங்கை அறிவித்ததும், அதே மாதிரி மற்ற சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் அனைத்தும் முடங்குவதற்கும் இந்த அறிவிப்பு தான் முழுமுதற் காரணம் ஆயிற்று. அதே மாதிரி தமிழ்நாடு அரசாங்கமே, மாநில முதலமைச்சரே மத்திய அரசிடம் நேரடியாக கேட்டிருக்கிறார். செங்கல்பட்டில் இருக்கக் கூடிய ஒருங் கிணைந்த வேக்சின் காம்ப்ளக்ஸ் இன்றுவரையிலும் ரூ. 900 கோடி செலவழித்து யூ.பி.ஏ. அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டது; பயன்படுத்தப்படவில்லை.

அவற்றில் மட்டும் உற்பத்தி செய்திருந்தால் ஏற்றுமதி செய்திருக்கலாம். உள்நாட்டு தேவைகளையும் நிறைவு செய்து இருக்கலாம். ஆனால், பொதுத்துறையை கண்டால் நம்முடைய பிரதமருக்கு உடன்பாடு இல்லை, தனியார் துறையின் மீது இருக்கும் அக்கறை பொதுத்துறைக்கு இல்லை. பொதுத் துறையின் மூலம் வருகிற வருமானம் அரசின் கருவூலத்திற்கு வரும். ஆனால் தனியார் துறையின் மூலம் வருகிற வருமானம் முழுவதும் தனிப்பட்ட கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு தான் போய் சேருகிறது. எனவே இந்த நோய்த்தொற்று காலத்திலும் கார்ப்பரேட் கொள்ளை அடிப்பதற்கு முழுக்க இந்த அரசு உறுதுணையாக இருந்தது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

அடுத்து பார்த்தோமேயானால் இதில் இறந்தவர்கள் பற்றிய கணக்கே இல்லை. பல்லாயிரக் கணக்கானவர்கள் இறக்க யார் காரணம்? தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மக்களுக்கு ஏற்படு கிற நெருக்கடிகளை தகுந்த நடவடிக்கைகளின் மூலம் காலத்தில் தீர்க்க தவறியதால்தான் இவ்வளவு மரணங்கள் நடைபெற்றன. எனவே, கொரோனாவால் மரணமடைந்த குடும்பங்கள் அனைத்திற்கும் அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். ஆஷா பணியாளர்கள் முன்களப் பணியாளர்கள். நோய்தொற்று காலத்தில் வீடு வீடாகச் சென்று கொரோனா பெருந்தொற்று பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கினார்கள்.

ஆஷா பணியாளர்களுக்கு வழங்கப் படும் ஊதியம் எவ்வளவு? ஊதியம் வழங்கப்படுவதில்லை. வெறும் 3500 ரூபாயில் அந்தக் குடும்பம் பிழைக்குமா? மத்திய அமைச்சர்கள் அனைவரும் 3,500 ரூபாய் வாங்கிக் கொண்டு குடும்பம் நடத்திக் காட் டுங்கள் பார்க்கலாம்.

பின்னர் நீங்கள் ஆஷா பணியாளர்களுக்கு ரூ.3500 கொடுக்கலாம். ஆஷா பணியாளர்கள் அனைவரும் நிரந்தர தன்மையுள்ள வேலையைச் செய்கிறார்கள். எனவே, அவர்களை நிரந்தரமாக்கி அவர்களுக்கு நியாயமான முறையில் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

நிறைவாக, நோய்த்தொற்று காலத் தில் இந்த அமைச்சரவை மக்களின் நலன்களைக் காப்பாற்றத் தவறிய குற்றச் செயலில் ஈடுபட்டு இருக்கிறது. இந்த அமைச்சரவை ஆளுவதற்கு தகுதியற்றது என்பதை நிரூபித்திருக்கிறது என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

## புதிய தொழிலாளர் சட்ட தொகுப்புகளைத் திரும்பப் பெறுங்கள்: கே.சுப்பராயன் எம்.பி.

மக்களவையில் டிசம்பர் 2 அன்று விதி எண் 377 கீழ் தோழர் கே.சுப்பராயன் எம்.பி. பேசியது பின்வருமாறு:

29 தொழிலாளர் சட்டங்களை 4 சட்ட தொகுப்புகளாக மாற்றியிருப்பது கார்ப்பரேட் ஆதரவு மற்றும் தொழிலாளர் விரோத போக்கு ஆகும். தொழிற்சங்கங்களைக் கலந்து ஆலோசிக்காமல், முத்தரப்பு கூட்டங்களை நடத்தாமல் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இந்திய தொழிலாளர் மாநாடு கூட்டப்படவில்லை. நாடாளுமன்றத்தில் விவாதங்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்தச் சட்ட தொகுப்புகள் தொழிலாளர் நலன்களுக்கு எதிரானவை ஆகும். இப்போது நடைமுறையில் இருக்கும் தொழிலாளர் சட்டங்கள் தொழிலாளர்கள், மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பங்களிப்பு ஆகும்.

குழந்தை தொழிலாளர் முறை, முன்னறிவிப்பின்றி பணியில் இருந்து விடுவிப்பது, சமூகப்பாதுகாப்பு மறுப்பு, மகப்பேறு கால பயனீடு மறுப்பு, குறைந்தபட்ச கூலி மறுப்பு இன்ன பிற புதிய தாராளமய பொருளாதாரத்தின் அம்சங்கள் இந்தத் தொகுப்புகளில் உள்ளார்ந்த முறையில் இடம்பெற்றுள்ளன. வேலை உரிமை, வாழ்வாதார உரிமை, கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை ஆகியவற்றை இந்தச் சட்ட தொகுப்புகள் மறுக்கின்றன. இந்தியா ஏற்றுக்கொண்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் முத்தரப்பு கலந்தாலோசனை மீதான 144 ஆவது கூட்டத்தின் முடிவுக்கு எதிரானவையாக இந்தச் சட்ட தொகுப்புகள் உள்ளன. எனவே, புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு பேசினார்.

# போட்டி தேர்வுகளில் தமிழ்தாள் கட்டாயம்

### அரசு முடிவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

தமிழ்நாடு அரசுத் துறைகளிலும், அரசின் பொதுத் துறைகளிலும் பணி நியமனங்கள் செய்யும் போது தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு நூறு சதவீதம் பணி நியமனம் வழங்கப்படும் என்றும், இதற்கான முறையில் நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ் மொழி பாடத்தாள் தேர்ச்சி கட்டாயம் ஆக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அரசின் இந்தக் கொள்கை அறிவிப்புக்கு செயல்வடிவம் தரும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. தமிழ் மொழித் தாளில் குறைந்தபட்சம் 40 மதிப்பெண் தேர்ச்சிக்கு கட்டாயம் ஆக்கப்பட்டிருப்பதும், இந்தப் பாடத்தில் தேர்வு பெறாவதர்களின் பிற போட்டித் தேர்வுத்தாள்கள் மதிப்பீட்டிற்கே எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டிருப்பது எல்லா மட்டங்களிலும் தமிழ் மொழி வளர்ச்சியும், வளமும் பெற உதவும் என்பதுடன் தமிழ் வழி கல்வி பயில்வதற்கும் ஊக்கமளிக்கும். முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை ‘அ’ தேர்வுகளில் நடத்தப்படும் முதன்மை தேர்வுகளில் நூறு மதிப்பெண் கொண்ட ‘விரித்தெழுதும் தேர்வாக அமையவும், பிரிவு 3. மற்றும் 4 நிலைகளுக்கான தேர்வுகளில் பொது ஆங்கிலத் தாள் நீக்கப்பட்டு, தமிழ்மொழித் தாள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும் என்றும் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதும் “எங்கும் தமிழ், எதிலும் தமிழ்” என்ற முழக்கத்தை செயலாக்கும் நடவடிக்கையாகும். இதனால் தமிழும், தமிழ் நாடும், இளைஞர்களும் மொழித் தளத்தில் மேலும் முன்னேற வாய்ப்புகள் திறந்து விடப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசின் முடிவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## அணை பாதுகாப்பு மசோதா நிறைவேற்றம்

### ● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

பாஜக ஒன்றிய அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளை தகர்த்தும், சிறுமைப்படுத்தியும் வருகிறது. இதன் தொடர்ச்சியாக அணைகள் பாதுகாப்பு மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இதன் மூலம் மாநில உரிமைகளை பறிக்கும் தாக்குதலை நடத்தும் அபாயம் உருவாகியுள்ளது. மிகுந்த நிதானத்துடனும், பொறுப்புணர்வோடும் அணுக வேண்டியபிரச்சினையில் அவசரம்காட்டத்தேவையில்லை நாடாளுமன்றத்தின் பொறுப்புக் குழு, தேர்வுக் குழு ஆகியவற்றின் ஆலோசனைக்கு மசோதாவை அனுப்பி வையுங்கள் என்ற வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களவையில் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்ததையும் அலட்சியப்படுத்தி அணைகள் பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் எந்த ஒரு மாநிலத்திலும் ஒன்றிய அரசு நேரடியாக தலையிட்டு, மாநில மக்களுக்கு எதிராக செயல்படும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசின் அதிகார அத்துமீறலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், கூட்டாட்சி கோட்பாடுகளின் மீது தாக்குதல் நடத்தி வரும் பாஜக ஒன்றிய அரசின் அதிகார அத்துமீறலை தடுத்து நிறுத்தவும், அணைகள் பாதுகாப்பு மசோதாவை திரும்பப்பெற வலியுறுத்தியும் ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## விருதுநகர் மாவட்டத்தில் , சேத்தூர், வத்திராயிருப்பு

# சிபிஐ கிளை மாநாடுகள்- சி.மகேந்திரன் பங்கேற்பு

விருதுநகர்: சேத்தூர் ஈபிஎஸ் தியேட்டரில் சேத்தூர் சிபிஐ 24வது நகர மாநாடு நடைபெற்றது. முருகேஸ்வரிராஜா, ராஜகுரு, மாரிமுத்து ஆகியோர் தலைமை வகித்தார்கள். ஒனறிய செயலாளர் வீராச்சாமி கொடியை ஏற்றி வைத்தார். தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.மகேந்திரன் தொடங்கி வைத்துப் பேசினார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட பொருலாளர் சமுத்திரம் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி ஆகியோர் வாழ்த்தி பேசினார். நகர செயலாளர் எஸ்.ராஜா வேலை அறிக்கை சமர்ப்பித்தார். செயலாளராக எஸ்.ராஜா, துணை செயலாளர்களாக அய்யணப்பன், திருப்பதி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். சேத்தூர் பேரூராட்சியில் நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், புறவழிச்சாலை ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வத்திராயிருப்பில் சிபிஐ மாநாடு நடைபெற்றது. அ.மாரிமுத்து, கா.மகாலிங்கம் ஆகியோர் தலைமை வகித்தார்கள். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி மாநாட்டை தொடங்கிவைத்துப் பேசினார். தேசிய நிர்வாககுழு உறுப்பினர் சி.மகேந்திரன் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நகர செயலாளராக என்.கோவிந்தன், உதவி செயலாளர்களாக மாரிமுத்து, காளீஸ்வரன் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

## மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி

### ● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

சுய வேலைவாய்ப்பு, தனிநபர் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பல இடங்களில் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தை வசதி இல்லாததால் நடைமுறையில் பெரும் கடனாளியாகி நிற்கின்றன. சட்டமன்றத் தேர்தலின் போது பெண்கள் கூட்டம், கூட்டமாக வந்து, “சுய உதவிக் குழுக்களில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த, எங்களிடம் எந்த நிதி ஆதாரமும் இல்லை, வரும் நாட்களில் வருமானம் கிடைக்கும் வாய்ப்பும் இல்லை. எனவே கடனை தள்ளுபடி செய்து உதவுங்கள்” என்று கண்ணீர் மல்க முறையிட்டதை மறந்து விட முடியாது.

சுய உதவிக் குழுக்களின் துயர நிலையைப் பரிசீலித்த தமிழ்நாடு அரசு ரூபாய் 2674 கோடி கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்துள்ளது. இது மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள ஆயிரக்கணக்கான பெண்களை கடன் சுமையிலிருந்து விடுதலை செய்யும். இந்த கடன் தள்ளுபடி திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்பதுடன் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தை வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

முகவை பூபேஷ்

## மாநிலங்களில்...

மகாராஷ்டிரா

# அனைத்து தேர்தல்களிலும் பாஜகவை தோற்கடிக்க வேண்டும்



விவசாயிகள் மாநாடு தீர்மானம்

மகாராஷ்டிரா மாநிலம் தெற்கு மும்பையில் உள்ள ஆசாத் மைதானத்தில் சம்யுக்த ஷேத்கார் காம்கார் மோர்ச்சா கூட்டமைப்பு (SSKM) சார்பில் விவசாயிகளின் மாபெரும் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் மகாராஷ்டிரா மாநிலம் முழுவதிலிருந்து அனைத்து சாதி, மதங்களைச் சேர்ந்த விவசாயிகள்,விவசாயத் தொழிலாளர்கள்,மற்றும் விவசாயக்குடும்பப் பெண்கள் இளைஞர்கள், மாணவர்கள் என பெருந்திரளாக லட்சக்கணக்கில் திரண்டனர். இந்த மாநாட்டில்,வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்ட பூர்வ உத்தரவாதம் அளித்தல், உத்தரபிரதேசமாநிலம் லக்கிம்பூர் கெரியில் விவசாயிகள் மீது கார் ஏற்றி பலியான சம்பவம் தொடர்பாக மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவை கைது செய்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலைநாட்களையும் அதற்கான ஊதியத்தையும் உயர்த்துதல் அந்தத் திட்டத்தை நகர்ப்புறத்துக்கும் விரிவுபடுத்துதல் உள்ளிட்ட இதர கோரிக்கைகள் நிறைவேறும் வரை விவசாயிகள் போராட்டத்தைத் தொடர தீர்மானிக்கப்பட்டது.

மகாராஷ்டிரத்தில் நடைபெறவுள்ள அனைத்து சட்டப் பேரவைத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்களில் பாஜக வை வீழ்த்த வேணடும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கர்நாடாகா

## பஜ்ரங்தள் கும்பலின் வன்முறை

கர்நாடகா மாநிலம் ஹசன் மாவட்டத்தில் உள்ள பேலூரில் ஜீசஸ் பிராத்தனை சர்ச்சில் 50 க்கும் மேற்பட்ட கிறிஸ்துவர்கள் பிராத்தனை செய்து கொண்டிருந்தனர். அப்போது, இந்துத்துவா பஜ்ரங் தல் அமைப்பை சார்ந்த 15 நபர் கும்பல் அத்துமீறி சர்ச்க்குள் நுழைந்து வன்முறைதாக்குதலில் ஈடுபட்டனர்.

அமைதியாக பிராத்தனை செய்தவர்களை மதம் மாற்றுகிறார்கள் என்று பொய்யான காரணம் கூறி தாக்குதலை நடத்தினர். தாக்குதல் சம்பவம் அறிந்து உள்ளூர் மக்கள் திரண்டு வந்ததும் வன்முறையில் ஈடுபட்ட பஜ்ரங்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் தப்பி ஓடினர். இதுசம்பந்தமாக கர்நாடக பாஜக அரசு இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இதற்கு மதநல்லிணக்க அமைப்புகள் கண்டனம் தெரிவித் துள்ளன.

உத்தரப்பிரதேசம்

## மசூதியில் கிருஷ்ணர் சிலை இந்து மகாசபை மிரட்டல்

மதுரா உத்தரப்பிரதேசம் மாநிலம் மதுராவில் உள்ள ஷாஹி இத்கா மசூதயில் கிருஷ்ணர் சிலையை நிறுவப் போவதாக அகில பாரதிய இந்து மகாசபை என்ற அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. இந்த மசூதி 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கோவிலை இடித்து மசூதி கட்டியுள்ளார்கள் என்ற காரணம் கூறி மசூதியை இடிக்க வேண்டும்என்று நீதிமன்றங்களில் வழக்கு வேறு தொடுத் துள்ளனர். இந்த நிலையில் தங்களுக்கு ஆதரவான பாஜக வின் ஆதித்யநாத் ஆட்சி இருப்பதால் மசூதியை இடிக்க முனைப்பு காட்டி வருகிறது. “மதுராவில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும் மதுராவில் அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையும் அனுமதிக்கப்படாது “ என வும் மாவட்ட ஆட்சியர் நவனீத் சிங் சஹல் கூறியுள்ளார். இவை யெல்லாம் வெறும் கண்துடைப்பு.

# 56 இஞ்ச் மார்பு சுருங்கி.. கூனி.. குறுகி.. கூவுகிறது

நாடாளுமன்றம் கூடிய முதல் நாளே இரு அவைகளிலும் உழவர் விரோத மூன்று கருப்பு சட்டங்களை திரும்பப் பெறுவதற்கான வரைவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அன்றே குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு.. இது முடிக்கப்பட்டுள்ளது.

உலக வரலாற்றில் எந்த வன்முறையும் இன்றி 700 விவசாயிகள் இறந்த பின்னும்.. வாட்டும் குளிரையும், கடும் மழையையும் பொருட்படுத்தாமல் டெல்லி எல்லைகளில் போராடிய விவசாயிகளுக்கு இது மாபெரும் வெற்றியாகும்.

இருந்தும் விவசாயிகளால் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிற பிற கோரிக்கைகளையும் மத்திய அரசு நிறைவேற்றும் வரை போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டு ஐக்கிய விவசாயிகள் முன்னணி போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறது. நீங்கள் எழுப்புகிற பிற கோரிக்கைகளையும் திரும்ப பெறுவோம் வீட்டுக்கு செல்லுங்கள் என்று நரேந்திர மோடி கூறியதை ஏற்காமல் அவர் மீது நம்பிக்கை அற்ற நிலையில் இந்த போராட்டம் தொடர்கிறது. சட்டங்களை வாபஸ் பெற்ற பின்னும் இது விவசாயிகளுக்கு ஆதரவான சட்டங்கள்,.. காலம் விவசாயிகளை புரிய வைக்கும் என்று மோடி பிதற்றிக் கொண்டு இருக்கிறார். மீண்டும் விவசாயிகளிடம் மண்டியிட்டு வேண்டுகோள் வைக்கிறார். உங்கள் கோரிக்கை பரிசீலிக்க ஒரு ஆய்வுக்குழுவை அமைக்கிறோம்.. போராட்டத்தை கைவிடுங்கள் என்றார்.

இதற்காக ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் தலைமை செயற்குழு கடந்த4ஆம்தேதி டெல்லியில்கூடி சில முடிவுகளை எடுத்துள்ளது.

மத்திய அரசு அமைத்த குழுவுடன் நமது பிற கோரிக்கைகளை பேசிட 5 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது. 2 விவசாயிகளின் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை சம்பந்தப்பட்ட மாநில அரசுடன் பேசி வாபஸ் பெறப்படும் என்று மத்திய அரசு அறிவித்தபடி.. அரியானா மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார் 212 வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளார். பிற மாநிலங்களும் விவசாயிகள் மீது உள்ள வழக்குகளை வாபஸ் பெற வலியுறுத்தப்பட்டது.

உற்பத்தி செலவுடன் 50% கூடுதல் விலை வைத்து விவசாய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

மத்திய அரசு இதுவரை இறந்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கொடுக்க வேண்டும்..

மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜித் மிஸ்ராவை உடனடியாக பொறுப்பிலிருந்து விலக்கி அவர் மீதும் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

லக்கிம்பூர் தியாகிகளுக்கும் போராட்டக் காலத்தில் இறந்தவர்களுக்கும் நினைவுச் சின்னம் எழுப்ப அரசு இடம் ஒதுக்கீடு செய்திட வேண்டும்...

என்கிற கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் தொடர்வதாகவும் அடுத்து ஏழாம் தேதி கூடி அப்போது உள்ள நிலைகளை பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று ஐக்கிய விவசாயிகள் முன்னணி அறிவித்திருக்கிறது.

இவ்வாறு தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி கூறியுள்ளார்.



# டாக்டர் வே.துரைமாணிக்கம் படத்திறப்பு புகழஞ்சலி





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினரும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளருமான டாக்டர் வே. துரைமாணிக்கம் அவர்களின் படத்திறப்பு புகழஞ்சலி கூட்டம், தஞ்சாவூர் மாவட்டம், பாப்பா நாட்டில் விவசாயிகள் சங்க மாநில தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் படத்தினை திறந்து வைத்து புகழ் அஞ்சலி செலுத்தினார்.

புகழ் அஞ்சலி நிகழ்ச்சியில் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., தமிழ்த் தேசிய பேரியக்க தலைவர் பெ.மணியரசன், ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என்.பெரியசாமி, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலத் தலைவர் பி.பத்மாவதி எக்ஸ்.எம்.எல்.ஏ., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.ராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., ஜனசக்தி மாநில பொறுப்பாளர் டி.லெனின், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி, துணைச் செயலாளர்கள் த.இந்திரஜித், துளசி மணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சாவூர் தெற்கு மாவட்ட செயலாளர் முத்து.உத்திராபதி, வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் சக்திவேல், விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் தலைவர் வலிவலம் மு.சேரன், சி.பி.எம் மாவட்ட செயலாளர் நீலமேகம் ஆகியோர் புகழ் உரை நிகழ்த்தினர்.

கலை இலக்கியப் பெருமன்ற

# புதிய கிளை தொடக்க விழா

திருவள்ளூர் மாவட்ட தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற வெள்ளானூர் கிளை துவக்கம் திருவள்ளூர் மாவட்ட தலைவர் டி.நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்ட செயலாளர் வி.மதிவாணன் அனைவரையும் வரவேற்றார். முன்னிலை வகித்த தோழர்கள் செயல் தலைவர் கவிஞர் சி.மாரி, டி.பலராமன், இளைஞர் பெருமன்ற ராஜீவ் காந்தி ஆகியோர் கலந்து கொண்டனர். கிளையின் தலைவராக ஏ.சுந்தரேஸ்வரன், செயலாளராக எம்.பிரித்திவிராஜ், பொருளாளராக எம்.ராகேஷ் ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 50. குடும்பம்

**கூடி முடித்தகோள் கொண்ட குடும்பத்தைத்**
**தேடிவரும் தித்திப்புத் தேன்.**

அனைவரும் அமர்ந்து பேசி, முடிவு செய்து ஒரு குறிக்கோளை இலக்காகக் கொண்டு வாழ்ந்தால் குடும்பத்தில் இனிப்புத்தேனாக இன்பம் பெருகும்.

**இல்லாள் இணைந்தேதும் செய்யின் இனிதாகும்**
**அல்லவை தொல்லை தரும்**

கணவனும், மனைவியும் இணைந்து முடிவெடுத்துச் செய்யும் செயல்கள் (செலவுகள் உட்பட) குடும்பத்தை இனிமையாக்கும். அப்படி செயல்படாத குடும்பங்களில் துன்பமே உண்டாகும்.

# வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

மரணமடைந்த வேளாண் சட்டங்கள் என்ற சி.மகேந்திரன் கட்டுரை அவர் 25 நாட்கள் டெல்லி முற்றுகைப் போராட்டக் களத்தில் இருந்த அனுபவத்தோடு வெற்றி விபரங்களை எடுத்துக் கூறுகிறது. தோதாத்ரி அவர்களின் தொடர் கட்டுரை தத்துவத்தை எளிதாக புரிந்து கொள்ள உதவுகிறது.

– **சித்தேஸ்வரன்**, ஈரோடு.

**ஆசிரியர் ஜனசக்தி,**

அகில இந்திய பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்கள் எழுதிய மோடி அரசை வீழ்த்திய விவசாயிகள் போராட்டம் வரலாற்றுச்சிறப்புமிக்க வெற்றிஎன்றகட்டுரை விவசாயிகளின் ஓராண்டுகால போராட்டத்தை படம் பிடிக்கிறது. அதிகாரத்தை முழுமைப்படுத்துதல் கட்டுப்படுத்துவதற்குமான ஆற்றலை வெகுமக்களை பயிற்றுவிப்பதன் மூலம் சாதிக்க முடியும் என்று கூறியிருப்பது மிகவும் பொருத்தமானது.

**தேவநேசன்**, மகுடஞ்சாவடி, சேலம்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

எஸ்.ஜி.சர்தேசாய் எழுதிய டாக்டர் அம்பேத்கரும்–பட்டியல் சாதியின் விடுதலையும் என்ற கட்டுரை இக் காலச் சூழலுக்கு மிகவும் பொருத்தமானது ஆகும். டி.எம்.மூர்த்தி அவர்களின் மொழியாக்கம் எளிதில் புரியக்கூடிய அளவில் அமைந்துள்ளது சிறப்பு.

– **கமலக்கண்ணன்,**
திருவாரூர்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களின் பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும் என்ற கட்டுரை வாரம் தோறும் படித்து முடித்த உடன் அடுத்த வாரம் எப்போது வரும் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது. கடந்த வாரம் போன்று ஒரு பக்க அளவில் வாரம்தோறும் விளம்பரம் வந்தால் ஜனசக்திக்கு பேருதவியாக இருக்கும்.

– **அனுராதா**, நாகை.

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில்

# ஆக்சிஜன் உற்பத்தியை நிறுவுக!

## மக்களவையில் எம்.செல்வராசு எம்.பி.

கோவிட் – 19 பெருந்தொற்று மற்றும் அது தொடர்பான அம்சங்கள் குறித்து விதி எண் 193–ன் கீழ் மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில் தோழர் எம்.செல்வராசு எம்.பி. பங்கேற்றுப் பேசினார். அவர் பேசியது பின்வருமாறு:

கோவிட் 19 பெருந்தொற்று சூழல் பற்றிய எனது கருத்துக்களைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். 2020ஆம் ஆண்டு மார்ச் 22 அன்று பேராபத்து மிக்க கோவிட் 19 சூழலைப் பற்றி நாட்டு மக்களிடம் தெரிவித்த இந்தியப் பிரதமர் தேசிய ஊரடங்கை அறிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள கடைகள், பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் மூடப்பட்டன. நாட்டில் நோய்த்தொற்று நாளடைவில் பெருகப் பெருக இந்திய மக்களும் மோசமான சூழலை எதிர்கொண்டார்கள். இந்த நெருக்கடியான சூழலில் மருத்துவமனைகள் முன்பு நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். போதிய படுக்கை வசதிகள் இல்லை; ஆக்சிஜன் பற்றாக்குறையும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் மற்றும் அச்சமின்றி மக்களுக்கு தொண்டாற்றினர். தேசம் சுகாதாரத் துறை பணியாளர்களுக்கு தலை வணங்குகிறது; நன்றி தெரிவிக்கிறது.

மற்றொருபுறம் தனியார் மருத்துவமனைகளில் வணிக நோக் கில் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை செய்த நோயாளிகளிடம் அதிக கட்டணம் வசூலிக் கப்பட்டது வருத்தமளிப்பதாக இருந்தது. தனியார் மருத்துவ மனைகளின் கட்டண கொள்ளையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அரசிடம் இல்லை.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் வேலையும் இல்லாமல், பணமும் இல்லாமல் ஊரக பகுதிகளின் மக்கள் மிகவும் அவதி யுற்றனர். ஒன்றிய அரசாங்கமும் இந்த மக்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை.

இந்தக் காலகட்டத்தில் இந்த மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பேருதவியை புரிந்தது. என்னுடைய தொகுதியான நாகப்பட்டினத்தில் பெரும்பாலான மக்கள் ஊரக பகுதிகளில் வசித்து வருபவர்கள். எனவே திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவ மனையில் ஒன்றிய அரசு ஒரு ஆக்சிஜன் உற்பத்தி ஆலையை நிறுவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



பெரியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா:

## டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு

சேலம் மாநகரில் நவ.6 அன்று நடைபெற்ற பெரியார் பல்கலைக் கழகத்தின் 20–வது பட்டமளிப்பு விழாவில் பெரியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினரான, தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித் தொகை கேட்டு

# தென்காசியில் ஆர்ப்பாட்டம்

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பாக தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை வழங்க கேட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பின்னர் கோட்டாட்சியரிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினர். ஆர்ப்பாட்டத்திற்கு வி.ச.மாவட்டச் செயலாளர் எம்.எஸ். முத்துசாமி தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட செயலாளர் த இசக்கிதுரை, வி.ச. மாவட்ட துணைச் செயலாளர் மா.கணேசன், எம்.எஸ். கிட்டப்பா, வி.தொ.ச.முருகன், வைரமுத்து உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## சமூகநீதி கருத்தரங்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்பு

அரியலூர் மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக மாவட்ட தலைநகர் அரியலூரில் காவேரி திருமண மண்டபத்தில் விடுதலை சிறுத்தை கட்சி மாநில தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தொல் திருமாவளவன் பிறந்தநாளை முன்னிட்டு சமூகநீதி சமூகங்களின் ஒற்றுமை கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாக குழு உறுப்பினர் த. இந்திரஜித் பங்கேற்று உரையாற்றினார். அவர் பேசும்போது, "மார்க்ஸ், டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் வழிகாட்டுதலை இலக்குகளாக கொண்டு சமூக நீதிக்காக பாடுபடும் தொல்.திருமாவளவனின் பக்கம் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துணை நிற்கும் என குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தொல்.திருமாவளவன், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், அரியலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கு. சின்னப்பா உள்பட தலைவர்கள் உரையாற்றினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அரியலூர் மாவட்ட துணை செயலாளர் டி. தண்டபாணி கலந்து கொண்டார்.

# விவசாயிகள் நிவாரணம் கோரி அமைச்சரிடம் மனு

மாண்புமிகு பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவர்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.மகேந்திரன் எழுதிய ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம் என்ற நூலை வழங்கி, விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் கோரிக்கை மனுவை அம்மாபேட்டையில் நேரில் வழங்கப்பட்டது.

சம்பா, தாளடி நெற்பயிர்கள் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் நிவாரணம் வழங்கவும், வேலை வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் விவசாய தொழிலாளர்கள், நெசவாளர்கள், முறைசாரா தொழிலாளர்கள், குடும்பங்களுக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கிடவும், பயிர் காப்பீடு செய்து கடந்த ஆண்டுக்கான பயிர் காப்பீடு தொகை கிடைக்காத விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கவும், உரத் தட்டுப்பாட்டை போக்கவும் கோரிக்கை மனு வழங்கப் பட்டது.

நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மா பேட்டை ஒன்றிய செயலாளர் ஆர். செந்தில் குமார், ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.எம். குருமூர்த்தி, கே.ராஜாராமன் டி.ஜி. நாகராஜன், எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளை மாநாடுகளில்

# ஜனசக்தி சந்தா சேர்ப்பு!

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஒன்றியம் துரைசாமியாபுரம் கிளை மாநாடு செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. செயலாளராக வி.வேலுச்சாமி, துணை செயலாளராக வி.சீனிப்பாண்டி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். இராமநாதபுரம் கிளை மாநாடு பொ.ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது. இராமநாதபுரம் கிளை இரண்டாக பிரிக்கப்பட்டன.

1வது கிளை செயலாளராக ஜெ.ஜெயகணேசன் துணை செயலாளராக மா.மணிகண்டன், 2வது கிளை செயலாளராக பா.ஜெயகணேசன், துணை செயலாளராக ஆ.சமுத்திரம் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாடுகளில் மாநில குழு உறுப்பினர் வேலாயுதம், ஒன்றிய செயலாளர், பி.வேலு, ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி ஆகியோர் பங்கேற்றனர். ஒவ்வொரு கிளை மாநாட்டிலும் ஜனசக்தி புதிய ஆண்டு சந்தா சேர்ப்பு நடைபெறுகிறது.

## புளியக்குடி கிளை மாநாடு

அம்மாபேட்டை ஒன்றிய வடக்கு தோப்பு புளியக்குடி கிளை மாநாடு நடைப் பெற்றது. மாநாட்டிற்கு சி.மணிகண்டன் தலைமை வகித்தார். கிளைச் செயலாளர் எஸ்.மகாலிங்கம், நடைபெற்ற வேலைகளை சமர்ப் பித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர்.தில்லைவனம், ஒன்றிய செயலாளர் ஆர். செந்தில்குமார் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் ஆர். எஸ். பாலு, உள்பட மாநாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## மூக்கனூரில் கட்சி கிளை மாநாடு

தருமபுரி வட்டாரம், மூக்கனூரில் கட்சி கிளை மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு முருகன் தலைமை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் எம்.மாதேஸ்வரன் இன்றைய அரசியல் நிலை மற்றும் கட்சி வளர்ச்சி குறித்து பேசினார். ஒன்றியப் பொருளாளர் பழனி, முனுசாமி ஆகியோர் பேசினர்.

மாநாட்டில் கிளை செயலாளராக முனுசாமி, துணைச் செயலாளராக முருகன், பொருளாளராக காளியப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## காட்டுக்குறிச்சி கிளை மாநாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காட்டுக்குறிச்சி கிளை மாநாடு டிச. 05 அன்று கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர் தி.திருநாவுக்கரசு, கா.முருகையன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். கிளை செயலாளராக சக்திவேல், துணைச்செயலாளராக ரெங்கசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தஞ்சையில் இருந்து நெல்லுப்பட்டு வரை வரும் அரசு பேருந்தை மேல உளூர் அரசு மேல் நிலைப்பள்ளி வரை வந்து செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

காட்டுக்குறிச்சி வடக்கு முத்தரையர் தெருவில் சாலைகள் சேரும் சகதியுமாக உள்ளது. அதனை செப்பனிட வேண்டும், ஆதிதிராவிடர் கட்டித்தரப்பட்ட தொகுப்பு வீடுகள் மழையால் சேதமடைந்துள்ளது. அதனை மறு சீரமைப்பு செய்து தரவேண்டும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கிளை செயலாளர் சக்திவேல் நன்றி கூறினார்.

திருப்பனந்தாள் ஒன்றியத்தில்

# கிளை மாநாடுகள் தொடக்கம்

தஞ்சை வடக்கு மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியத்தில், பனங்குடம், அய்யாநல்லூர், தத்துவாஞ்சேரி உள்ளிட்ட கிளைகளின் மாநாடு நடைபெற்றது. கட்சி உறுப்பினர்களுக்கு தனித்த பொறுப்பு வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அதற்கான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்டது. கிளைகளுக்கு ஐந்து ஜனசக்தி ஆண்டு சந்தா உறுதிபடுத்தப்பட்டது. மாநாடுகளில் கட்சியின் மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி, ஒன்றிய செயலாளர் டி.ஆர்.குமரப்பா, மாவட்டக்குழு உறுப்பினர் க.கண்ணகி, ஒன்றிய குழு உறுப்பினர் சி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். பனங்குடம் கிளைச் செயலாளராக ஆர்.கோவிந்தராசு, அய்யாநல்லூர் கிளைச் செயலாளராக சி.சாந்தி, தத்துவாஞ்சேரி கிளைச் செயலாளராக கே.உதயகுமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## தோப்புளியக்குடி கிளை மாநாடு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றிய வடக்கு தோப்புபுளியக்குடி கிளை மாநாடு சி.மணிகண்டன் தலைமையில் நடை பெற்றது. கிளைச் செயலாளர் எஸ். மகாலிங்கம், நடைபெற்ற வேலைகளை சமர்ப்பித்தார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர்.தில்லைவனம், ஒன்றிய செயலாளர் ஆர். செந்தில்குமார், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் ஆர். எஸ்.பாலு, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கோவையில் அம்பேத்கர் நினைவு தினம்

வடகோவை எஃப்.சி.ஐ. குடோன் வளாகத்தில் அமைந்துள்ள அம்பேத்கரின் உருவச்சிலைக்கு அமைப்பின் மாவட்ட தலைவர் பி.முருகன், மாவட்டச் செயலாளர் அ.அசரப் அலி ஆகியோர் மாலை அணிவித்தனர்.

மாவட்ட துணைத் தலைவர் கே.புருஷோத்தமன், மாவட்ட துணைச் செயலாளர் ரி.குழந்தைவேல், மாநிலக்குழு உறுப்பினர் சக்திவேல், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மாநிலத்தலைவர் மௌ.குணசேகர், கோவை மாவட்ட பொறியியல் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.எம்.செல்வராஜ், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலக் குழு உறுப்பினர் கலை.அஸ்வினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சூலூர் தெற்கு வட்டார குழுவின் அலுவலகம் முன்பாக நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, அமைப்பின் மாநிலக்குழு உறுப்பினர் பி.சக்திவேல், தோழர்கள் சூ.பே. நடராஜ், பே.சரஸ்வதி உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.


கோவை வடக்கு மண்டலம் ஆவாரம் பாளையத்தில் சீனிவாசராவ் படிப்பகம், ராஜேஸ்வர ராவ் படிப்பகம் முன்பு அம்பேத்கர் படம் வைத்து அஞ்சலி செலுத் தப்பட்டது. கோவை வெங்கிட்டாபுரம் பூபேஷ் குப்தா நினைவு படிப்பகம் முன்பாக கே.புருஷோத்தமன் தலைமையில் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் பொதுச்செயலாளர் எழுத்தாளர் ச.பாலமுருகன் உரை நிகழ்த்தினார்.

## நாகர்கோவில் மாநகர மாநாடு

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் நாகர்கோவில் மாநகர மாநாடு மாவட்ட பொருளாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத்தலைவர் சி. சொக்கலிங்கம் தியாகச் செம்மல் ப.மாணிக்கம் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

செயலாளர் அறிக்கையை ஆர். இசக்கிமுத்து முன்வைத்தார். பொருளாளர் கே.நாகராஜன் நிதி நிலை அறிக்கையை முன் வைத்தார். நாகர்கோவில் மாநகரச்செயலாளராக ஆர்.இசக்கிமுத்து, துணைச் செயலாளராக ஜி.ஐயப்பன், பொருளாளராக கே.நாகராஜன் ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


# விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை



கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி தாலுகாவில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழையால் அனைத்து விவசாயமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பாதித்த அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்க கோரி தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பாக, ஒசூர் வட்டாட்சியரிடம் மனு வழங்கப்பட்டது. இதில் விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.லகுமையா மற்றும் விவசாய சங்க மாவட்ட செயலாளர் பழனி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் டி.சின்னசாமி, சூளகிரி தாலுகா விவசாய சங்க தலைவர் ரங்கநாதன் மற்றும் அனைத்துக் கட்சித் தோழர்கள் கலந்து கொண்டனர். மேலும், அஞ்செட்டி வட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், சூளகிரி வட்டங்களில் உள்ள வட்டாட்சியர்களை சந்தித்து மனு அளிக்கப்பட்டது.

# டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள்

# இரா.முத்தரசன் புகழஞ்சலி



டிசம்பர் 6 சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 65வது நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது. சென்னை துறைமுக நுழைவாயிலில் அமைந்துள்ள அவரது சிலைக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் நா.பெரியசாமி ஆகியோர் மாலை அணிவித்து அவரது புகழ் குறித்துப் பேசினர்.

இந்நிகழ்ச்சியில் வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, இளைஞர் பெருமன்ற மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேஷ், வடசென்னை மாவட்ட துணைச் செயலாளர் வசந்தகுமார், பெரம்பூர் தொகுதி செயலாளர் ஆ.சுப்பிரமணி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் இயக்கத்தின் மாநிலச் செயலாளர் சிவா, தலைமைக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், சு.பாஸ்கர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம். வரதன், எம்.ஜெய்சங்கர், எஸ்.குப்பன், ஜி.சுப்பிரமணி, பி. கருணாகரன் உள்பட ஏராளமான முன்னணி தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**தென் சென்னை :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோடம் பாக்கம் கிளையின் சார்பாக, கோடம்பாக்கம் பவர்லூம் அருகில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை மற்றும் கோடம்பாக்கம் என்.கோவிந்தன், ஏஐடியுசி ஸ்டாண்டு தலைவர் த.பழனிச்சாமி, எல்.மாணிக்கம், சுந்தர்ராஜன், சேகர், தஸ்தாகீர்பாஷா, அழகுராஜா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**உயர்நீதிமன்ற வளாகம்**

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அம் பேத்கர் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழக் கறிஞர் கிளை செயலாளர் ஆர்.ரவிசேகரன், இந்திய வழக்கறிஞர் சங்க மாநில துணை தலைவர் க. தேசிங், தேசியக்குழு உறுப்பினர்கள் ஆர். கிருஷ்ணகுமார், ஆ.ஆதிமூலம், வழக்கறிஞர் பி.எஸ்.நடராஜன் மற்றும் சங்க உறுப்பினர்கள், இந்திய கலாச்சார நட்புறவுக் கழக தேசியக்குழு உறுப்பினர் க.தமிழ் மது, சென்னை மாவட் டச் செயலாளர் பா. செந்தில்குமார், சமூக ஆர்வலர் என்.தயாளன், ஏசியன் ஜேனலிஸ்ட் ஃபெடரேசன் தலைவர் கராத்தே ஜீ.செந்தில்குமார், பத்திரிக்கையாளர் எம். பாண்டிதுரை ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**மதுராந்தகம்:** மதுராந்தகம் ஒன்றியம் மெய்யூர் அம்பேத்கர் நகரில், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் கே.வி.சேகுவேராதாஸ் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் வார்டு உறுப்பினர் எ.ஸ்ரீதர், கிளை செயலாளர் செ.இன்பராஜ், துணை செயலாளர் எம்.நாகராஜ் மற்றும் தொகுதி குழு உறுப் பினர் பிலாப்பூர் கதிர்வேல் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**காஞ்சி – செங்கல்பட்டு:** காஞ்சி – செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாவட்ட துணை செயலாளர் க.ஜெகதீசன் தலைமையில் மாலைஅணிவித்து உறுதி மொழி ஏற்கப்பட்டது. இதில் ஒய்.ஆரூன்பாஷா, அ.கனகராஜ், எஸ்.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் ரயில்வே சாலையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செய லாளர் ஆ. மூர்த்தி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க செயலாளர் எஸ்.ராமச்சந்திரன், ஏஐடியுசி டாஸ்மாக் சங்க மாவட்ட தலைவர் இ.பிரகாசம், மார்க்சிய பெரியார் பொதுவுடமை ஜெயபிரகாஷ், கைத்தறி சங்க பொறுப்பாளர் எஸ்.இ.ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் பேருந்து நிலையம் அருகில் உள்ள சிலைக்கு, மாவட்ட துணைத்தலைவர் கே.போஸ் தலைமையில் மாலை அணி வித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாவட்ட துணை செயலாளர் எம்.பி.குமார், சோழவரம் ஒன்றிய செயலாளர் கே.குமரேசன், சோழவரம் ஒன்றிய தலைவர் பஞ்நாதன், சிறு கடை சங்க தலைவர் புருஷோத்தமன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட துணை செயலாளர் யோவான், சிறு கடை வியாபாரிகள் சங்க செயலாளர் ஆதாம், சங்க நிர்வாகிகள் மாரி, முஜிப், அப்துல் ரஹ்மான், துர்கா, யசோதா அம்மாள், ராமு உள் ளிட்டோர் பங்கேற்றனர்.

**தஞ்சை:** தஞ்சாவூர் ரயிலடி முன்பு அனைத்து கட்சி மற்றும் இயக்கங்கள் சார்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் தலைமையில் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழர் தேசிய முன்னணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர் அயனா புரம் சி.முருகேசன், இடதுசாரிகள் பொதுமேடை ஒருங் கிணைப்பாளர் துரை.மதிவாணன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாதர் சங்க மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி, தீண்டாமை ஒழிப்பு முன்னணி துணைச் செயலாளர் என்.சிவகுரு, ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் ஆர்.செந்தில்நாதன், நிர்வாகி சாமிநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தஞ்சை நகரின் மையப்பகுதியில் டாக்டர் அம்பேத்கர் நினைவு மண்டபம் அமைத்திட தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது.

**அம்மாபேட்டை:** தஞ்சை மாவட்டம், அம்மாபேட்டை நால் ரோட்டில் உள்ள அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் ஆர்.செந்தில்குமார் தலைமையில் மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.எம்.குருமூர்த்தி, நகர செயலாளர் கே. ராஜாராமன், ஒன்றிய பொருளாளர் பி. தாமரைச்செல்வி, ஒன்றிய நிர்வாகிகள் டி.ஜி.நாகராஜன், எஸ்.திருநாவுக்கரசு, எஸ். உத்திராபதி, எம்.ராஜமாணிக்கம் உள்ளிட்ட முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

**உளுந்தூர்பேட்டை:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் உளுந்தூர்பேட்டை வட்டக்குழு சார்பில் மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன் தலை மையில் வசந்த மாஹாலில் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி, சாதி, மத பாகுபாடு எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. சென்னை ஐஐடியில் பற்றி எறியும் சாதி தீ என்ற புத்தகத்தை அறிமுகம் செய்து மாநில செயலாளர் கீ.சு.குமார் பேசினார். திருநாவலூர் ஒன்றிய பெருந்தலைவர் சாந்தி இளங் கோவன், தி.க. மாவட்ட செயலாளர் அரங்க பரணிதரன், பகவான் தாஸ், துரும்பூர் விடுதலை கட்சி கள்ளக்குறிச்சி மாவட்ட பொறுப்பாளர் செல்வராசு, சேந்தமங்கலம் வழக்குரைஞர் அந்தோனி, சத்துணவு மாநில நிறுவன தலைவர் ஆர்.ராஜா ஆகியோருக்கு புத்தகம் பெற்று உரை நிகழ்த்தினர்.

**விருதுநகர்:** இராஜபாளையத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சிக்கு சிபிஐ நகர செயலாளர் வி.இரவி தலைமை வகித்தார். தஒவாஇ மாநில துணை தலைவர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் லி.பகத்சிங், மகாலிங்கம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

விருதுநகரில் சிபிஐ ஒன்றிய செயலாளர் சக்கணன் தலைமை வகித்தார். தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் பாலமுருகன், நகர செயலாளர் முத்துக்குமார், மீனவர் சங்க மாவட்ட செயலாளர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர். சேத்தூர் காமராஜ் நகரில் தவிச அய்யணன் தலைமை வகித்தார். இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி , பாண்டியன், ஆனந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனை முன்பு இருக்கும் அம்பேத்கர் சிலைக்கு தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் மாலை அனிவித்து மரியாதை செலுத்தினார். இதில் சங்க மாவட்ட துணை தலைவர் என்.முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை.மாதையன், சங்க மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.கோவிந்தன், மற்றும் கோபால், மாரியப்பன், கல்யாணி, மாது ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**அரியலூர்:** அரியலூர் நகராட்சி அலுவலகம் முன்பு அம்பேத்கர் திருவுருவப் படம் மலர் மாலையால் அலங்கரிகப்பட்டு ஏஐடியுசி சுகாதாரத் தொழிலாளர்கள் திரண்டு மரியாதை செலுத்தினர். பின்பு ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் டி.தண்டபாணி தலைமையில் ஊர்வலமாக சென்று பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் அரியலூர் நகராட்சி மாரியப்பன், சிவஞானம், நல்லுசாமி, தெரு வியாபார தொழிலாளர் சங்கம் முரளிகிருஷ்ணன், நீ.பன்னீர்செல்வம், முகமது யூசுப், ராஜி உட்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## ஓசூரில் ஏஐடியுசி கொடியேற்று விழா

ஒசூர் மாநகரம், சிப்காட் – 1 ஷார்டுலோ இந்தியா லிமிடெட் கம்பெனி முன்பு, ஏஐடியூசி தொழிற் சங்கத்தின் மாவட்ட தலைவர், தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் அவர்கள் கொடி ஏற்றினார். ஏஐடியூசி மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில் தலைமை தாங்கினார். இதில் ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் எம்.கே. மாதையன், விவசாய சங்க மாநில துணைத் தலைவர் எம்.லகுமையா, சிபிஐ மாவட்டத் துணைச் செயலாளர் சின்னசாமி, விவசாய சங்க மாவட்ட செயலாளர் பி. பழனி மற்றும் சிபிஐ மாநகரச் செயலாளர் சங்கரய்யா மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

**14-வது ஊதிய ஒப்பந்த**

## பேச்சுவார்த்தையை உடனடியாக துவக்க வேண்டும்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் தொழிலாளர் சம்மேளன (ஏ.ஐ.டி.யு.சி.) நிர்வாகக் குழு கூட்டம் மதுரையில் நடைபெற்றது. சங்கத் தலைவர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் டி.எம். மூர்த்தி முன்னிலை வகித்தார். சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் நெல்லை ரா.ஆறுமுகம், பொருளாளர் என்.உலகநாதன் மற்றும் மாநில செயலாளர்கள் எம்.நந்தாசிங் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 14வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை உடனடியாக துவக்க வேண்டும். அகவிலைப்படி உயர்வு, அரியர்ஸ் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




## தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு சார்பாக ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனடியாக தொடங்க வேண்டும், காலியாக உள்ள 50,000 ற்கும் மேற்பட்ட காலிப்பணி யிடங்களை நிரப்பிடக்கோரியும், சரண்டர் லீவை காசாக்கிக் கொள்ளுதலை அனுமதித்திடவும், பஞ்சப்படியை விடுவிக்க வலியுறுத்தியும், காலியாக உள்ள பதவி உயர்வுகளை நிரப்பிடவும், தமிழக அரசையும் தமிழ்நாடு மின்வாரியத்தையும் வலியுறுத்தியும், தமிழகம் முழுவதும் அனைத்து மேற்பார்வை அலுவலகங்கள் முன்பு அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

சேலம் மாவட்டம் ஆத்தூர் இந்திய கம்யூனிஸ்டு கட்சி நகர் குழு சார்பாக அம்பேத்கார் நகர் 32 வந்து வார்டுக்குட்பட்ட வண்ணார் காலணி பகுதியில் அடிப்படை வசதி வேண்டியும், மழையால் தேங்கிய நீரை அகற்ற வேண்டி இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆத்தூர் நகர செயலாளர் ஈ.ஆர்.கே மற்றும் துணை செயலாளர் மோ சின்னதுரை தலைமையில் சுரேஷ், நித்தியானந்தன், கண்ணன், காந்தி மற்றும் பொதுமக்கள் 30 பேர் ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



## கிருஷ்ணகிரி நகரில் 25க்கும் மேற்பட்டோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி நகரில் விவசாய சங்க கூட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு ஆலோசனைகள் செய்யப்பட்டது. கிளைகள் அமைப்பது, நகராட்சி தேர்தலை கையாள்வது பற்றி ஆலோசனைகள் செய்யப்பட்டன. அதில் விவசாய சங்க ஒன்றிய தலைவர் சிவராஜ், கிருஷ்ணமூர்த்தி, சின்னகண்ணு, அப்ராஜ், இக்பால், மணி ஆகியோர் முன்னிலையில் பி.உபேத் தலைமையில் பிரவீன், மஸ்தான்வலி, சீனி, பிரபா, ராக்கி, தீனா உட்பட 25க்கும் மேற்பட்ட தொண்டர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.


## பாபநாசம் பேரூராட்சி கிளை மாநாடு

இந்தியக் கம்யூ கட்சியின் பாபநாசம் பேரூராட்சி கிளை மாநாடு பாபநாசம் அரையபுரம் தட்டுமால் படுகையில் நடைப் பெற்றது. மாநாட்டிற்கு கிளைச் செயலர் நாகராஜ் தலைமை வகித்தார். வி.தொ.ச மாவட்டக் குழு பரமசிவம் கொடியேற்றி வைத்தார். தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி. மகேந்திரன், மாவட்டச் செயலர் பாரதி, நிர்வாகக் குழு மதியழகன், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்டச் செயலர் தில்லைவனம், பாபநாசம் ஒன்றியச் செயலர் தருமராசன் சிறப்புரையாற்றினர்.

# பொதுவுடமை இயக்கத்தின் புயற் பறவை

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தலைவர் தோழர் பூபேஷ் குப்தா அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை. ''பொதுவுடைமை இயக்கத்தின் புயற்பறவை தோழர் பூபேஷ் குப்தா வாழ்க்கை வரலாறு'' என்ற தலைப்பில் வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன் அவர்கள் எழுதி உள்ளார் .

விடுதலை அடைந்த இந்தியாவின் இடதுசாரி அரசியலின் தலைவர்களில் ஒருவராகவும், பாராளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாகாத்த போராளிகளில் ஒருவராக விளங்கிய பூபேஷ்குப்தா 29 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் பணியாற்றியவர். பூபேஷ் குப்தா மாணவராக இருந்தபோதே ''அனுசீலன் சமிதி'' என்கிற புரட்சிகர இளைஞர் குழுவில் இணைந்து அதன் ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஆனால் 1930 இல் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உளவுத்துறை ஊடுருவலாலும், சதி வழக்குகள், கடுமையான தண்டனைகள், நாடுகடத்தல் ,தூக்கு தண்டனை போன்ற அடக்குமுறைகளால் புரட்சிகர பயங்கரவாத நடவடிக்கை முடிவுக்கு வந்தது.




வரலாற்று சிறப்புமிக்க வங்காள குத்தகை விவசாயிகளின் ''தொபாகா ''நில மீட்சி போராட்டத்தில் பங்கேற்றார். ''பீப்பிள்ஸ் வார் '' ''நியூஏஜ் '' ஆகிய வற்றின் ஆசிரியராகவும் நீண்ட காலம் பணியாற்றினார். வங்கத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது நிவாரணப் பணிகளுக்காக வெகு மக்களை திரட்டினார்.

சாதியமும் பெண்ணடிமைத்தனமும் ஒழிய வேண்டும் என அழுத்தமாக குரல் கொடுத்தார். தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதாவைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் அழுத்தமாக பதிவு செய்தார். மாநில சுயாட்சி குறித்து அவரது உரை மிக முக்கியமான ஒன்றாகும். 1952 இல் முதன் முறையாக மாநிலங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றிலிருந்து அவர் இறக்கும் வரை 29 ஆண்டு காலம் மாநிலங்களவை உறுப்பினராக இருந்து சாதனை படைத்தார். சோஷலிச நாடுகளில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக கல்வி அறிவை பெற்றிருக்கிறார்கள் .சம வேலைக்கு சம ஊதியம் என்பது சட்டத்தில் உள்ளது.ஆனால் நமது நாட்டில் ..?.

பெண்களுக்கான முழுமையான முழு விடுதலை என்பது சோசலிச சமூக அமைப்பில் மட்டுமே சாத்தியம் என்பது உண்மை. உழைப்பாளி மக்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினால் மட்டுமே பெண்களுக்கான முழு விடுதலை என்பது சாத்தியம் என பெண்களுக்கான முழு விடுதலை குறித்து அன்றைக்கே சிந்தித்தவர்தான் பூபேஷ் குப்தா. அவரது வாழ்வையும், பணிகளையும் இந்நூலில் மிகச் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார் வழக்கறிஞர் கே சுப்பிரமணியன் .வங்கம் தந்த தங்க மகன் பூபேஷ் குப்தா அவர்களை அறிந்துகொள்ள இந்நூலை அனைவரும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும்.

**– சமரன்**

**நூலாசிரியர் : வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன்**
**வெளியீடு : இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம் (Iscif),கோவை, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், கோவை, சரோஜினி பதிப்பகம் மூலமாக, செல்: 6374832622**
**பக்கங்கள் : 156 விலை : ரூ.150**

## நூல் நயம்

# தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்

உலகத்தில் வாழ்கிற ஒவ்வொரு சமூகத்திற்கும் ஓர் அறமும் , ஆற்றலும் அடிப்படையாக இருக்கும் .அந்த வகையில் தமிழ்ச் சமூகத்தின் அறத்தையும் ஆற்றலையும் குறித்து, எழுத்தாளர் ராஜ்கௌதமன் அவர்கள் எழுதியுள்ள நூலே தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும் எனும் நூல். நூலின் அடிப்படை பழையது, ஆனால் கூறப்படும் விளக்கங்கள் சில புதியன, கால மாற்றத்தை கணக்கில் கொண்டதால் இந்த முயற்சி அத்தியாவசியமாகிறது என நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

சமண, பௌத்த அறங்களில் மனித நடத்தைகளைப் பற்றிய அறிவியல் பாங்கான ஆய்வு பொதிந்துள்ளது . உலகில் உள்ள எல்லாமே ஒரு சுழற்ச்சியில் இடைவிடாமல் மாறிக்கொண்டே இருக்கின்றன . எதுவும் நிலையாக நிலைப்பதில்லை. ஒன்று மற்றொன்றாக மாறியபடியே உள்ளது .பிறவிகள் மாறிக் கொண்டிருக்க உயிர் அல்லது ஆன்மா என்பது மாறாத ஒன்றாக இருக்கின்றது. துறவு வளர்க்கும் சமண, பௌத்த அறநெறி பலமாகவும் பலவீனமாகவும் அமைந்துவிட்டது என்றார். கொல்லாமை என்கிற அறம் உயிர்கள் மீது கொண்ட இரக்கம் என்பது பொதுவான நிலைப்பாடு. சங்ககால அக, புறப் பாடல்களில் காணப்படும் அறங்கள் இன்பம் சார்ந்தும், பொருள் சார்ந்தும் அமைந்துள்ளன ஆட்சியாளர்களை பாடி பரிசில் பெறும் நோக்கில் இயற்றப்பட்ட பாடல்களில் அரச அறம், அரசாட்சி அறம், சான்றாண்மை, சமண பௌத்த அறம் சார்ந்தவையாக புறப்பாடல்கள் காணப்படுகின்றன.




இயற்கையையும், மனிதர் தம்மையும் மனிதரே வன்முறைக்கு உட்படுத்தியதின் விளைவே மனித நாகரிகம். வேட்டைச் சமூகத்தில் இயற்கையின் அங்கமாக இருந்த உயிரினங்களை ஏனைய உயிரினங்களைப் போல கொன்று இரையை சேகரித்தனர். இரை கிடைக்கும் பயன்பாட்டு பரப்பை பாதுகாக்கவும், பராமரிக்கவும் மனிதர்களிடையே வன்முறை பிரயோகிக்கப்பட்டது. இதுவே நாகரீகமாக கருதப்பட்டது.

தீயவற்றை உடமையாகக் குவிப்பது துன்பம். நல்லவற்றை உடமையாக குவிப்பது இன்பம். தண்ணீர்த்துளிகளாய் விழினும் ஒரு பானை நிரம்பிவிடும். அதுபோல, வினைகள் துளித்துளியாய் சேகரமாகும். வட மரபின் வைதீக பிராமண தர்மங்களும்.சமண, பௌத்த அறங்களும் எழுதப்பட்ட வரலாற்றுக் கால கட்டத்திற்குள் நுழைந்து கொண்டிருந்த தமிழகத்தின் அறத்திற்குள் அல்லது தமிழ் மரபுக்குள் என்ன தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை இந்த நூல் பேசுகிறது.இது ஒரு நல்ல ஆய்வு நூலாகும். அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : ராஜ் கௌதமன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், 41பி, சிட்கோ இன்டஸ்ட்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 98, போன் : 04426251968**
**பக்கங்கள் : 420 விலை : ரூ.370**

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்



# நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் 10வது தேசிய மாநாடு

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யு.எம்.எல்.) யின் பத்தாவது தேசிய மாநாடு அந்நாட்டின் சித்வான் நகரில் கடந்த நவம்பர் 26 முதல் 28 வரை நடைபெற்றது.

நவம்பர் 26ஆம் நாள் மாபெரும் பொதுக்கூட்டத்துடன் தேசிய மாநாடு தொடங்கியது. இந்த பொதுக்கூட்டத்தில் ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர். பெரும் எண்ணிக்கையில் இளைஞர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முக்கியமான அம்சமாகும். பிரதமர் ஷேர் பகதூர் துபா உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினர்.

இந்த மாநாட்டிற்கு நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் (ஒன்றுபட்ட சோஷலிஸ்ட்) மாதவ் குமார் நேபாள் அழைக்கப் படவில்லை.

இம்மாநாட்டில் முன்னாள் பிரதமர் கே.பி. ஒளி பேசுகையில், அடுத்து வரும் தேர்தலுக்கு நேபாள மக்களை தயாராகுமாறும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி(யு.எம்.எல்.) வெற்றிக்கு பாடுபடுமாறும் அறைகூவல் விடுத்துள்ளார்.

இந்தியா, வங்கதேசம், இலங்கை மற்றும் கம்போடியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தேசிய குழு செயலாளர் பல்லப் சென் குப்தா கலந்துகொண்டார். இந்தியாவில் நிலவும் அரசியல் சூழலை அவர் விளக்கிக் கூறினார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்த வேண்டும் என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டை அவர் வலியுறுத்தினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜாவின் மாநாட்டு வாழ்த்துச் செய்தியை பல்லப் சென்குப்தா பதிவு செய்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியின் சுருக்கமான பகுதி பின் வருமாறு: உங்களின் இந்த தேசிய மாநாடு நேபாளத்தின் மாறுபட்ட அரசியல் சூழலுக்கு இடையே நடைபெறுகிறது. 2017 இல் நடைபெற்ற தேர்தலில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யுஎம்எல்) பெற்ற வெற்றியும், அதனையொட்டி ஒன்றிணைந்த கம்யூனிஸ்ட் கட்சியை கட்டமைப்பதற்கான உங்களின் முயற்சி தெற்காசிய நாடுகளிலுள்ள உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி கட்சிகளுக்கு மாபெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. அந்த முயற்சி வெற்றியடையவில்லை என்றாலும், நேபாளத்தில் கொள்கைகளின் அடிப்படையில் கம்யூனிஸ்ட் இயக்கங்களை ஒன்றிணைக்கும் உரிய நடவடிக்கைகளை நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யுஎம்எல்) மேற்கொள்ளும் என்று நம்புகிறோம். தற்போது நேபாளத்திற்கு அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த வளர்ச்சி தேவைப்படுகிறது. இந்த லட்சியத்தை அடைந்திட ஆட்சி நிர்வாக அனுபவத்தின் அடிப்படையில் தற்போது நடைபெறும் உங்களின் தேசிய மாநாடு விரிவாக விவாதிக்கும் என்று நம்புகிறோம். உங்களின் மாநாடு அரசியல் மற்றும் அமைப்பு நிலை அறிக்கைகளை பூரண ஜனநாயக சூழலில் விவாதிக்க இருப்பதை நாங்கள் உணர்கிறோம். அமைதி, ஜனநாயகம் மற்றும் நேபாள சமுதாயத்தின் புரட்சிகர மாற்றம் ஆகியவற்றுக்காக போராடும் நேபாளத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் இந்த 10 ஆவது தேசிய மாநாட்டின் அரசியல் வழிகாட்டுதல் குறிப்பிடத்தக்கதாக அமையும் என்று நம்புகிறோம்.

இம்மாநாட்டில் 301 உறுப்பினர்களைக் கொண்ட மத்திய குழு மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். கே.பி.ஒலி நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யுஎம்எல்) தலைவராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# சூடான் பிரதமர் மற்றும் இராணுவத் தளபதி இடையேயான அரசியல் ஒப்பந்தம்

சூடானில் பிரதமர் ஹம்துக் மற்றும் ராணுவ தளபதி புர்ஹன் இடையேயான அரசியல் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்நாட்டு தலைநகரம் கர்தூம் உள்ளிட்ட பல நகரங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பாக சூடான் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு பின்வருமாறு:

ராணுவ ஆட்சிக்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும் என்றும், ஜனநாயக வழிபட்ட ஆட்சிமுறை நிறுவப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி கடந்த நவம்பர் 30 அன்று ஆயிரக்கணக்கான மக்கள் தலை நகரத்தின் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

அமைதி வழியில் போராடும் மக்களை சூடான் ஆட்சியாளர்கள் கொடூரமான முறையில் அடக்குமுறைக்கு உள்ளாக்கி வருகிறார்கள். போராட்டக்காரர்களின் பலரின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. கொடுங்கோல் ஆட்சியின் குண்டர் படை போராட்டக்காரர்களுக்கு சிகிச்சை

## சூடான் மக்கள் எதிர்ப்பு

அளிக்கும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களையும் அச்சுறுத்துகின்றனர். தங்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளை நெஞ்சுரத்தோடு எதிர்த்துப் போராடி வரும் சூடான் மக்களுக்கு சூடான் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது. ராணுவ கட்டுப்பாட்டில் உள்ள ஆட்சியை தூக்கி எறியும் வரை தொடர்ந்து போராட கட்சி உறுப்பினர்களுக்கும், முற்போக்கு சக்திகளுக்கும் சூடான் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்துள்ளது.

ஜனநாயகம், அமைதி மற்றும் சமூக நீதிக்கான சூடான் மக்களின் போராட்டத்திற்கு உலகம் முழுவதும் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்கள் கட்சிகள் தொடர்ந்து ஆதரவு நல்கிட வேண்டும் என்று சூடான் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

# சிலியில் வெல்கிறார் இடதுசாரி வேட்பாளர்

டிசம்பர் 19 ஆம் தேதியன்று நடைபெற விருக்கும் சிலி ஜனாதிபதித் தேர்தலில் இடது சாரி வேட்பாளரான காப்ரியல் போரிக் வெற்றி பெறுவார் என்று கருத்துக் கணிப்புகள் தெரி விக்கின்றன. சிலி நாட்டில் வலதுசாரிக் கட்சியினரின் ஆட்சி கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. நாட்டின் பொருளாதாரம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசின் கொள்கைகள்தான் காரணம் என்ற கருத்து சிலி மக்கள் மத்தி யில் நிலவுகிறது. ஆனால், ஒரு பகுதியினர் இதிலிருந்து மீள அதி தீவிர வலதுசாரி களுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார்கள். நவம்பரில் நடைபெற்ற முதல் சுற்றில் எந்த வேட்பாளரும் 50 விழுக்காடு வாக்கு களைப் பெறவில்லை. அதனால் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த வேட்பாளர்கள் மீண்டும் இரண்டாவது சுற்றில் போட்டி யிடுகிறார்கள். யாரும் எதிர்பாராத விதமாக முதல் சுற்றில் அதி தீவிர வலதுசாரி வேட்பாளர் அன்டோனியோ கஸ்ட் முத லிடம் பிடித்தார். இடதுசாரி வேட்பாளர் போரிக் இரண்டாவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

டிசம்பர் 19 அன்று நடைபெறும் இரண்டா வது சுற்றுத் தேர்தலில் இடதுசாரி வேட்பா ளர் காப்ரியல் போரிக் மற்றும் வலதுசாரி வேட்பாளர் அன்டோனியோ கஸ்ட் ஆகிய இருவரும் களத்தில் உள்ளனர். கிரிட்டெரியா மற்றும் க்ளுடடனோ ஆகிய இரண்டு ஆய்வு நிறுவனங்கள் கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளன. இரண்டு ஆய்வுகளுமே இடதுசாரி வேட்பாளர் காப்ரியல் போரிக் 54 விழுக்காடு வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்று தெரிவிக்கின்றன. கிரிட்டேரியா மற்றும் களுடடனோ ஆகிய இரண்டு கருத்துக் கணிப்புகளிலுமே இடதுசாரி வேட்பாளர் காப்ரியல் போரிக் சுமார் 54 விழுக்காடு வாக்குகளைப் பெறு வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகள் மீண்டும் இடதுசாரிப் பாதையில் திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில், சிலியிலும் மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. பெண்கள் மற்றும் இளைஞர்கள் வாக்கு கள் போரிக்குக்கு அதிகமாகக் கிடைக்கும் என்பதால், வாக்குப்பதிவு அதிகரித்தால் அதுவும் அவருக்கு சாதகமாகவே இருக்கும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# அஜாய்பவனில் டாக்டர் அம்பேத்கர் படத்திற்கு டி.ராஜா அஞ்சலி




**டாக்டர் அம்பேத்கரின் 65–வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது படத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியப் பொதுச் செயலாளர் டி.ராஜா மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.**

கட்சி தலைமையகமான அஜாய்பவனில் கூடியிருந்த தோழர்கள் மத்தியில் உரையாற்றிய டி.ராஜா, மதச்சார்பற்ற, ஜனநாயக அரசியலமைப்புச் சட்டத்தின் சிற்பி என்று டாக்டர் அம்பேத்கருக்கு புகழஞ்சலி செலுத்தினார். தனது முழு வாழ்க்கையையும் மதச்சார்பற்ற இந்தியாவை கட்டமைப்பதற்காக அவர் அர்ப்பணித்தார். இந்த நாளில்தான் 1992ஆம் ஆண்டில் அயோத்தியாவில் இருந்த பாபர் மசூதியை ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. தலைமையிலான வகுப்புவாத சக்திகள் இடித்தனர் என்று டி.ராஜா நினைவு கூர்ந்தார். இதுபோன்ற செயல்களை மதுரா, பனாரஸ் போன்ற இடங்களிலும் மீண்டும் அரங்கேற்ற அவர்கள் திட்டமிட்டு வருகிறார்கள்.

மதத்தின் பெயரால் நாட்டை பிளவுபடுத்தும் பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்.சின் கொடிய திட்டத்தை முறியடித்திட கட்சி தோழர்களுக்கும், மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளுக்கும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார். இந்நிகழ்ச்சியில் கட்சியின் தேசிய செயலாளர் அதுல்குமார் அஞ்சான், தேசியக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஏ.கான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆந்திர மாநில மாணவர் பெருமன்ற மாநாட்டில் ஜெய்பீம் இயக்குநருக்கு பாராட்டு



ஜெய்பீம் இயக்குனர் ஞானவேல் அவர்களுடனும், அவரது இணையர் கிருத்திகாவுடனும் இரண்டு நாள் கர்னூல் பயணம் மேற்கொண்டேன். ஆந்திர மாநிலத்தின் அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநில மாநாட்டில் சிறப்பு விருந்தினராக இயக்குனர் ஞானவேல் அழைக்கப்பட்டிருந்தார். என்னையும் அழைத்திருந்தார்கள்.

தெலுங்கு மக்களிடம் ஜெய் பீம் படம் நினைத்துப் பார்க்க முடி யாத பெரும் வரவேற்பை பெற்றி ருந்தது, என்னை வியப்பில் ஆழ்த் தியது. எல்லா இடங்களிலும் இயக்குனர் கொண்டாடப்பட்டார். ஞானவேல் நிதானமும் அன்பும் நிறைந்தவர்.

கிருத்திகா எதையும் கூர்ந்து கவனித்து செயலாற்றும் திறன் கொண்டவர். இருவருடனும் பல் வேறு உரையாடல்களை நிகழ்த்தி கொண்டே வந்தேன்.

ஒரு இனிய மறக்க முடியாத சந்திப்பாக அது அமைந்தது. எதிர் காலத்தின் மீது புதிய நம்பிக்கைகள் எனக்குள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

1ம் பக்கம் தொடர்ச்சி >>

மைகளை சமூக, பொருளாதார அடிப்படையில் ஆய்வு செய்து, மேம்படுத்துவது காலத்தின் அவசியமாகும்.

வேளாண்மை சாகுபடி முறையில் ஏற்பட் டுள்ள நவீன மாற்றங்கள் குறிப்பாக இயந்திர மயமாகிவரும் நிலை மனித உழைப்பை நிராக ரித்து வருகிறது. இதன் எதிர் விளைவாக நகர் மயமாதல் தீவிரமாகி வருகிறது. அது தொடர் விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

கடந்த முப்பதாண்டுகளில் நிலவுடைமை மற்றும் உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், விவசாயத் தொழிலாளர் வேலை நிலைகளில் உருவாகியுள்ள புதிய தன்மைகள், இது தொடர்பான மதிப்பீட்டின்படி நிலமில்லாத கிராமத் தொழிலாளர்கள் அனைவருக்கும் சுயமரியாதை சார்ந்த, கண்ணியமான வாழ்க்கை அமைந்து, உறுதிப்படுவதற்கான வாய்ப்புகள், திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய விவசாயத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் பங்குபெறும் துறை சார்ந்த வல்லுநர் குழு அமைக்க வேண்டும்.

### நலவாரியம் அமைக்க வேண்டும்

மதிப்பார்ந்த தலைவர் முத்தமிழறிஞர் 1997 ஆகஸ்ட் 27ஆம் தேதி தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் மாநாட்டில் பங்கேற்று, வாழ்த்துக்கூறியதுடன், இந்திய ஆட்சிப்பணி அதிகாரி பெ.கோலப்பன் தலைமையில், "வேளாண் தொழிலாளர் தனிக்குழு" அமைத்தார்கள் என்பதை நன்றியோடு நினைவுபடுத்துகிறோம்.

இந்த உயர்மட்டக்குழு விரிவான ஆய்வுக்குப் பிறகு வழங்கிய பரிந்துரையின்படி 2000ம் ஆண்டில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியம் அமைத்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்த வழி வகுக்கப்பட்டது. இது விவசாயத் தொழிலாளர் வரலாற்றில் ஒரு புதிய மைல்கல்லாகும்.

ஆனால் பின்னர் ஏற்பட்ட ஆட்சி காலத்தில் நலவாரியம் கலைக்கப்பட்டு, முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டம் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் செயலிழந்து கிடக்கிறது. இதனை மறுபரிசீலனை செய்து, முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்தது போன்ற சட்டப்பூர்வ அதிகாரம் கொண்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியம். சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு, தீர்வு போன்றவைகளுக்கு உரிமையளித்து இயங்கும் முறையில் அமைத்து தர வேண்டும்.

### மக்கள் நல்லிணக்கக் குழுக்கள் அமைத்திட வேண்டும்

சாதியின் பெயரிலும், மதத்தின் பெயரிலும் சில அமைப்புகள் வெறுப்பு மற்றும் பகை அரசியல் என்கிற விஷ விதைகளை விதைத்து வருகின்றன. இது தமிழ்நாட்டின் தொன்ம மரபுக்கும், பண்புக்கும் எதிரானது என்பதுடன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் தடையாக உருவாகி வரும் பேரபாயம் கொண்டதாகும்.

தமிழர் தொன்ம வரலாற்றில் உருவான நற்கருத்துக்களையும், மரபுகளையும் தொடர்ந்து எடுத்துச் செல்லும் வகையில் மக்கள் நல்லிணக்கக் குழுக்களை கிராமம் தோறும் அமைத்திட வேண்டும். இதில் அந்தந்தக் கிராமத்தில் வாழும் சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களும், பெண்களும் உறுப்பினர்களாக இடம் பெற்று சமூக நீதி, ஜனநாயக, நல்லிணக்கக் கருத்துக்களை முன்னெடுத்து பரப்புரை செய்யும் பணிகளையும் மேற்கொள்ளவும் கிராமத்தில் உருவாகும் பிரச்சினைகளுக்கு ஆரம்ப நிலையிலேயே தீர்வுகாணவும் வழிவகை செய்ய வேண்டும்.

### பழுதடைந்த வீடுகளையும், குடிசை வீடுகளையும் மாற்றி புதுவீடுகள்

சமூகத்தின் அடித்தட்டில் ஒடுக்கப்பட்டிருக்கும் பட்டியல் சாதியினர் பழங்குடியினர் பிரிவுக்கு அரசுகள் முழு மானியத்தில் வீடுகள் கட்டிக் கொடுத்து வருகின்றன. அரசால் கட்டிக் கொடுக் கப்பட்ட வீடுகளில் பெரும்பாலானவை வசிக்க முடியாத அளவிற்கு பழுதடைந்துள்ளன. இந்த வீடுகள் இயற்கை பேரிடர் காலங்களில் சரிந்து விழ்ந்து விடுவதும் அதிகரித்து வருகின்றன.

பழுதடைந்த பழைய வீடுகளையும், குடிசை வீடுகளையும் எடுத்து விட்டு 400 சதுர அடியில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்

### ஓய்வூதியம்

மூத்த குடிமக்களில் உடைமையில்லாத, வாரிசுகள் இல்லா தவர்களுக்கு மட்டும் தற்போது முதியோர் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதே போல் வேறு சில பிரிவினருக்கும் நிபந்தனைகளோடு உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஆனால் விவசாயத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வரும் 'மாத ஓய்வூதியம்' என்ற கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை.

நிலமில்லாத, வருமான வரி எல்லைக்குள் வராத குடும்பங்களில் உள்ள முதியோர் அனைவருக்கும் மாத ஓய்வூதியம் வழங்கும் தனி சட்டம் நிறைவேற்றி, 60 வயது முதல் மாதம் ரூபாய் மூன்றாயிரம் ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

### வேலை உறுதியளிப்புத் திட்டம் தொடர்பாக

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ஆண்டுக்கு நூறு நாட்கள் வேலை வழங்கி வருவதை இனிவரும் ஆண்டில் இருந்து 200 நாட்களாக உயர்த்தி குறைந்தபட்ச நாள் கூலியை நாள் ஒன்றுக்கு ரூ.600 (அறு நூறு) ஆக நிர்ணயித்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கோரிக்கையின் அவசியத்தை ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு எடுத்து கூறுவதுடன் தமிழ்நாட்டில் நகராட்சி பகுதிகள் உட்பட பேரூராட்சிகள் முழுவதும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்பதற்கு அழுத்தம் தரவேண்டும்.

அண்மையில் கர்நாடக அரசுக்கு ஒன்றிய அரசு வேலை நாட்களை உயர்த்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசும் வேலை நாட்களை 150 நாட்களாக உயர்த்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

### பேருந்துகளில் இலவசப் பயணம் பழங்குடியின பெண்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்

"நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவசப் பயணம்" திட்டம் சமூகத்தில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. வாழ்வாதாரத்துக்கும் உதவி வருகிறது. இந்த திட்டம் மலைப்பகுதி பெண்களுக்கு எட்டாமல் தடைபட்டுள்ளது, ஏனெனில் மலைப்பகுதிகளில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு "மலைப்பகுதி எல்லைக்குள் மட்டும்" பழங்குடி மலைவாழ் பெண்கள் புறநகர் பேருந்துகளில் இலவசமாக பயணிக்க அனுமதி வழங்க வேண்டும்.

### பழங்குடியினர் சுகாதாரம் குறித்து

மலைப் பகுதிகளில் மாறிவரும் சூழல்களில் பழங்குடி யினரின் வேட்டைத் தொழில் அருகி வருகிறது. இதன் காரணமாக இவர்களது இயற்கை உணவு உரிமை பறிபோகிறது. இதனைக் கருத்தில் கொண்ட கர்நாடக அரசு ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (ஐசிடிஎஸ்) மூலம் பழங்குடியினர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 1. ராகி 15 கிலோ, 2. முட்டை 45, 3. வெல்லம் 2 கிலோ, 4. நெய் 1/2 கிலோ, 5. பருப்பு 3 கிலோ, 6. கொள்ளு 2 கிலோ, 7. வேர்கடலை 1 கிலோ, 8. சமையல் எண்ணெய் 2 கிலோ மற்றும் 9. பச்சைப்பயிறு 2 கிலோ விலையில்லாமல் வழங்கி வருகிறது. பழங்குடியினர் சிறப்பு உட்கூறுத் திட்டத்தைப் பயன்படுத்தி தமிழ்நாட்டிலும் பழங்குடியின மக்களுக்கு "சத்துணவு தொகுப்பு வழங்கும்" திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

### உணவு உரிமை பாதுகாக்க வேண்டும்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013ன்படி குடும்ப அட்டைகள் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகள் பெற்றுள்ள குடும்பங்கள் (பிஎச்எச்) மட்டுமே மாதம் 35 கிலோ அரிசி விலையில்லாமலும் ரூ.13.50 விலையில் ஒரு கிலோ சர்க்கரையும் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் அடித்தட்டில் வாழ்ந்து வரும் நிலமில்லாத பட்டியல் சாதியினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என எல்லாப் பிரிவு உடல் உழைப்பு தொழிலாளர் குடும்பங்களும் முன்னுரிமை அல்லாத வகைகளில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதால் இப்பகுதி மக்களின் உணவுஉரிமை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு நிலமில்லாத கிராமத் தொழிலா ளர்கள், பழங்குடிகள், மலைவாழ் மக்கள் குடும்பங்களின் குடும்ப அட்டைகள் அனைத்தையும் பிஎச்எச் வகைக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

### வசிப்பிடம் வழங்கும் பெருந்திட்டம் உருவாக்குக


நீர் தேக்கங்கள், நீர் வழிப்பாதைகள், வடிகால் கரைகள் சாலை யோரங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து, வீடுகள் கட்டியும், குடிசைகள் போட்டும் வசித்து வருகின்றனர். இதே இனங்களில் தனியார் கல்லூரிகள், மருத்துவமனைகள் நடத்தும் தனியார்களும் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இவைகள் அனைத்தும் அகற்றப்படுவது இயற்கை பேரிடர் காலங்களில் ஏற்படும் சேதாரங்களை தடுப்பதற்கு இன்றியமையாத் தேவை என்ற அரசின் கொள்கையினையும், நீதிமன்றத் தீர்ப்புகளையும் வரவேற்கிறோம். இதில் உடல்உழைப்பு மட்டுமே வாழ்க்கையின் ஒரே ஆதாரம் என்ற நிலையில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு மாற்று வீட்டு மனைநிலம் வழங்கி, வீடுகள் கட்டித்தருவது குடிமை சமூகத்தின் தவிர்க்க முடியாத கடமைப் பொறுப்பாகும். மேலும் கால வளர்ச்சியில் ஏற்பட்டு வரும் மாற்றங்களால் சில நீர் தேக்கங்கள், நீர் வழிப்பாதைகள் முற்றிலுமாக பயனற்று, எதிர்காலத்திலும் பயன்படுத்த முடியாத நிலையை எட்டியுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியாளர்கள் தலைமையில் வல்லுனர் குழுக்கள் அமைத்து ஆய்வு செய்து அதன் அடிப்படையில் தீர்வுகாண்பதும் தமிழ்நாட்டில் வசித்து வருவோர் அனைவருக்கும் வசிப்பிடம் வழங்குவதும் அவசியமாகும். இந்த முக்கியப் பிரச்சினையில் முதலமைச்சர் அவர்கள் நேரடியாக தலையிட்டு, தக்க ஆய்வு செய்து, தமிழ்நாட்டில் வாழும் குடிமக்க ளின் வசிப்பிடம் வழங்கும் ஒரு பெரும் திட்டம் உருவாக்கி செயல் படுத்த வேண்டும். இவ்வாறு முதல்வருக்கு அளித்த மனுவில் கூறப்பட்டுள்ளது.












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 11.12.2021 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



டி.ராஜா

# தேர்ந்தெடுக்கப்பட்ட எதேச்சதிகாரத்திலிருந்து பாசிச சர்வாதிகாரம் நோக்கி!

## நாடாளுமன்றத்தின் உள்ளும் - புறமும் செயல்வீரர்கள் தேவை!

**“மாண்பார்ந்த மக்களாட்சி முறைமையை போர்ப்படைத் தளபதிகள் பலியிடுவது இல்லை.**

ஆனால், அந்த முறைமை வழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களான – பிரதமர்கள், அதிபர்கள் – அந்த மக்களாட்சி முறைமையை சீர்குலைத்து, சிதைத்து விடுகிறார்கள். அத்தகைய தலைவர்களில் சிலர் (ஜெர்மனியின் நாடாளுமன்ற கட்டடமான ரெய்ச்ஸ்டாக் 1933இல் தீக்கிரையான சம்பவம் நிகழ்ந்த பின்னணியில், ஹிட்லர் செய்ததைப் போல்) மக்களாட்சி முறையை விரைவாக அழித்து விடுகிறார்கள். பெரும்பாலும் மக்களாட்சி முறையானது வெளிப்படையாக, ஆனால் மெல்ல மெல்ல அரித்து போகிறது” என்று ஸ்டீபன் லெவிட்ஸ்கி மற்றும் டேனியல் ஜிப்லட் கூறுகிறார்கள்.

இந்தியாவில் இன்று நிலவும் சூழலை அவர்களது இந்தக் கூற்று மிகப்பொருத்தமாக எடுத்துரைக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தலைமை சிற்பியான டாக்டர் அம்பேத்கர் கூறியபடி, நாடாளுமன்றம் தான் நமது தேசத்தின் உயர்மட்ட அமைப்பு ஆகும். தேசம் மற்றும் மக்களின் நலன் கருதி, பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், சட்டங்களை இயற்றுவதற்குமான தளமாக நாடாளுமன்றம் திகழ்கிறது. நல்ல நிர்வாகத்தை நாட்டிற்கு வழங்கிடவும், நாடாளுமன்றத்திற்கும் அதன்வழியாக மக்களுக்கும் பதிலளிக்கக் கூடிய பொறுபுடைத்தன்மை கொண்டதாக அரசாங்கம் மற்றும் அதிகார வர்க்கத்தை கட்டமைப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை நாடாளுமன்றம் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆட்சி அதிகாரத்தை ஆர்எஸ்எஸ் – பாஜக கைப்பற்றிய நாள் முதல், மக்களாட்சி முறையையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் அழித்து வருகிறது. நாடாளுமன்றம் தேவையற்ற ஒன்று என்பதை போல் மிகைப்படுத்தப் படுகிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் பாற்பட்ட அனைத்து மக்களாட்சி நடைமுறைகளையும் ஆளும் கட்சி எவ்வாறு குறைமதிப்பிற்கு உள்ளாக்கி வருகிறது என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து கடந்த ஓராண்டு காலமாக நீடித்த போராட்டத்தை விவசயிகள் எழுச்சியுடன் நடத்தினார்கள். இந்தச் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு எவ்வித விவாதங்களும் இன்றி நிறைவேற்றப் பட்டன. கேலிக்குரிய விஷயம் என்ன வென்றால், நாடாளுமன்றத்தில் எவ்வித விவாதங்களும் நடைபெறாமலேயே இந்தச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன. இந்த அரசாங்கத்தின் குறைபாடுகள் மற்றும் பேராபத்து நிறைந்த நோக்கங்களுக்கு எதி ரான சவால்களும், போராட்டங்களும் கடும் அடக்கு முறைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஊபா உள்ளிட்ட சட்டங்கள் இதற்காக கட்டவிழ்த்து விடப்படு கின்றன. இந்தப் போக்கு மக்களாட்சி முறைமைக்கு முற்றிலும் முரணானது ஆகும். நாடாளுமன்ற ஜனநாயக கட்டமைப்புக்குள், கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் கொள்கைகளை வகுத்திடும் தளமான நாடாளுமன்றம் இப்போது பழிவாங்கும் படலத்தைக் கண்டு வருகிறது. அதன் நீட்சியாக அண்மையில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 12 எம்பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள அவலத்தையும் நாம் பார்த்தோம்.

ஹிட்லரின் பாசிச ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்களில் இருந்து நாம் படிப்பினைகளைப் பெறவேண்டியது கட்டாயமாகும். இன்றைய இந்தியாவில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை ஜெர்மன் நாடாளுமன்ற கட்டடமான ரெய்ச்ஸ்டாக் தீக்கிரையான நிகழ்வோடு ஒப்புமை மேற்கொள்வது சற்று மிகைப்படுத்தப்பட்டதாக தோன்றக்கூடும். ஆனாலும், இரண்டிற்கும் அடிப்படையான ஆதாரம் ஒன்றே ஆகும் – மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் மக்களாட்சி முறைமையும், அமைப்புகளும் குறைமதிப்பிற்கு உள்ளாக்கப்படுவதே அந்த அடிப்படை ஆதாரம் ஆகும். எதேச்சதிகாரத்தை நோக்கிய ஆர்எஸ்எஸ் – பாஜக வின் நடவடிக்கைகள் படிப்படியானவை: வேகம் குறைந்தவை என்றபோதிலும் வெளிப்படையாக மேற்கொள்ளப்படுபவை ஆகும்.

நமது மக்களாட்சி முறையில் ஏற்பட்டுள்ள விரிசல்களை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோலாக, ஜெர்மன் நாடாளுமன்ற கட்ட டமான ரெய்ச்ஸ்டாக் தீக்கிரையாக்கப்பட்ட பிறகு வெய்மர் குடியரசுக்கு ஹிட்லர் முடிவு கட்டியதை நாம் சுருக்கமாகப் பார்க்க முடியும்.

1923 ஆம் ஆண்டில் முனிச் நகரில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் தோல்வியுற்று, நெஞ்சுரம் குன்றிய ஹிட்லர், சட்டப்படியான தேர்தல் வழிமுறைகளின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிட முயற்சிகளை மேற்கொண்டார். நாஜி கட்சிக்கு தலைமையேற்ற ஹிட்லர் தனது சொல்வன்மையால் கனல் தெறிக்கும் பேச்சாலும் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க தீவிரமாக உழைத்தார். 1928ஆம் ஆண்டில் உறுப்பினர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்தது. நாஜி கட்சியின் படைப்பிரிவின் வன்முறை வழிமுறைகளை நியாயம் என்று நிலைநாட்ட கடந்தகால நிகழ்வுகளைத் தோண்டித் துருவினார்; ஜெர்மனி அனுபவித்து வந்த துயரங்களுக்கு ‘நவம்பர் குற்றவாளிகள்’ தான் காரணம் என்று தனது உரைகளில் தொடர்ந்து குறிப்பிட்டார். வருங்காலத்தின் மீது அக்கறை கொள்ளாமல் கடந்த காலத்தை முன்னிலைப்படுத்துவதை செயல்திட்டமாக கொண்டிருந்த ஹிட்லர் வெர்சைல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட அரசியல் தலைவர்கள் மீது வசைமாரி பொழிந்தார்.

இந்தக் காலகட்டத்தில் நாஜி கட்சியின் வளர்ச்சி குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக இருந்தாலும், 1928ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் வெறும் 2.6 சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. 1920 மற்றும் 1930களில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை ஹிட்லருக்கு ஒரு மகத்தான வாய்ப்பாக அமைந்தது. வேலைவாய்ப்பின்மை காரணமாக ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பொருளாதாரம் நிலைகுலைந்தன. ஜெர்மனியில் மட்டும் சுமார் 60 லட்சம் நபர்கள் (அந்நாட்டு மக்கள் தொகையில் அது 30 சதவீதம்) வேலைவாய்ப்பின்றி தவித்தார்கள்.



**முதலாளித்துவ பொருளாதாரத்தின் பொதுவான அம்சங்களான பொருளாதார சரிவு, வேலைவாய்ப்பின்மை, வருங்காலம் பற்றிய நிச்சயமற்ற சூழல் ஆகியவை ஹிட்லருக்கு சாதகமாக அமைந்தது. அவரது சொல்வன்மையும், தீவிர நிலைப்பாடும் மக்களிடையே ஒரு பேசுபொருளாக பல்கிப் பெருகியது. ஹிட்லரின் மேலாதிக்கம் ஓங்கியது. இதர வலதுசாரி அணிகளோடு இணக்கம் கொண்டபோதும், 33 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. எனினும், ஹிட்லர் வேந்தர் பதவியை அடைந்திட நிலைத்தன்மையற்ற அரசியல் சூழல் ஏதுவாக அமைந்தது.**

1933ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று வெய்மர் அரசியலமைப்புச் சட்டத்தின்படி , அதிபர் பால் வான் ஹிண்டன்பர்க், ஹிட்லரை வேந்தர் பதவியில் நியமித்தார். அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஹிட்லர் வேந்தராகப் பொறுப்பேற்றதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹிட்லர் பொறுப்பேற்ற நான்கு வாரங்களுக்குள்ளாகவே, அவரது அதிகார பலத்தை பெருக்கி, எதிர்க்கட்சிகளை அழித்தொழிக்க வித்திட்டது. ரெய்ச்ஸ்டாக் கட்டடம் தீக்கிரையான சம்பவம்.

1933 ஆம் ஆண்டு பிப். 27ஆம் நாள் இரவு ஜெர்மனியின் நாடாளுமன்ற கட்டடம் தீப்பற்றி எரிந்தது. தீயணைப்பு வீரர்களின் பல மணி நேர போராட்டத்திற்கு பிறகு தீ அணைக்கப்பட்டது. போலீசார் ‘மாரினஸ் வென்டர் லுப்’ என்ற டச்சு கட்டட தொழிலாளரை கைது செய்தனர். நாஜிக்கள் அவரை ‘கம்யூனிஸ்ட் ஆதரவாளர்’ என்று முத்திரை குத்தினர். அதைத் தொடர்ந்து சுமார் 4000 நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் கம்யூனிஸ்ட்கள் என்பதால் சிறைக்குள் கடும் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்தச் சூழல் ஹிட்லருக்கு கடவுள் கொடுத்த வரமாக அமைந்தது.

பிப்ரவரி மாதம் 28ஆம் நாள் அதிபர் ஹிண்டன் பர்க் வெய்மர் அரசியலமைப்புச் சட்டத்தின் 48வது ஷரத்தை பிரயோகித்தார். மக்களையும், அரசையும் பாதுகாப்பதற்கான அதிபரின் ஆணையை அமைச்சரவை ஏற்றது.

பேச்சுரிமை, பொது இடங்களில் ஒன்று கூடும் உரிமை, ஆகியன இந்தச் சட்டப் பிரயோகத்தால் பறிக்கப்பட்டது. கடிதப் போக்குவரத்து இடை மறிக்கப்பட்டது. தொலைபேசி உரையாடல்கள் ரகசிய உளவுக்கு உள்ளாயின. கூட்டமைப்பில் இருந்த மாநிலங்களின் சுயாட்சி உரிமை இடைக் காலமாக நீக்கப்பட்டது.

1932ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி 17 சதவீதம் வாக்குகளைப் பெற்றது. எனவே, நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், கம்யூனிஸ்டுகள் இந்தச் சட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அன்று இரவு அரங்கேறிய நாடாளுமன்ற தீவைப்பு சம்பவத்தைக் காரணமாகக் கூறி, கம்யூனிஸ்டுகளை காலவரையின்றி காவலில் அடைத்து விட்டனர். நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட வெறுமை, நாஜிகளை தங்கள் மனம் போன போக்கில் செயல்பட உந்தித் தள்ளியது. சிவில் உரிமைகள் மற்றும் எதிர்க் கருத்துகளை அழித்தொழிக்கும் அவசர கால ஆணைகளை நியாயப்படுத்துவதற்காக ஹிட்லர் இந்த சம்பவத்தை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டார்: எதிர்ப்போர் அனைவரையும் அழித்தொழித்து இரண்டாம் உலகப்போர் முடியும் வரையிலும் தனது அதிகாரத்தை ஹிட்லர் பெருக்கிக் கொண்டே இருந்தார்.

நாஜிகள் அரசு அதிகாரத்தைத் திடீரென கைப்பற்றிய விதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஆர்எஸ்எஸ்–பாஜக அதிகார பீடத்தைக் கைப்பற்றியது பிரமிக்கத்தக்கதாக இருக்காது. இருப்பினும் இவ்விரு ஜனநாயக விரோத சித்தாந்தங்களுக்கு இடையே சில விசித்திரமான ஒத்த தன்மைகள் உள்ளன. நாடாளு மன் றம் உள்ளிட்ட விவாத அமைப்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவது அவற்றில் ஒன்றாகும். ஜெர்மனியில் நாடாளுமன்றம் தீக்கிரையானது. ஆனால், ஹிட்லரின் முடிவுக்குப் பின்னர் ஜனநாயக உணர்வு மீண்டும் செழித்தது. நமது தேசத்தில் பா.ஜ.க.– ஆர்.எஸ்.எஸ். செயல்பாடு மிகவும் நுட்பமானதாக இருக்கிறது. மக்களாட்சியின் அடித்தளங்களும், விவாத மனப்பான்மையும் மங்கி மறைந்து வரும் சூழலில், நாடாளுமன்றத்திற்கு ஒரு புதிய கட்டடம் எழுப்பப்படுகிறது.

சகிப்புத் தன்மைக்கும், மதச்சார்பற்ற ஜனநாயகத்திற்கும் மாற்றாக அரசின் அதிகாரப்பூர்வ தத்துவமாக இந்துத்துவாவை படிப்படியாக நிறுவுவது தற்செயலான நிகழ்வு அல்ல. திட்டமிட்டு நிறைவேற்றப்படும் சதிச்செயல் ஆகும். கிறிஸ்டோபர் ஜாஃப்ரெலெட் குறிப்பிட்டுள்ளபடி ஆர்எஸ்எஸ் அமைப்பு நாஜி கட்சியைப் போல் பல பிரயோகத்தால் அரசாங்கத்தை தகர்க்கும் அமைப்பு அல்ல. ஹிட்லர் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியது தவறு என்று கோல்வால்கர் கருதினார். கோல்வாக்கர் குறிப்பிட்டது பின்வருமாறு: “அரசியல் நோக்கத்திற்காகப் பலரும் பல சந்தர்ப்பங்களில் ஒன்று சேருவதை காணமுடிகிறது. ஆனால், அந்த நோக்கம் நிறைவேறாமல் தோல்வியுறும் போது ஒற்றுமை உருக்குலைந்து போய் விடுகிறது. தற்காலிகமான வெற்றிகள் நமக்கு தேவையில்லை: நிலைத்துநிற்கும் ஒற்றைத் தன்மையே நமது தேவை ஆகும்.” மனுதர்ம கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் மற்றும் சாதி, மத, பாலின கட்டிறுக்கத்தைத் தகவமைத்து தொடரச் செய்யும் ஹிந்து தேசியத்தின் மற்றொரு பெயர்தான் ‘நிலைத்து நிற்கும் ஒற்றை தன்மையாகும்‘

எண்ணிக்கை பெரும்பான்மையைக் கொண்டு நாடாளுமன்றத்தையும், மக்களாட்சி மரபுகளையும் அழித்தொழிப்பது – விவாதங்கள் மற்றும் எதிர் கருத்துக்களை முன்வைக்கும் பாரம்பரியத்தை தீக்கிரையாக்குவதாகும். பழுதுபட்ட ரெய்ச்ஸ்டாக் கட்டடம் புனரமைக்கப்பட்டது: ஆனால், மக்களாட்சி மாண்புகள் நசுக்கப்படுமாயின் மீண்டும் புதுப்பிப்பது மிகவும் கடினமாகும். தேச மக்கள் இந்த பேராபத்தை உணர வேண்டும்.

இந்த ஆண்டு இந்திய தேசத்தின் 75வது சுதந்திர தின ஆண்டு ஆகும். ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் கிளை அமைப்புகள் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்றபோதும், தங்களின் சதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சுதந்திர தினத்தைக் கொண்டாட முயற்சி செய்கிறார்கள். அரசியல் நிர்ணய சபையில் தனது முடிவுரையின் போது டாக்டர் அம்பேத்கர் விடுத்த எச்சரிக்கையை இங்கு நினைவு கூருவது பொருத்தமாக இருக்கும். “சுதந்திரம் பெற்றுவிட்டபடியால், இனிமேல் நடைபெறும் தவறுகளுக்கு ஆங்கிலேயர்களை நாம் இகழ்ந்துரைக்க முடியாது. இனிமேல் தவறுகள் நிகழும் பட்சத்தில், நாம் நம்மைத் தவிர வேறு எவரையும் இகழ்ந்துரைக்க முடியாது. தவறுகள் நடைபெறுவதற்கான மாபெரும் அபாயங்கள் இருக்கின்றன.”

சுதந்திர இந்தியா தற்போது பன்மடங்கு அபாயத்தை எதிர்கொண்டு வருகிறது. ‘மக்களாகிய நாம்‘ ஜனநாயக குடியரசை மீட்பதற்கு அணிவகுக்க வில்லை என்றால், நம்மில் எவரும் பாதுகாப்பாக வாழ்ந்திட முடியாது.

பாஸ்டர் மார்ட்டின் நிமோலர் வலியுறுத்திக் கூறியது பின்வருமாறு:

முதலில் அவர்கள் கம்யூனிஸ்ட்களை வேட்டையாட வந்தனர். நான் எதுவும் பேசவில்லை. ஏனெனில், நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல. பிறகு அவர்கள் சோசலிஸ்ட்டுகளை வேட்டையாட வந்தனர். நான் எதுவும் பேசவில்லை. ஏனெனில், நான் ஒரு சோசலிஸ்ட் அல்ல. பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளை வேட்டையாட வந்தனர். நான் எதுவும் பேசவில்லை. ஏனெனில், நான் ஒரு தொழிற்சங்கவாதி அல்ல.

பிறகு அவர்கள் யூதர்களை வேட்டையாட வந்தனர். நான் எதுவும் பேசவில்லை. ஏனெனில், நான் ஒரு யூதன் அல்ல.

இறுதியாக, அவர்கள் என்னை வேட்டையாட வந்தனர். அப்போது, எனக்காகப் பரிந்து பேச ஒருவருமே இல்லை.

தமிழில்: **அருண் அசோகன்**

கார்ட்டூன்




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.